விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

33°c - 25°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 92 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 14, வெள்ளிக்கிழமை 26.02.2016

## ஜோசிதவுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு,பெப்.26
சீ.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர் பில்

பக். 26

## நன்கு திட்டமிட்டு தாஜுதீன் கொலை

### சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறு சி.ஐ.டியினருக்கு நீதிமன்று அதிரடி உத்தரவு



கொழும்பு, பெப்ரவரி 26
பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் சாவு திட்டமிட்ட கொலையென கொழும்பு மேலதிக நீதிவான் நீதி மன்றம் நேற்று அறிவித்துள்ளது. அத்துடன், இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடன் கைதுசெய்யுமாறும் குற்றப்புலனாய்வுப் பிரி வினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாஜுதீனின் சாவு தொடர்பான விசாரணை நேற்றுக் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் எடுத் துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் நிஷாந்த பீரிஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னாள் சட்டவைத்திய அதிகாரி பக். 22

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை கட்டுக்கதை

### இப்படிக்கூறுகிறது பரணகம ஆணைக்குழு

கொழும்பு, பெப். 26
இறுதிப் போர் தொடர்பில் ஆராய்வதற்கு ஐ.நா. பொதுச் செயலாளரினால் நியமிக்கப் பட்ட நிபுணர் குழுவின் அறிக் கையில் கூறப்பட்டுள்ள தக வல்கள் உண்மைக்குப் புறம் பானவை என காணாமற் போனோர் விசாரணைகளை மேற்கொள்ளும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணை களின் இடைக்கால அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற இறுதிக் கட்டப் போரின் பக். 23

## தொடரும் உணவுத் தவிர்ப்பு; கைதிகளில் மூவர் மயக்கம்

யாழ்ப்பாணம், பெப். 26
மகசின் சிறையிலுள்ள கைதி கள் உணவுத் தவிர்ப்பில் ஈடு பட்டுவரும் நிலையில், அவர் களில் 3 பேர் நேற்று மயக்க முற்றுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த மூன்று அர சியல் கைதிகளும் சிறைச் சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத் துடன், ஏனையவர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள தாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

தம்மை விடுதலை செய்வதற் குரிய நடவடிக்கை களை எடுக்கு பக். 26

## பட்டதாரிகளை அரச சேவைகளில் ஆள்சேர்ப்பதற்கு போட்டிப் பரீட்சை

### பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இனிவரும்.காலங்களில் நியமனம்

கொழும்பு, பெப்.26
இனிவரும் காலங்களில் அரச சேவைகளில் பட்டதாரிகள் போட் டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரம் ஆள் சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என அரசு அறிவித்துள்ளது.

நவீன சவால்களுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் அரச சேவையை பேணுவதற்குத் தேவையான விடய அறிவு, தேர்ச்சி என்பவற் றைக் கொண்ட பட்டதாரிகளை போட்டிப் பரீட்சையின் பெறுபேறு களின் அடிப்படையில் மாத்திரம் ஆள்சேர்ப்புச் செய்வதற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

இது தொடர்பில் நிதி பக். 26

## போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டம் நேற்று சபைக்கு

### சமர்ப்பித்தார் அமைச்சர் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், பெப். 26
வடக்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபையை உருவாக்கு வதற்கான நியதிச் சட்டம், நேற் றைய தினம் முதலாவது வாசிப் புக்காக வடக்கு மாகாண சபை யில் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

இந்த நியதிச் சட்டம், தகவல் அறி யும் உரிமைச் சட்டம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனின் தனி நபர் சட்ட வரைவு பக். 26

## மின் தடையால் நேற்று நாடு முழுவதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26
நாடு முழுவதும் நேற்று பிற்பகல் 2 மணித்தியாலங்கள் மின் தடை ஏற்பட்டதால் பொதுமக்கள் பல் வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டதுடன் அரச மற்றும் தனி யார் அலுவலகப் பணிகளும் செய லிழந்தன.

லக்சபான தேசிய மின் வழங்க லில் ஏற்பட்ட தடையே அதற்குக் காரணம் என்றும், வடக்கில் பிரச் சினை இருந்ததாகத் தெரிய வில்லை என்றும் யாழ்.பிரதேச மின்சார சபைத் தகவல்கள் தெரி வித்தன.

ஏற்கனவே, சில நாள்களாக வெப்பநிலை அதி கரித்த நிலையில் பக். 26



## அமைச்சரானார் பீல்ட் மார்ஷல்

கொழும்பு, பெப். 26
ஐக்கிய தேசிய முன்னணி யின் தேசியப் பட்டியல் நாடா பக். 26

## அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களினால் அமளிதுமளி

யாழ்ப்பாணம், பெப். 26
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதி ரான ஊழல் குற்றச்சாட்டுக்களினால் வடக்கு மாகாண சபையில் நேற்று அமளிதுமளி ஏற்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்கு எதிராகக் கடந்த அமர் வில் பதினொரு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நிறைவேற் றப்பட்ட பிரேரணையை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் எனக் கோரும் பிரேரணை முதலமைச்சரினால் சம ர்ப்பிக்கப்பட்டது. இதனாலேயே சபையில் பக். 22

## பாலியல் குற்றம் புரிந்தோருக்கு அதியுச்ச தண்டனை வேண்டும்

### முல்லைத்தீவு பெண்கள் அமைப்பு மனு

முல்லைத்தீவு. பெப். 26
பாலியல் வன்புணர்வின் பின் னர் சிறுவர்கள், பெண்களைக் கொலைசெய்யும் காமுகர்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்கும் பொருட்டு, இலங்கை தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்று தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அமைப்பினரால் முல்லைத்தீவு மாவட்ட அரச அதி பக். 26

முச்சந்தி முரளி



அப்ப பெரிய தலைகள் கைதாவினம் போல...

## வவுனியா மாணவியின் கொலையை கண்டிக்காத வட மாகாண சபை

யாழ்ப்பாணம், பெப். 26
வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாண விக்கு இருநிமிட அஞ்சலியின் பின்னர் சபை அமர்வை ஆரம் பித்த வடக்கு மாகாணசபை, வவுனியாவில் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட மாண விக்கு நேற்றைய தினம் சபை அமர்வில் அஞ்சலி செலுத்த வில்லை.

அத்துடன் குறித்த படுகொலை தொடர்பில் கண்டனமும் தெரி விக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபையின் அமர்வு பக். 23

## மனைவி கொடூரமாகக் கொலை; கணவனுக்குச் சாவுத் தண்டனை

### யாழ்.மேல்நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம். பெப். 26
மனைவியை நிர்வாணமாக்கிக் கோடரியால் கழுத்தில் வெட்டியும் தலையில் தாறுமாறாகக் கொத் தியும் படுகொலை செய்த. கண வனுக்கு யாழ்.மேல்நீதி மன்று நேற்றுச் சாவுத் தண்டனை விதி த்துத் தீர்ப்பளித்துள்ளது.

திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியில் சிவசீலன் ஜெயசுதா என்ற பெண் கொடூ ரமாக வெட்டிக் பக். 22

## மாணவி கொலைக்கு நீதி கோரி யாழ். பல்கலையில் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 26
எங்கள் இனத்தை அழிக்க வந்த காட்டேறிகளை நசுக்கி எறிய வேண்டும்.சட்டங்கள் இறுக்கமாக்கப் படவேண்டும். மக்கள் முடிவெடுக்கும் பட்சத்தில் சட் டத்தை மீறவும் தலைப்படுவார்கள். எனவே பாதிக் கப்பட்டவர்களுக்கு உடனடியான நீதியும், தீர்வும் வழங்கப்படவேண்டும் பக். 22

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஐங்கரநேசனுக்கு ஆதரவளிக்கும் முதலமைச்சரின் பிரேரணை 'அவுட்'

யாழ்ப்பாணம், பெப்.26

அமைச்சர் ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சபைப் பதிவேடுகளை நீக்குமாறு கோரி முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சமர்பித்த பிரேரணைக்கு, பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு வழங்காமையால், அந்தப் பிரேரணை நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மாகாணசபையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக பதினொரு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரும் பிரே ரணை நிறைவேற்றப்பட்டிருந்தது.

அந்தப் பிரேரணை தொடர்பில் எழு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அந்தப் பிரேரணை மற்றும் அதனுடன் தொடர்புடைய விவாதங்களை சபைக் குறிப்பிலிருந்த நீக்க வேண்டும் எனக் கோரி, வடக்கு மாகாண முதலமைச்சரிடம் ஆளும் கட்சியின் எட்டு உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றைக் கையளித்திருந் தனர்.

அதற்கு அமைவாக, வடக்கு மாகாண முதலமைச்சரினால் மேற்படி உறுப்பினர்களின் கோரிக்கையை உள்ளடக்கிய பிரேரணை சபை அமர்வில் நேற்றுச் சமர்பிக்கப்பட்டது. முதலமைச்சரினால் சமர்பிக்கப்பட்ட பிரேரணை மீது ஆளும் கட்சி உறுப்பினர்களான கே.சயந்தன், க.சர்வேஸ்வரன், பசுபதிப்பிள்ளை, லிங்கநாதன், அஸ்மின், க.சிவநேசன், அ.பரம்சோதி, ச.சுகிர்தன், ம.அன்ரனி ஜெகநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், எம்.பி.நடராஜ், எதிர்கட்சி உறுப்பினர் தவநாதன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

இவர்களில் க.சர்வேஸ்வரன், பசுபதிப்பிள்ளை, சிவநேசன், அன்ரனி ஜெகநாதன், சிவாஜிலிங்கம், நடராஜ் ஆகியோர் அன்றைய தினம் பிரேரணை கொண்டு வரப்பட்ட முறைமை தவறு என்றும், அதை எடுத்துக் கொண்ட விதம் தவறு என்றும் குறிப்பிட்டனர். ஆளும் கட்சி உறுப்பினரான க.சிவநேசன் மாத்திரமே அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். ஏனைய உறுப்பினர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது என்ற கருத்தை வலியுறுத்தினர். இதனால் இறுதியில், அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிக்க, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அதனை ஏற்றுக் கொண்டார். (ற-5)

## விசாரணைகளை நடத்தத் தவறினால் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு செல்வேன்

### வடக்கு உறுப்பினர் லிங்கநாதன் மிரட்டல்

யாழ்ப்பாணம், பெப். 26

நான் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒரு மாத காலத்தினுள் விசாரணை நடத்தப்பட வேண்டும். இங்கு விசாரணை நடத்த தவறினால் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு எடுத்துச் செல்வேன். விசாரணை நடத்துவதற்கு ஏன் பயப்படுகின்றீர்கள். விசாரணையின் அடிப்படையில் அமைச்சரில் தவறில்லை என்றால், என்மீது கட்சி நடவடிக்கை எடுக்கலாம். நான் இந்த அரசியலை விட்டே ஒதுங்கிப் போய்விடுகின்றேன். - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக பதினொரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அது தொடர்பில் முதலமைச்சர் விசாரணை செய்ய வேண்டும் என்ற பிரேரணை ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணையை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரும் முதலமைச்சரின் பிரேரணை மீதான விவாதத்திலேயே லிங்கநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நான் கடந்த அமர்வில் பிரேரணை கொண்டு வரும் போது முதலமைச்சர் சபையில்தான் இருந்தார். பிரேரணை தொடர்பில் விவசாய அமைச்சருக்காக அவைத் தலைவருடனும் முரண்பட்டிருந்தார். நான் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், ஆளுநரிடமோ, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடமோ, ஜனாதிபதி ஆணைக்குழுவிடமோ சென்றிருக்கமுடியும். ஆனால்மாகாண சபையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே இங்கு கொண்டு வந்தேன்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துங்கள். விசாரணை நடத்துவதற்கு ஏன் பயப்படுகின்றீர்கள். இன்னும் ஒரு மாத காலத்தினுள் விசாரணை நடத்தாவிட்டால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கொண்டு செல்வேன். அமைச்சர் மீது குற்றச்சாட்டு இல்லை என்றால், என் மீது நடவடிக்கை எடுங்கள். கட்சி நடவடிக்கை எடுக்கலாம். நான் மாகாணசபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகின்றேன்- ஏன் அரசியலிருந்தே ஒதுங்குகின்றேன்.

முதலமைச்சர், விசாரணை செய்யாமல் முழங்காவிலில் நின்று கொண்டு, அவர் பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சமாட்டார் என்று சொல்கின்றார். என்ன ஐயா?. நீங்கள் ஒரு நீதிபதி. நீங்கள் எவ்வாறு ஒரு தலைப்பட்சமாக முழங்காவிலில் நின்று இப்படிப் பேசுவீர்கள். அவர் ஒரு தவறும் செய்யவில்லை. காய்த்த மரத்துக்குத்தான் கல்லெறி விழும் என்றீர்கள். நீங்கள் மனச்சாட்சிப்படி யோசியுங் கள். எங்களுக்குப் பதில் சொல்ல வேண்டாம். நீதியரசராக மனச் சாட்சிப்படி ஆண்டவன் சாட்சியாகப் பதில் சொல்லுங்கள் - என்றார்.

அமைச்சர் ஐங்கரநேசன் கருத்துத் தெரிவிக்கையில், உண்மை ஊரைச்சுற்றி வருவதற்குள் பொய் ஆயிரம் தடவை சுற்றி வந்து விடும் என்று சொல்வார்கள். இதனால் பாதிக்கப்பட்டது நான். உண்மையைக் கண்டறிய விசாரணை நடத்துங்கள். நான் எந்த விசாரணையையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றேன் - என்றார். (ற-5)

## ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் விசாரணை நடத்துவதற்குத் தயார்

### அமைச்சர் ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டு குறித்து வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

அமைச்சர் ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்கள் சமர்பிக்கப்பட்டால் அது தொடர்பில் விசாரணை நடத்தத் தயார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அத்துடன் கடந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மற்றும் அதனுடன்தொடர்புடையவிடயங்களை சபைப் பதிவேட்டி லிருந்து நீக்காவிட்டாலும் பிரச்சினையில்லை என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர் விலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மாகாண சபை அமர்வு நேற்றுக் காலை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது. இதன் போது அவைத் தலைவர், தகவல் அறியும் சட்டம்மூலம் தொடர்பில் பிரஸ்தாபித்தபோது, எழுந்த முதலமைச்சர், உறுப்பினர்கள் எட்டுப் பேர் கையெழுத்திட்டு தனக்கு அனுப்பி வைத்த கடிதம் தொடர்பில் சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு விட்டுப் பேசத் தொடங்கினார்.

**தவறாக நடந்த சபை அமர்வு**

அந்தக் கடிதத்தில் உறுப்பினர்கள் 7 விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தனர். அதனை முதலமைச்சர் சபைக்குத் தெரியப்படுத்தினார். அதன் பின்னர், இந்தக் கடிதத்தின் ஊடாக, அன்று பலதவறான நடவடிக்கைகளில் சபை ஈடுபட்டிருந்தது என்பது தெரியவருகின்றது. பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையை முன்வைப்பதாகக் கூறி விவசாய அமைச்சர் மீது சேறு பூச முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஒழுங்குப்பத்திரத்தில் இடம் பெறாத பிரேரணையை விசாரிக்க மன்றில் இடமளித்தமை, உறுப்பினர் களின் சிறப்புரிமை, பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்று கூறியிருந்தும் கேட்கப்பட்ட கேள் விகளில் எவ்விதமான சிறப்புரிமை சம்பந்தமான விடயங்களும் இல்லாமல் இருந்தமை, விவரங்கள் எதுவும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படாமல் திடீரென்று பொது முக்கியத்துவம் அற்ற சிறப்புரிமை சம்பந்தப்படாத விடயம் விவாதிக்க அனுமதிக்கப்பட்டமை, பிரேரணை என்றுகொண்டு வரப்படாமல் அவை முடியும் போது பிரேரணையாக மாற்றியமை.

**கரவாக பிரேரணை வந்தது**

பக்கச் சார்பாக அவைத் தலைவர் கூட்டத்தில் நடந்து கொண்டமை, உறுப்பினர்களைப் போக விட்டு இறுதி நேரத்தில் பிரேரணை என்று மாற்றப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றியதாக கூறியமை. சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் பதில் கோரப்படாமலும், அதற்கு நேரம் ஒதுக்காமலும் விட்டமை. ஆளும் கட்சிக் கூட்டத்தில் இது பற்றிப் பேசாமல் கரவாக இந்த விடயம் இங்கு கொண்டு வரப்பட்டமை.

இவை யாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால் திட் மிட்டே உள்நோக்கத்துடன், பிரேரணையாகக் கொண்டுவரப்படாமலே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டிருக்கின்றது. இயற்கை நீதியின் அடிப்படையில் ஒரு குற்றச்சாட்டுக்குப் பதில் பெறப்பட வேண்டும். அந்தப் பதில் பெற முடியாவிட்டால் தான் விசாரணை நடத்த வேண்டும். இங்கு குற்றச்சாட்டுக்கள் என்று முன்வைக்கப்பட்டவை குற்றச்சாட்டுக்களே இல்லை.

**ஆதாரங்கள் தாருங்கள்**

இருப்பினும் அமைச்சர் ஐங்கரநேசன் மீது தெரி விக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரிடம் நான் பதில் கோரியிருந்தேன். அவர் பொறுப்பான பதில் வழங்கியுள்ளார். அதனை நான் இங்கு வாசிக்க வேண்டிய தேவையில்லை. பிழையான விதத்தில் சேறும் பூசும் விதமாக கரவாக கொண்டு வரப்பட்ட பிரேரணை மற்றும் அதனுடன் தொடர்புடைய விவாதங்கள் அனைத்தையும் சபைப் பதிவேட்டிலிருந்து (ஹன்சாட்டில்) நீக்க வேண்டும் என்று கோருகின்றேன். இது தொடர்பில் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கலாம் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

இதன் பின்னர் உறுப்பினர்கள் பலர், அன்று கொண்டு வரப்பட்ட முறைமை தவறானதாக இருக்கலாம். அதேபோன்றுதான் இன்று கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையும் இருக்கின்றது. கொண்டு வரப்பட்டதை நீக்க முடியாது என்று கருத்துக்களைத் தெரிவித்தனர். இறுதியில் பதிலளித்த முதலமைச்சர், சபைக் குறிப்பிலிருந்து நீக்காவிட்டால் பிரச்சினையில்லை. ஆனால் அமைச்சர் ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டுக் களுக்கு ஆதா ரங்கள் முன்வைத்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தத் தயார் என்று தெரிவித்தார். (ற-5)

## ஆளும் கட்சி மோதலால் வெளிவந்த 'உள்குத்துகள்'

சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனை, சுன்னாகம் மின்உற்பத்தியுடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்று 2 பெட்டிகள் நிறைந்த பணத்துடன் வந்து சந்தித்தார்களா? என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் கேட்க, அதற்கு இல்லை என்று அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மறுத்தார். அவ்வாறு யாரும் சந்திக்கவில்லை. சந்திப்பத்றகும் நேரம் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். இதன் போது அஸ்மின், இந்த விடயத்தை அமைச்சர் ஐங்கரநேசன்தான் தனக்குத் தெரிவித்தார் என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் வீடு தேடி வந்து கடிதத்தில் கையெழுத்து வாங்கினார் என்று மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான க.சிவநேசன் தெரிவித்தார்.

இதன் போது அஸ்மின் என்ன கடிதத்தில் கையெழுத்து வாங்கினேன் என்பதை சிவநேசன் சபையில் தெரிவிக்க வேண்டும் என்றார். இதற்கு சிவநேசன், தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்துக்கு முதலமைச்சர் போகக்கூடாது என்ற கடிதத்தில்தான் கையெழுத்து வாங்கினார்கள் என்று தெரிவித்ததுடன், ஆளும் கட்சிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னராக ஏன் யு.எஸ். ஹொட்டலில் வந்து சந்திக்கச் சொல்கின்றீர்கள் என்றார்.

இதற்குப் பதில் தெரிவித்த அஸ்மின், கட்சி சார்பான விடயங் களை எங்கு வேண்டுமானாலும் பேசலாம் என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் பிரிந்து நிற்பது வேதனையளிக்கின்றது

## வடக்கு அவைத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம், பெப். 26

நாம் பிரிந்து நிற்பது வேதனையாக இருக் கின்றது. மகிந்த ராஜபக்சவால் முடியாதது இங்கு நடக்குமோ என்று பயமாக இருக்கின்றது. நாங்கள் பெப்பரவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் எப்படி இருந்தோமோ அப் படி இருக்க வேண்டும் - இவ்வாறு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் முதலமைச்சர் கொண்டு வந்த பிரேரணை மீதான விவாதத்தின் இறுதியிலேயே அவைத் தலைவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

கூட்டமைப்பின் பிளவு இருப்பதாக, அமெரிக்காவின் துணைத் தூதுவர் என்னிடம் கேட்டார். அவ்வாறு எதுவும் இல்லை என்று அவரிடம் தெரிவித்தேன். இங்கேயும் அத னையே சொல்கின்றேன்.

சபை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன் பதாக சபை அலுவல்கள் குழுக் கூட்டம் நடை பெறுகின்றது. அதில் கடந்த அமர்வில் எடுக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் ஆராயப்பட்டது. அதன் பின்னர் அன்றைய தினம் சபையில் எடுக்கப்படும் போது எல்லோரும் ஏற்றுக் கொண்டுதானே விவாதித்தீர்கள். இப்போது ஏன் அதனை மறுக்கின்றீர்கள். நடைமுறைப் பிறழ்வு என்று எல்லாம் ஏன் சொல்கின்றீர்கள். அன்று இங்கு இருந்து நீங்கள் எல்லோரும்தானே அந்தப் பிரேரணையைப்பற்றி கதைத்தீர்கள். அந்தப் பிரேரணை முழுமையான சட்டபூர்வமான பிரேரணை. அது நிறைவேற்றப்படும் போது சபையில் கோரம் இருந்தது.

அந்தப் பிரேரணை சபைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு செய்வதும் பொருத்தமான நடவடிக்கை அல்ல. மகிந்த ராஜ பக்சவால் முடியாதது இங்கு நடக்குமோ என்று பயமாக இருக்கின்றது. நாங்கள் பிரிந்து நின்று போராடுவது நல்லதல்ல. இத்தோடு இந்த விடயத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். நான் அன்றைய பிரேரணை தொடர்பில் முதலமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில், குற்றச்சாட்டு என்று எதுவும் சொல்லவில்லை. அத்துடன் கோரிக்கை என்றுதான் குறிப்பிட்டிருந்தேன்.

முதலமைச்சர் அந்தப் பிரேரணை தொடர்பில் விசாரிக்கலாம். விசாரிக்காமலும் விடலாம். அந்த விசாரணையின் அறிக்கையை கோர மாட்டேன். யாரையும் கோரவும் விடமாட்டேன்.

சீதை தீக்குளிக்கத்தான் வேண்டும் என்றால் தீக்குளிக்கட்டும், இராமன் அதைப் பார்க்கத்தான் வேண்டும் என்றால் பார்க்கட்டும், கம்பன் அதை எழுதத்தான் வேண்டும் என்றால் எழுதட்டும். இது முதலமைச்சருக்குப் புரியும் என்றார். இதன் போது ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், யார் அனுமான் என்று கேட்க, அமைச்சர் டெனீஸ்வரன் இங்க நிறைய அனுமன் இருக்கின்றன என்று சொல்ல சபையில் சிரிப்பொலி எழுந்தது. அத்துடன் அவைத் தலைவர் முதலமைச்சரை நாம் நம்புவோமாக என்று கூறி விடயத்தை முடிவுறுத்தினார். (ந-5)

# யோசிதவுக்கு மகிந்தவைப் போன்று ஐங்கரநேசனுக்கு விக்னேஸ்வரன்

## வடக்கு உறுப்பினர் சயந்தன் கூறுகின்றார்

யோசித ராஜபக்சவுக்காக, மகிந்த சட்டத்தரணிக் 'கோர்ட்' போட்டதைப் போன்று வடக்கு மாகாண விவசாய அமைச்சருக்காக முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சட்டத்தரணிக் 'கோர்ட்' போட் டுள்ளார் என்று வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராக கடந்த அமர்வில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விடயங்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கோரி முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யோசித ராஜபக்சவுக்காக, மகிந்த ராஜபக்ச சட்டத்தரணிக் 'கோர்ட்' அணிந்ததாக அண்மையில் பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்தேன். எங்களுடைய முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், இன்றைக்கு ஒரு சட்டத் தரணியாக விவசாய அமைச்சர் ஐங்கர நேசனுக்காக எதிர்வாதம் செய்து அவரைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது எனக்கு வியப்பைக் கொடுக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இதன் போது குறுக்கிட்ட முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், குற்றச்சாட்டுக்கள் இல்லை என்று நான் கூறுகின்றேன். அப்படியிருக்கையில் நான் அவருக்கு சட்டத்தரணி என்று சொல்வது பிழையானது என்றார்.

மீண்டும் தொடர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன், குற்றச்சாட்டுக்கள் குற்றச்சாட்டுக்களா இல்லையா என்பது தொடர்பில் எதிர்வாதம் செய்வதுதானே சட்டத்தரணியின் வேலை என்றார். (ந-5)

**தவறிவிட்டது**

M. சுபாகர் ஆகிய எனது I.C (842942853V) மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியன அடங்கிய பர்ஸ் தவறிவிட்டது.

தொடர்பு: 077 6545 116 (69600) (10.17)

**கணக்காளர் (கணக்குப்பிள்ளை) தேவை**

இலங்கையில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு, வவுனியா மற்றும் கிளிநொச்சி கிளை அலுவலகங்களுக்கு அனுபவம் வாய்ந்த கணக்காளர் (கணக்குப் பிள்ளை) தேவை. விசேடமாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தொழில் புரியவேண்டும்.

தொடர்பு:-
077 304 3790.

**Majestic** Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021- 2227712

facebook CeylonTheatres

www.ceylontheatres.lk

# கலைப்பீட மாணவருக்கு ஆடைக் கட்டுப்பாடுகள்

## ஆராயப்படுகின்றது என்கிறார் யாழ். பல்கலை. கலைப் பீடாதிபதி

யாழ்ப்பாணம்.பெப்.26

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கு ஆடைக் கட்டுப்பாடு கொண்டு வருவது பற்றி ஆராய்வதாகவும், எனினும் பீட மட்டத்தில் எதுவித முடிவுகளும் இதுவரையும் எடுக்கப்படவில்லையெனவும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் தெரிவித்துள்ளார்.

இன்று 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையிலே புதிய ஆடை ஒழுங்குவிதிகள் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் ஆண் கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆண் மாணவர்கள், விரிவுரை மண்டபங்களுக்கு டெனிம் ஜீன்ஸ் மற்றும் ரீ-சேட் அணிந்து வருவது மற்றும் தாடியுடன் விரிவுரைகளுக்குச் சமுகமளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், பெண் மாணவிகள் மற்றும் பெண் கல்விசார் ஊழியர்கள், ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சேலை அணிந்து விரிவுரைகளுக்கு வர வேண்டும் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

இந்த விடயம் பேரவைக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் ஆடைக் கட்டுப்பாடு தொடர்பில் தனித்து மாணவர்களின் கருத்தறியும் செயன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

இந்தத் தீர்மாணம் தனித்து கலைப்பீட மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் மத்தியில் எமது கலை கலாசாரங்களைப் பின்பற்றவேண்டும். அவற்றைப் பேச்சளவில் மாத்திரம் வைத்துக் கொள்ளாமல் நடைமுறை ரீதியிலும் செய்து காட்டி முன்மாதிரியாக நடந்து கொள்ளவேண்டும்.

இதனை ஆடைக் கட்டுப்பாடு என்பதற்கப்பால், எம்மைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற வகையிலே கட்டுப்பாடான சில ஆடை அணிதல் முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டே இது மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் பேரவைக் கூட்டங்களிலும் பேசப்பட்டிருக்கின்றது. எங்களுடைய தீர்மான முன்மொழிவை அங்கே தெரியப்படுத்தியிருந்தோம்.

உண்மையில் இந்த விடயங்கள் பீட மட்டத்தில் கூடத் தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஆடை அணிதல் என்பது எமது கலாசாரம் பற்றியதான உள்வாங்கலாக-எம்முள் இயைபாக்கமடைந்த உடை அணிதல் தொடர்பான நடைமுறைப்படுத்தலாகவே பார்க்கப்பட வேண்டிய விடயம்.

அதற்கப்பால் வெளியே இருந்து புதிய கட்டுப்பாடுகளை நாங்கள் கொண்டுவர எத்தனிக்கவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் மாணவர்களும் தங்களது சாதகமான பாதகமான கருத்துக்களைச் சொல்லி வருகின்றனர். நல்ல விடயங்களைச் செய்வதில் கருத்தறிவதிலும் அதில் உடன்பாடு கண்டு நமக்குரித்தான விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலும் தப்பிருப்பதாகத் தெரியவில்லை.

இது தொடர்பில் மாணவர்களின் கருத்தறியும் விடயங்களை நாங்கள் செய்கின்றோம். நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றார். (த-வ-4-ரி2)

**தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக பராமரிப்பாளர் தேவை (ஆண்/பெண்) யாழ் நகரில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 806 1412 (69591) (10.17)

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 466
சீட்டிழுப்பு திகதி 2016.02.25

வெற்றி இலக்கங்கள்
50 54 60 64 Y

ரூ. 44,511,140/=

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1240
சீட்டிழுப்பு திகதி 2016.02.25

வெற்றி இலக்கங்கள்
02 17 20 48 U

ரூ. 10,749,520/=

**தொழிற் பயிற்சிகள்**

- ★ Mobile Phone Repairing
- ★ Air Conditioning
- ★ Electronics சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்

29.02.2016 கிழமை நாள்கள் 9am
27.02.2016 சனி, ஞாயிறு 4.30 pm
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்
விவரங்களிற்கு.

Jaffna Technical Institute (69447) (12.19.28)

23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 077 824 9949

கிளை: New Asian Center 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 077 651 0134

**இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான அறிவித்தல்**

இராமநாதன் நுண்கலைக்கழக நடனம் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 29.02.2016 ஆம் திகதி ஆரம்ப மாகின்றது.

பதிவாளர்,
யாழ். பல்கலைக் கழகம்
20.02.2016 (C/29530)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 124 மாணவர்களுக்கு தொழிற்சான்றிதழ்கள்

### வவுனியாவில் வழங்கப்பட்டன

வவுனியா,பெப்.26

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் வவுனியாவில் 124 மாணவர்களுக்கு சர்வதேச தரத்திலான தொழிற் சான்றிதழ்கள் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் வழங்கப்பட்டன.

தொழிற் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 124 மாணவர்களுக்கே குறித்த சர்வதேச தரத்திலான தொழிற் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக் கல்வியை விட்டு விலகியவர்கள், தொழில் சார் அனுபவமும் தேர்ச்சியும் இருந்தும் சான்றிதழ் இல்லாதவர்கள், தனியாக தொழில் தொடங்க வசதி இல்லாதவர்கள், தொழில் இருந்தும் பதவி உயர்வுக்கான சான்றிதழ் இல்லாதவர்களுக்கு பயிற்சிகளுடன் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் எஸ்.பாஸ்கரன் மற்றும் உதவிப் பணிப்பாளர் கலாநிதி. ஏ.யு.சி.அத்துகோரல, வவுனியா மாவட்ட உதவிச் செயலாளர் கமலதாசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ற-ஐ-21)

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளில் 12 பேர் இன்று இலங்கை திரும்புகின்றனர்

### ஊக்குவிப்புப் பணமும் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.26

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளில் 12 பேர் திருச்சியிலிருந்து இன்று இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் 94 அமெரிக்க டொலரும், ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் மேலதிகமாக 75 அமெரிக்க டொலரும் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் ஒருங்கிணைப்புடன் இலங்கை தமிழ் அகதிகள் 12 பேரும், தமிழ்நாட்டிலிருந்து இன்று இலங்கை வருகின்றனர். அவர்கள் திருச்சியிலிருந்து இலங்கை விமான சேவையூடாக முற்பகல் 10.20 மணியளவில் வர உள்ளனர்.

அந்தப் 12 பேரில் 6 ஆண்களும் 6 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகின்றனர்.

இவர்கள் இலங்கையை வந்தடைவதற்கு இலவசமான விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் வழங்கப்படும்.

அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்புக்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலரும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலரும், உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 75 அமெரிக்க டொலரும் வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதனின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இலங்கை விமானசேவை நிறுவனமும் அவர்களது பயணப் பொதியின் அளவை 40 கிலோ கிராமிலிருந்து 60 கிலோ கிராமுக்கு ஏற்கனவே அதிகரித்துள்ளது.

2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 4 ஆயிரத்து 629 இலங்கை தமிழ் அகதிகள் (1,673 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இந்தியாவில் 64 ஆயிரம் பேர் 109 முகாம்களில் உள்ளனர். மொத்தமாக ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் உள்ளனர் என்று அறியப்பட்டுள்ளது.

மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் சுவாமிநாதன் சமர்ப்பித்துள்ளார். தற்பொழுது தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் விரிவான கருத்திட்ட முன்மொழிவுகளை அனுமதிப்பது தொடர்பான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்துக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்துடன் அமைச்சு வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடுகளை வழங்குமாறு, ஆள்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

## கிராம அலுவலரைக் கடத்திய ஐவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,பெப்.26

கடமைக்குச் சென்ற பெண் கிராம அலுவலரைக் கடத்திய ஐவரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றும் பெண் கிராம அலுவலர், தனது சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளையில் அவரது அலுவலகத்தை அண்டிய பகுதியில் வைத்து சகோதரனைத் தாக்கிக் காயப்படுத்தி விட்டு கிராம அலுவலரை வாகனத்தில் கடத்திச் சென்றிருந்தனர்.

பொதுமக்கள் மற்றும் பொலிஸாரின் துரித முயற்சியால் கடத்தப்பட்ட இரு மணி நேரத்தில் முல்லைத்தீவு-புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்து வாகனத்தை மறித்த முல்லைத்தீவுப் பொலிஸார் கிராம அலுவலரை மீட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்த்ததுடன் வாகனத்தில் காணப்பட்ட மூவரையும் கைது செய்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்த மூவரையும் மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அடையாள அணிவகுப்பை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மறுநாள் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்த பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் இவர்களையும் அடையாள அணிவகுப்பில் இணைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நீதிமன்ற பதில் நீதிவான் எம்.எச்.எம். ஹம்சா முன்னிலையில் நடைபெற்றபோது கிராம அலுவலருடன் சென்ற வேளையில் தாக்கப்பட்ட அவரது சகோதரன் ஐந்து பேரில் இருவரை அடையாளம் காட்டினார். அதையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பதில் நீதிவான் இந்த ஐவரையும் நேற்று முன்தினம் வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஐந்து பேரையும் மார்ச் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ-9)

## நுணுக்கமாகக் கஞ்சா கடத்திய இளைஞர் பொலிஸாரால் கைது

மோட்டார் சைக்கிளில் நுணுக்கமாக மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட ஹெரோயின் மற்றும் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அதனைச் செலுத்திச் சென்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலை அடுத்து கலிகைச் சந்திப் பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபர் பயணித்த மோட்டார் சைக்கிள், சோதனையிடப்பட்ட போது அதற்குள் நுணுக்கமாக மறைத்து வைத்துக் கொண்டு செல்லப்பட்ட போதைப் பொருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது 5 கிராம் கஞ்சாத் தூளும், 1 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டன. குறித்த சந்தேக நபர் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது சந்தேக நபரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சந்தேகநபர் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4-109)

[illegible]



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (27.28.29) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

பூசை நேரம் : முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு : கலாசார உடையுடன் வருகை தரவும். (69513)
தொடர்பு :021 221 9127, 077 801 2226 (13.18)

முள்ளந்தண்டு பிரச்சினைக்குத் தீர்வு

யாழ்ப்பாண. இந்திய கேரள ஆயுர்வேத, சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்க விளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது. உங்களுக்கு ஏற்பட்ட முள்ளந்தண்டுப் பிரச்சினைகளுக்கு சத்திரகிசிச்சையின்றி ஆயுர்வேத சிகிச்சையினால் தீர்வளிக்கப்படுகின்றது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் முற்பகல் 9.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். 021 222 2537, 075 041 3579, 077 820 1195 முற்பதிவு அவசியம்

Dr.G.Sritharan B.S.M.S(SL)M.Phil(Jaf.)
Dr(Mrs)S.Anpuchelvy B.S.M.S(SL), M.D(S)(India)
Herbal Health Care Centre
65 கே.கே.எஸ் வீதி. கொக்குவில்
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

# மானிப்பாய் பொலிஸ் பிரிவில் அதிகரிக்கும் வீதிக் கொள்ளை

### பொதுமக்கள் கவலை

யாழ்ப்பாணம்,பெப்.26

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள்களில் சென்று தங்க நகைகளைக் கொள்ளையடிப்பவர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதால் வீதிகளில் நடமாடுவதற்கு அஞ்ச வேண்டியுள்ளது என்று மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

குறித்தபகுதியில் ஒரே நாளில் மூன்று இடங்களில் வீதியால் சென்று கொண்டிருந்த இரு ஆசிரியைகள் உட்பட மூன்று பெண்களின் தாலிக் கொடி, சங்கிலி உட்பட சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைகள் நடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளன.

சாவல்கட்டைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியை ஒருவர் சுழாவடி இராணுவ முகாமுக்கு முன்பாகவுள்ள வீதியால் திரும்பி வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இரு இளைஞர்கள் வீட்டு விலாசம் தெரியவில்லையே என்று பாசாங்கு செய்தவாறு பெண்ணுக்கு அருகில் வந்து அவர் அணிந்திருந்த ஆறரைப் பவுண் நிறையுள்ள தாலிக் கொடியை அறுத்ததும், தாலிக் கொடியை பிடித்துக் கொண்டு கீழே விழுந்தவாறு திருடன், திருடன் என்று சத்தம் போட்ட போதும் கொள்ளையர் தாலிக் கொடியைப் பறித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிவிட்டனர்.

அதேபோல் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை ஒருவர் கல்லூரி முடிந்து சங்கரப்பிள்ளை வீதியால் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிளில் வந்து இரு இளைஞர்கள் சம்பந்தப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வைத்து அவர் அணிந்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடி விட்டனர்.

இதேநேரம் கொள்ளையர் போலிச் சங்கிலிகளையும் விட்டு வைக்கவில்லை. சாவல்கட்டைச் சேர்ந்த இளம்பெண்ணொருவர் சுதுமலை அம்மன் கோயிலுக்குச் சென்று விட்டு மதியம் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது அந்தப் பெண் அணிந்திருந்த போலிச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டனர்.

இந்தக் கொள்ளைகள் பற்றி மானிப்பாய் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புச் சபை உருவாக்கத்தில் அரசுக்குள் பெரும் முரண்பாடு

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு,பெப்.26
நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவது தொடர்பில் அரசுக்கு முரண்பாடு காணப்படுவதால், வீணே காலத்தைக் கடத்துவதற்கு அரசு எத்தனிக்கின்றது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.
நாடாளுமன்றத்தை அர சமைப்புச் சபையாக மாற்றுவது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றிய, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நாடாளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றும் பிரேரணை கடந்த ஜனவரி 9 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.
இந்த மாதம் முதலாம் திகதி ஒரு நாள் விவாதம் நடைபெற்று, 25 ஆம் திகதி முழுநாள் விவாதத்துக்கு இணங்கப்பட்ட நிலையில், திடீரென 2 நாள் விவாதமாக முன்கூட்டி நடத்த அரசு நடவடிக்கை எடுத்தது.
ஆனால் ஐக்கிய தேசிய கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் உடன்பாடு எட்டப்படாமல் இன்னும் விவாதம் நடைபெறுகிறது.
ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.
ஆனால்பிரேரணை உடன்பாடு காணப்படாமல் இழுபறி நிலையிலேயே உள்ளது. அரசுக்கு இதனை இழுத்தடிக்கும் நோக்கம் உள்ளது – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற–ஐ)

## ஆக்கத்திறன் விருது வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.26
இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறன்களை வெளிக்கொணர்ந்து, அதனை விருத்தி செய்யும் நோக்குடன் நடத்தப்பட்ட போட்டிகளில் தேசிய ரீதியில் தெரிவாகி முதல் மூன்று இடங்களைப்பெற்றுக் கொண்ட 227 மாணவர்களுக்கான "தேசிய ஆக்கத்திறன் விருது 2015"நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம், சுவாமிநாதனும், கௌரவ விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணனும் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ற-ஐ-ரி2)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.26
கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் விஞ்ஞான அறைதிறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி முதல்வர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஆ.சு. சற்குணராஜாவும், யாழ். கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஞா.சோதிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-ரி)

## ஆலோசனைக்குழு ஸ்தாபித்தலும் இணையத்தள ஆரம்ப நிகழ்வும்

யாழ்ப்பாணம்,பெப்.26
யாழ்.மாநகர சபையில் ஆலோசனைக்குழு ஸ்தாபித்தலும், இணையத்தள ஆரம்பநிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ். மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்துள்ளார்.
மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பிலான முன்னறிவித்தல்கள், அவற்றைத் திருப்திகரமான முறையில் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் அனைவரும் இலகுவாகப் பார்வையிடக்கூடிய வகையில் மக்களுக்கு உபயோகமான முறையில் இந்த இணையத் தளம் அமையவுள்ளது.
முதலமைச்சர்கவிவிக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த நிகழ்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிப்பார்.
அத்துடன் யாழ்.மாநகராட்சி மன்றத்தால் அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழுவும் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்படவுள்ளது.
11 பேர் கொண்ட இந்த ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்கள், யாவரும் மாநகரப் பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்த ஆலோசனைக்குழு சுயாதீனமாகச் செயற்பட்டு தமது ஆலோசனைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து மாநகர சபைக்கு முன்வைப்பார்கள்.
இந்த ஆலோசனைக்குழுவில் அங்கம் வகிப்பதற்கு 45 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக மாநகர சபையால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழு,பலதடவைகள்கூடிஆராய்ந்த பின்னர் இறுதித் தீர்மானத்தின் அடிப்படையில் 11பேரைத்தெரிவு செய்துள்ளது.
(ற-ஐ-ரி,ரி5,17)

## சட்டமாணி கற்கைநெறிக்கான தெரிவுப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழத்தால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கைநெறிக்கான தெரிவுப்பரீட்சைநாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்எனயாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
இந்தப்பரீட்சைகள்யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பரீட்சை மண்டபங்கள் மற்றும் கலைப்பீட பரீட்சைமண்டபங்கள் ஆகியவற்றில் நடைபெறும்.
அனுமதிஅட்டைகள்இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள்யாழ்.பிராந்திய நிலையத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

## இந்துமா மன்ற பொதுச்செயலாளர் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.26
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புதிய பொதுச் செயலாளராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் பேராளரும், மாமன்ற சமய விவகாரக் குழுவின் தலைவருமான சி.தில்லைநடராஜா மாமன்றத்தின் முகாமைப் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் குறிப்பிட்டுள்ளார்.
கலாநிதி முத்தையா கதிர்காமநாதனின் மறைவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு சி.தில்லைநடராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
இவர் அரச அதிபராகவும் இந்து சமய விவகாரக் குழுவின் பணிப்பாளராகவும் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராகவும், பல பொறுப்பான பதவிகளை அரச நிர்வாக சேவையில் வகித்ததுடன், அரச பொதுச் சேவை ஆணைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றி உள்ளார். கலைத்துறையிலும், எழுத்துத்துறையிலும் "உடுவை தில்லை நடராஜா" என்னும் பெயர் பெற்ற இவர் பலநூல்களையும் எழுதி உள்ளார்.
(ற-ஐ-ரி5)

## அறிவித்தல்

**வேலணை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ - து)**
**கிளைக்குழுதெரிவு - 28.02.2016 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணி**

மேற்படி வேலணை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுசங்கத்தின் கிளை குழுவினை "பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுசங்கத்தின் கிளை குழுவினை தெரிவுசெய்தல்" என்ற ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைப்படி நடைபெறும் என சங்கத்தின் எல்லா உறுப்பினர்களிற்கும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்தல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**கூட்டம் நடைபெறும் இடங்களின் விவரங்கள்:**

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | 083 | புங்குடுதீவு மேற்கு | நண்பர்கள் சனசமூக நிலையம், புங்குடுதீவு. |
| 2 | 085 | புங்குடுதீவு கிழக்கு | பாரதி சனசமூக நிலையம், புங்குடுதீவு. |
| 3 | 086 | வேலணை கிழக்கு | தலைமைக் காரியாலயம் முதலாம் வட்டாரம், வேலணை. |
| 4 | 088 | வேலணை மேற்கு | திருவள்ளுவர் சனசமூக நிலையம், வேலணை. |
| 5 | 089 | வேலணை தெற்கு | தலைமைக் காரியாலயம் முதலாம் வட்டாரம், வேலணை. |
| 6 | 090 | அல்லைப்பிட்டி | சென்பிலிப்ஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், அல்லைப்பிட்டி. |
| 7 | 092 ஏ | நயினாதீவு தெற்கு | அண்ணா சனசமூக நிலையம், நயினாதீவு - தெற்கு. |
| 8 | 092 பி | நயினாதீவு வடக்கு | சிறி அம்பிகா சனசமூக நிலையம் நயினாதீவு -வடக்கு. |

[illegible]
செயலாளர்,
வேலணை ப.தெ.வள.அ.கூட்டுறவுச் சங்கம்

(சி.29524) (13.20.16.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாள் தேவை**
மருதனார்மடச் சந்தையில் வாழைக்குலைகளைத் தூக்கி, இறக்கி மற்றும் உதவிக்கு வேலையாள்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 102 3824

**மணமகள் தேவை**
1987, இந்து,7 இல் செவ்வாய், பாவம் 21, சொந்த வியாபாரம் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
077 895 0695

**வாடகைக்கு**
யாழ்.பல்கலைக்கழக மாணவிகளுக்கு சமையலறை வசதியோடு அறை வாடகைக்கு உண்டு.
077 370 1492

**பணியாளர் தேவை**
ஆண்/ பெண் இருபாலாரும்.
*விற்பனையாளர்
*பில்கிளாக்
*காசாளர்
*கணினியில் கணக்குப் பதியுனர்.
ஆர்வம் உள்ளவர் மட்டும்
(6981) (11,17,18,20)
பேப்பர் கவுஸ்
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மணமகன் தேவை**
1985ஆம் ஆண்டு, ரோகினி, 4இல் செவ்வாய், அரசபணி, இந்துசமயம், கிளி/மாவட்டம் - பெண்ணுக்கு மணமகன் தேவை. அரசபணியில் உள்ளவர் மட்டும் பொருத்தமானது.
077 059 2155, 076 985 7580

**வீட்டுடன் வளவு விற்பனைக்கு**
கிராம சேவகர் பிரிவு J/139 இற்கு உட்பட்ட இல.49, பாடசாலை வீதி, தாவடியில் உள்ள வீடும், கிணறும் நிலப்பரப்பு 6. வடக்கு தெற்கு எல்லையில் உள்ள பாதையும் உடைய வளவு விற்பனைக்கு உண்டு. இதில் உள்ள வாழைத்தோட்டமும், தென்னம் பயிர்களும் உட்பட பிரித்தும் கொடுக்கப்படும்.
021 222 5641, 077 869 5033

**தவறிவிட்டது**
கொக்குவிலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் வழியில், யாழ்.பேருந்து நிலையத்தில் தவறவிடப்பட்ட காரத் திறப்பொன்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது உதயன் காரியாலயத்திலோ வழங்கி 15,000 ரூபாவினை சன்மானமாகப் பெற்றுக் கொள்ளவும்.
077 230 6310,021 222 3966

# அபிவிருத்தித்திட்டங்களை சீர்குலைக்க வேண்டாம்

## அமைச்சர் சம்பிக்க கோரிக்கை

கொழும்பு, பெப்.26

மேல் மாகாணத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் சீர்குலைக்க வேண்டாம் என எதிர்த்தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்று பெரிய நகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். அகலப்படுத்தப்பட்ட கிருலப்பனை, டி.எம். கொலம்பகே மாவத்தையை மக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது- கொழும்பு நகரை மையப்படுத்தி துரித அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றை அரசு ஆரம்பித்துள்ளது. மக்கள் சார்பானதாக இந்த அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்குத் தடையேற்படுத்த வேண்டாம் என போராட்ட கோசங்களை எழுப்பும் நபர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.- என்று குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ)

31ஆம் நாள் நினைவு

சவரிமுத்து
அல்ப்றெட்யோசவ்



மண்ணுக்கு
07.03.1932

விண்ணுக்கு
28.01.2016

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (27.02.2016) சனிக்கிழமை காலை 6 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவுகள், நண்பர்கள் இதை ஏற்றுக்கொள்ளவும்.

201/1, 3ஆம் குறுக்குதெரு,
யாழ்ப்பாணம்.
021 222 4187/ 077 344 5538.

றாணி யோசவ்
(சகோதரி)

# குற்றவாளிகள் தண்டிக்கப்படாமை மக்கள் மனங்களை வருத்துகின்றது

## அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப்.26

வன்புணர்வுக் குற்றவாளிகள் இன்னமும் தண்டிக்கப்படாமலிருப்பது மக்களின் மனங்களை மேலும் வருத்துவதாகவுள்ளது என்று தெரிவித்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றம், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருக்க தமிழ் மக்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மன்றம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பதின்மூன்றே வயதான வவுனியா மாணவி வன்கொடுமையின் பின்னர் மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டதை அகில இலங்கை இந்து மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

வடக்கில் அண்மைக் காலங்களாக பாலியல் வன்கொடுமைகளும், அதன்பின்னர் படுகொலை செய்யப்படுவதும் அதிகரித்துச் செல்கின்றன.

> இப்படியான பலாத்காரப் படுகொலைகளுக்கு நாமும் போராடிப் போராடி இன்று வரையில் எந்த விதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை என்பதும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாதிருப்பதும் மக்களின் மனங்களை மேலும் வருத்துவதாகவும் உள்ளது.

இந்தச் செயற்பாடுகளானவை, எமது இனம் எமது பெருமைமிக்க பண்பாட்டை இன்று இழந்துவிட்டதா? என்ற பெரும் கேள்விக்குறியை எழுப்புகின்றன.

இப்படியான பலாத்காரப் படுகொலைகளுக்கு நாமும் போராடிப் போராடி இன்று வரையில் எந்த விதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை என்பதும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாதிருப்பதும் மக்களின் மனங்களை மேலும் வருத்துவதாக உள்ளன.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான நீதி வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற எண்ணத்தையும் மேலும் வலுவானதாக்குகிறது. இவ்வாறான மிலேச்சத்தனமான பாலியல் பலாத்காரங்களையும், படுகொலைகளையும் செய்யுமளவுக்கு இன்று எமது மக்களிடையே புரையோடிப்போயுள்ள தரமற்ற திரைப்படங்கள், வன்முறைகளைக் கற்றுத்தரும் தொலைக்காட்சித் தொடர்கள், அதீத மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனை என்பவையும் காரணமாகவுள்ளன.

சிறுபராயம் முதலே எமது மதம் மொழி, பண்பாட்டு கலாசார விழுமியங்களைக் கடைக்கொள்ள எமது மக்களைச் சரியான முறையில் இளம் தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுக்காததும், முக்கிய காரணமாக இருக்கின்றது என்பதை இனப்பற்றுள்ள ஒவ்வொருவரும் மறுக்க முடியாது. எனவே பண்பாட்டு விழுமியங்களைக் கடைக்கொள்ள எமது மக்களைத் தயார்படுத்த உறுதியெடுத்துக்கொள்வோம்.- என்றுள்ளது. (ற- ஐ-4)

கண்ணீர் அஞ்சலி



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் விஞ்ஞான ஆய்வு கூட உதவியாளராகக் கடமையாற்றும் திரு. இ.ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் இராமலிங்கம் சின்னம்மா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (69585) (13.17)

நலன்புரிகழகம்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



ஆன்மீக நாயகன்

அமரர் சிவசம்பு உமாகரன்

கடந்த 27.01.2016 புதன்கிழமை இறைபதமடைந்த எமது தெய்வத்தின் அந்தியேட்டிக் கிருத்திய நிகழ்வு இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை காலை 08 மணியளவில் நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக்கிரியை அன்றையதினம் முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் நோயுற்ற காலத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, மகரகம அரச வைத்தியசாலைகளிலும் நொதேன் சென்றல், டெல்மன், றோயல் தனியார் வைத்தியசாலைகளிலும் தங்கி சிகிச்சை பெற்ற காலத்தில் சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் தங்குமிட வசதிகளைத் தந்து உதவிய உறவினர்களுக்கும், நோயுற்ற காலத்தில் தோளோடு தோள் நின்று உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் மரண நிகழ்வின் பொழுது கொழும்பிலிருந்து நயினாதீவு வரை பூதவுடலை எடுத்துவர உதவியவர்களுக்கும் நயினாதீவில் இடம் பெற்ற மரணநிகழ்வின் பொழுது பங்கெடுத்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர் மற்றும் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவியர்களுக்கும், SLIIT மொறட்டுவைப் பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் நண்பர்களுக் கும் மரணச்செய்தியை அறிந்து தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், பதாகைகள் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அன்னை மடியில் 31.01.1964
ஆண்டவன் அடியில் 27.01.2016

நயினாதீவு - 03

குடும்பத்தினர்.
077 673 6833
021 321 4102

(69520) (14,13. 18,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்தியத் துணைத்தூதரகம் முன் திங்களன்று மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

## தமிழக மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க வலியுறுத்தி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம். பெப். 26
தமிழக மீனவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதுவர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.



இந்த நிலையில் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதுவர் அலுவலகம் முன்பாக, தமிழக மீனவர்களின் அத்துமீறிய வருகையை நிறுத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் இணைய தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில், அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் அண்மைய வருகையின் போது, இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாட, கடற்தொழில் அமைச்சருக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று எதிர்வரும் 29 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் டில்லி செல்ல உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் இரு நாட்டு மீனவர்களும் சுமுகமாகத் தொழில் செய்வதற்குப் பேச்சு வார்த்தை ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுடன் தேசிய மீனவர் பேரவைத் தலைவர் மா. இளங்கோ, இந்திய வெளியுறவு அமைச்சர் சுஸ்மா சுவராஜையும் ஏனைய முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்திப்பதற்கு தமிழகத்திலிருந்து டில்லி செல்கின்றார்.
கடற்றொழில் அமைச்சரின் பயணத்திற்கு முன்னர், இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்கள் 27 பேரும் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சரின் இந்தியப் பயணத்தின் நோக்கம் இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.
அத்து மீறி வரும் தமிழக மீனவர் தொடர்பில், இலங்கையின் நிலைப்பாடு என்ன? வடபகுதி மீனவர்களால் தொடர்ந்து முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அமைச்சர் கூறப்போகும் செய்தி என்ன? மீளவும் மீனவர் பேச்சு வார்த்தை என்ற பதத்தைப் பாவித்து இழுத்தடிக்கப் போகின்றனரா?
அல்லது இந்திய மீனவத் தலைவர்கள் கேட்பது போல், 80 நாள்கள் எமது கடற்பரப்பில் தொழில் புரிய இடம் வழங்கப் போகின்றனரா? அல்லது எல்லை தாண்டி வந்து மீன்பிடிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு கோரப்போகின்றனரா? என்பது மூடுமந்திரமாக உள்ளது.
முன்பிருந்த அமைச்சர்களை விட தற்போதைய கடற்றொழில் அமைச்சர், இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து இழுவை மடிகளைப் பயன்படுத்துவதை தொடர்ந்து கடுமையாக எதிர்த்து வருவதை நாம் கண்டு வரவேற்கின்றோம். அண்மையில் வடமாகாணத்திற்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சரினால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், நேரடியாகவே அவதானிக்கப்பட்டது.
இந்தநிலையில், தமிழக மீனவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 29 ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதுவர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளனர்.
இந்தச் செயற்பாடுகளினால் எமது அமைச்சர், தன் நிலையிலிருந்து தளர்ந்து விடாதிருக்கவும் தமிழக மீனவர்களுக்கு, வடபகுதி மீனவர்களின் நிலையை அழுத்தமாகத் தெரிவிக்கும் முகமாகவும் அமைச்சரின் இந்தியப் பயணத்தின் போது, வடமாகாண மீனவர்களாகிய மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து, எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத்துணைத்தூதுவர் அலுவலகம் முன்பாக தமிழக மீனவர்களின் அத்து மீறிய வருகையை நிறுத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.-என்றார்.

(த-வ-4,56)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் இரண்டாம் அமர்வு

கிளிநொச்சி,பெப்.26
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இரண்டாம் அமர்வு நாளை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கடந்த மாதம் 29 ஆம் திகதி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இருப்பினும் வடக்கு மாகாண முதலமைச்சர் வேறு கூட்டத்துக்குச் செல்ல வேண்டி இருப்பதாகக் கூறி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை இடை நிறுத்தியதோடு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தொடர்ச்சி எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவித்திருந்தார். அதற்கு அமைவாக கிளிநொச்சி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தொடர்ச்சி இடம்பெறவுள்ளது.
கடந்த முறை இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்த பிரதானமான 25 விடயங்கள் ஆராய்வதற்காக முன்வைக்கப்பட்ட போதும் பல விடயங்கள் முழுமையாக ஆராயப்படாமலேயே கூட்டம் இடைநிறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ற-ஜ-ரி3)

## இடைத் தவணை பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.26
2016 ஆம் ஆண்டு தரம் 9, 10, 11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விஞ்ஞான பாடத்தின் முதலாம் தவணைக்கான இடைத்தவணைப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என வட மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணப் பணிப்பாளர் செல்வின் இறேனியஸ் அறிவித்துள்ளார்.

(ற-ஜ-ரி)

## உயிர்வாழ் சான்றிதழை சமர்ப்பிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.26
நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் தங்களது உயிர்வாழ் சான்றிதழ்களை, தங்கள் பிரிவு கிராமசேவையாளரிடம் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்க வேண்டும் என நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறி தெரிவித்துள்ளார்.
இந்த உயிர்வாழ் சான்றிதழ் படிவத்தைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்கள் தமது பிரதேச செயலகப் பிரிவுக்குள் வதிவதில்லை எனக் கருத்திற்கொண்டு மார்ச் மாதத்திலிருந்து ஓய்வூதியமானது தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

## வவுனியா சிறுமியின் கொலையை கண்டித்து முல்லைத்தீவில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு பெப். 26
வவுனியா பாடசாலை மாணவி வன்கொடுமையின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து முல்லைத்தீவு பெண்கள் அமைப்புக்களால் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணி நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் ஜனாதிபதிக்கான மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.
குறித்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பேரணியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தை வந்தடைந்து மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் நீதியரசே எமக்கு நீதி வேண்டும், பள்ளி மாணவர்களுக்கான கொலை வேண்டாம், பள்ளி மாணவர்களை - சின்னப் பாலகர்களை சீரழிக்கும் காமுகர்களுக்கு உச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும், பெண்கள் கசக்கி எறியும் காகிதமல்ல பாதுகாக்கப்பட வேண்டிய கருவறைக் கோயில்கள், காக்கத் தவறாதே கசக்காதே, நீதித்துறையே காமுகர்களைக் கண்டுபிடி சட்டத்தின் முன்நிறுத்து மரண தண்டனை வழங்கு போன்ற வாசகங்கள் அடங்கிள பதாகைகளுடன் காணப்பட்டனர். இறுதியில் ஜனாதிபதிக்கான மனு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவிக்கையில் - இவ்வாறான சம்பவங்கள் தொடர்வது கவலை அளிக்கின்றது. போர்க் காலத்தில் பெண்கள் பாதுகாப்பாக உலாவக் கூடிய நிலை காணப்பட்டது. ஆனால் தற்போது பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று குறிப்பிட்டார்.
ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த சங்கமி பெண்கள் அமைப்பினர், மாவட்டப் பெண்கள் அமைப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-21,ரி7)

## ஒன்றுகூடல்

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழக வடமாகாண அமையத்தின் முதியோர் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
அமைப்பின் தலைவர் க. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கழகத்தின் முதியோர் பத்திரிகையின் 4 ஆவது வெளியீடும், ஆய்வுரையும் இடம்பெறவுள் ளது.
அமலமரித் தியாகிகள் துறவற சபையின் அருட்பணி செபமாலை அடிகளார் "நீங்களே உங்கள் மருத்துவர்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றவுள்ளார். யாழ். தாதியர் கல்லூரியின் சிரேஷ்ட போதனாசிரியர் எஸ்.ஜெயக்குமாரின் 'முதியோர் மன ஈய்வு' எனும் விடயம் பற்றிய செய்முறை விளக்கமும் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நெல் கொள்வனவின்போது முல்லைத்தீவில் முறைகேடு

## குற்றஞ்சாட்டுகின்றனர் விவசாயிகள்; மறுக்கின்றனர் திணைக்கள அதிகாரிகள்

முல்லைத்தீவு, பெப். 26
முல்லைத்தீவில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் மேற்கொள்ளப்படும் நெல் கொள்வனவில் முறைகேடுகள் நடைபெறுகின்றன என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

விவசாயி ஒருவரிடம் இருந்து 2 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும்போது 100 கிலோ நெல்லை இனாமாகத் தருமாறு நிர்ப்பந்திக்கின்றனர் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

ஆயினும் அவ்வாறான சம்பவங்கள் எவையும் நடைபெறவில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக் களத்தினர் தெரிவித்தனர். தங்களின் நெல் கொள்வனவு செய்யப்படவில்லை என்ற ஆதங்கத்தில் சிலர் இவ்வாறான தகவல்களைப் பரப்பலாம். அவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றன என்பதை உறுதிப்படுத்தினால் விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் நெல் திருப்பி வழங்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது 2015-2016 கால போகச் செய்கையில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை முல்லைத்தீவில் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை குமுழமுனை நெற் களஞ்சியத்தில் வைத்து நேற்று முன்தினம் முதல் நெல் சந்தைப் படுத்தும் சபையினர் மேற் கொண்டு வருகின்றனர். அதற்குப் பொறுப்பாக நெல் சந்தைப் படுத்தும் சபையின் சார்பில் ஒரு முகாமையாளர் கடமையாற்றுகின்றார்.

2 ஏக்கருக்கு மேல் நெற் செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து 2 ஆயிரம் கிலோ நெல் மாத்திரமே கமநல சேவைகள் நிலையத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகக் கொள் வனவு செய்யப்பட்டது. அதன்போது ஒவ்வொரு விவசாயியும் ஐம்பதரைக் கிலோ எடையைக் கொண்டதாக நெல்லை மூடையாக்கி நெல் சந்தைப்படுத்தும் சபையினரிடம் வழங்க வேண்டும் என்றும், 2 ஏக்கருக்கு அதிகமாக விதைத்தவர்கள் ஐம்பதரைக் கிலோ கொண்டதான 40 நெல் மூடைகளை நெல்சந்தைப்படுத்தும் சபையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கமநல சேவைகள் திணைக் களத்தால் கோரப்பட்டி ருந்தது.

அதற்கமைய விவசாயிகள் தங்களுடைய நெல்லை முல்லைத்தீவு குமிழமுனை நெல் களஞ்சியசாலைக்கு கொண்டு சென்று சந்தைப்படுத்தினர்.

அதன்போது நெல்லின் ஈரப்பதனை பரிசோதித்த நெல் சந்தைப்படுத்தும் சபை யின் முகாமையாளர், அவர்களது நெல்லில் ஈரப்பதன் இருக்கின்றது என்றும், தாம் கொள்வனவு செய்யும் தராதரத்தில் குறித்த நெல் இல்லை என்றும், நெல் கொள்வனவு செய்ய வேண் டும் என்றால் மேலதிகமாக 50 தொடக்கம் 100 கிலோ வரையான நெல் தர வேண்டும் என்றும் தெரிவித்து நெல் கொள்வனவு செய்தார் என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

> “விவசாயிகள் குமிழமுனை களஞ்சியத்துக்கு கொண்டு சென்றபோது நெல்லில் ஈரப்பதன் இருக்கின்றது என்றும், தாம் கொள்வனவு செய்யும் தராதரத்தில் குறித்த நெல் இல்லை என்றும், நெல் கொள்வனவு செய்ய வேண்டும் என்றால் மேலதிகமாக 50 தொடக்கம் 100 கிலோ வரையான நெல் தரவேண்டும் என்றும் தெரிவித்து நெல் கொள்வனவு செய்யப்பட்டது என்று விவசாயிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.”

இது வரையிலும் விவசாயி கள் 1கிலோ நெல்லை 19 ரூபாவுக்கே தனியாருக்கு விற்பனை செய்து வந்தனர். தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபை 1 கிலோ நெல்லை 38 ரூபா வீதம் கொள்வனவு செய்கின்றது. தனியாரிடம் கொடுத்த நெல்லில் ஐம்பது கிலோவுக்கு ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது. எஞ்சிய நெல்லையாவது நட்டமடையாது விற்க முனையும்போது நெல் சந்தைப் படுத்தும் சபையினர் நிர்ப்பந்தித்து மேலதிக நெல் பெற்று கொள்கின்றனர் என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

நெல் கொள்வனவின்போது மாவட்டச் செயலக அதிகாரிகள் உரிய கண்காணிப்பை மேற் கொள்ள வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டகமநலசேவைகள்திணைக் களத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவ்வாறான சம்பவங்கள் எவையும் நடக்கவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

இது உண்மை என ஆதாரபூர்வமாக நிரூபித்தால் விவசாயிகளிடம் இருந்து பெற்று கொண்டதாகக்கூறப்படும்மேலதிகநெல்லை மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைப்போம். அத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த தகவல் உண்மை என்றால் தகவலை வழங்கிய விவசாயிகளுடைய பெயர் விவரங்களைப் பிரசுரியுங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பது குறித்து விவசாயிகளிடம் கூறிய போது அவர்கள் தமது பெயர் விவரங்களை பிரசுரிப்பதால் அடுத்த விளைச்சலின் போது தாம் அதிகாரிகளால் பழிவாங்கப்பட மாட்டோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்று குறிப்பிட்டனர்.

குறித்த களஞ்சிய சாலையில் விவசாயிகளிடம் இருந்து பெற்று கொண்ட நெல்மூடைகளின் எண்ணிக்கையை அவர்களுடைய பற்றுச்சீட்டை அடிப்படையாக வைத்து கண் காணித்தால் உண்மையை அவர்களே அறிந்து கொள்ள முடியும் என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-21,102)

## பனம் கள் புரையேறி இளைஞன் உயிரிழப்பு

கிளிநொச்சி. பெப். 26
பனம் கள் புரையேறிய நிலையில் மாங்குளம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மல்லாவியைச் சேர்ந்த உதய நிமல் (வயது- 26) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நண்பர்களுடன் இணைந்து பனம் கள் அருந்திவிட்டு உணவு உட்கொண்ட வேளையில் அவருக்குப் புரையேறி நெஞ்சடைப்பு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து இளைஞர் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலயில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் குறித்த இளைஞன் கள் புரையேறியதாலேயே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-101,ரி3)

## இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் தமிழ் மக்களுக்கு 287 புதிய வீடுகள்

### முல்லைத்தீவில் வழங்கப்பட்டன



முல்லைத்தீவுபெப். 26
முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு 287 புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப் பட்டுள்ளன. நேற்று இறுதிக் கட்டமாக 19 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கான வீடுகள் கட்டப்பட்டுள்ள கேப்பாப்பிலவு, பலக்குடியிருப்பு, சூரியபுரம், சீனியாமோட்டை மற்றும் யாழ். அல்லராய் கிராமங்கள் இன்னமும் விடுவிக்கப்படாது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அந்தப் பகுதி மக்களுக்காக முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் - இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இராணுவம் மற்றும் மீள்குடியேற்றம், புனரமைப்பு மற்றும் இந்து மத அமைச்சு என்பன இணைந்து வீடுகளை நிர்மாணித்துள்ளன. நேற்று இறுதியாக 19 வீடுகள் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விதானகே ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் மருத்துவ நிலையம் ஒன்றும் மக்களின் பாவனைக்காகத்திறந்துவைக்கப்பட்டதுடன், கேப்பாப்பிலவு பாடசாலைக்கு மின் சாரமும் வழங்கப்பட்டது. போரின்போது மக்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில் அவர்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத் தியிருந்தனர்.

தற்போதும் அந்தப் பகுதி விடுவிக்கப்படாது, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கின்ற நிலையில் - அந்தப் பகுதிக்குள் 287 வீடுகளை அமைத்து மாதிரிக் கிராமம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். (ற-21,ரி7)

## போதையில் இடையூறு 3500 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.26
பொது இடத்தில் மதுபோதையில் நின்று பாதையில் பயணிப்பவர்களுக்கும், வாகனங்களுக்கும் இடையூறு விளைவித்தவருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அதன்போது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

அதுதவிர,பொது இடத்தில் வைத்து மது அருந்திய குற்றத்துக்காக 5 பேருக்கு 10 ஆயிரம் ரூபாஅபராதம்செலுத்துமாறுஉத்தரவிடப்பட்டது. (ற-ஜ-4,103)

## சேவைநலன் பாராட்டு விழா

தென்மராட்சிப் பிரதேச செயலக தாவளை- இயற்றாலைப் பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள வே.நாகதேவனுக்கு பிரிவு மக்கள் நடத்தும் சேவைநலன் பாராட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு தாவளை - இயற்றாலை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், உதவிப் பிரதேச செயலர் செல்வி ற.நவரத்தினம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ர.ரகுநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றங்களில் முறைகேடு; சாடுகின்றது ஆசிரியர் சங்கம்

## மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.26

இடமாற்றம் வழங்கப்பட்ட பல ஆசிரியர்கள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் தன்னிச்சையான விருப்பின் காரணமாகத் தொடர்ந்தும் தமது பழைய பாடசாலையிலேயே கடமையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளதாவது, உள்ளக இடமாற்றம் பெற்ற சில ஆசிரியர்களுக்கு இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாமல் சலுகை வழங்கப்படுகின்றமை மற்றும் இடமாற்றச் சபையின்றிய இடமாற்றங்கள் தொடர்பானதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு, இடமாற்றங்கள், இடமாற்றச் சபையூடாகவே வழங்கப்படவேண்டும் என்ற விதிமுறை கடந்த ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் சங்கம் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும், இதுவரை எவ்வித பொருத்தமான நடவடிக்கையும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் பின்பற்றப்படவில்லை. இதன் காரணமாக பல பாடசாலைகளில் ஆசிரிய ஆளணி சீராக்கப்படாமல் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இடமாற்றச் சபையால் இடமாற்றம் வழங்கப்பட்ட சில ஆசிரியர்களை மட்டும் அதிகாரிகளின் துணையுடன் தொடர்ந்தும் தமது பழைய பாடசாலைகளில் பணியாற்ற அனுமதிப்பதானது இடமாற்றச் சபையில் அங்கம் வகிக்கும் ஆசிரியர் சங்கத்தின் தொழிற் சங்க உரிமையையும் பாதிப்பதாகும். தவிர சமவுரிமைத் தத்துவத்தையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது. இத்தகைய செயற்பாடு வழங்கப்பட்ட இடமாற்றத்தை ஏற்றுச் சென்ற ஏனைய ஆசிரியர்களினதும் அடிப்படை உரிமையை மீறும் செயலுமாகும்.

" தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு, இடமாற்றங்கள், இடமாற்றச் சபையூடாகவே வழங்கப்படவேண்டும் என கடந்த ஜனவரி மாதம் நடைமுறைப் படுத்தப்பட்டது "

இலங்கை சனநாயகக் குடியரசின் அரசமைப்பின் உறுப்புரை (12)க்கு அமைவாக, இனம், மொழி, பால், அரசியல் கொள்கை, பிறப்பிடம் காரணமாக எந்தவொரு நபரும் ஓரம் கட்டப்படுதல் ஆகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அரச தாபனவிதிக் கோவையின் அடிப்படையிலும், தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் அடிப்படையிலும், சாதாரண இடமாற்றங்கள் யாவும் இடமாற்றச்சபையினூடாகவே இடம்பெறவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு மாறாகத் தன்னிச்சையாகச் செயற்பட்டு ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது அரச தாபனவிதிக் கோவையை மீறும் செயல் என்பதுடன், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் சட்டம்வழங்கிய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததாகவும் அமையும்.

ஆசிரியர்களினது அடிப்படை உரிமை பாதிக்கப்படும் விதமாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செயற்படுவதை நிறுத்த உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. - என்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்முறைப்பாடுகிடைத்துள்ளது என்றும் நடவடிக்கை குறித்து ஆராயப்படுகின்றது என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (ந-ஐ-4)

# உள்நாட்டு, வெளிநாட்டுக் கலைநிகழ்வுகளோடு நேற்றுடன் நிறைவடைந்தது தேசிய ஜம்போறி

யாழ்ப்பாணம், பெப். 26

ஒன்பதாவது தேசிய ஜம்போறி நிகழ்வுகள், சாரணர் பயிற்சிப் பட்டறைகள், உள்நாட்டு, வெளிநாட்டு கலைநிகழ்வுகளோடு நேற்றுடன் நிறைவடைந்தன.

ஒன்பதாவது தேசிய ஜம்போறி கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதல் முறையாக வடக்கில் - யாழ். மாவட்டதில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் உள்ள சாரணர் மாவட்டத்தை சேர்ந்த எட்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட சாரணர்களும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம் உள்ளிட்ட 11 நாடுகளில் இருந்து வருகைதந்த 150க்கும் மேற்பட்ட சாரணர்கள் மற்றும் சாரண அதிகாரிகளும் கலந்து கொண்ட இந்தச் சாரணர் பயிற்சிப்பட்டறையின் கலைநிகழ்வுகளும் திறமை வெளிப்பாட்டுப் பயிற்சிகளும் நேற்று வியாழக் கிழமை 25ஆம் திகதியுடன் நிறைவடைந்தன.

இறுதி நாள் நிகழ்வுகளை முன்னிட்டு நேற்று மாலை 4 மணி முதல் நள்ளிரவுவரை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சாரணர்களின் கலைநிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

முன்னதாக காலை முதல் சாரணர்கள் யாழ். கோட்டை மையப் பகுதியில் அமைக்கப்பட்ட திறமை வெளிப்பாட்டுக் களத்தில் பயிற்சியில் ஈடுபட்டதுடன், பயிற்சிப் பட்டறையில், தாம் கண்டு கொண்ட மற்றும் நட்புரீதியில் உறவாடிய பிற மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள் மற்றும் அதிகாரிகளிடம் இருந்து பதிவுகளைப் பெற்றுக் கொண்டனர்.



முதல் நாள் 20ஆம்திகதி பயிற்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகைதந்த சாரணர்கள் தம்முடைய பதிவுகளை மேற்கொண்டதுடன், தம்முடைய பாசறைக்கான கூடாரங்களையும் அமைத்துக் கொண்டனர். இரண்டாம் நாள் சாரணர்களின் திறமை வெளிப்பாட்டுப் போட்டிகள் ஆரம்பித்ததுடன், இரவு நேரத் திறமைக்கும் வெளிப்பாட்டுப் போட்டியும் நடத்தப்பட்டன.



அவற்றைத் தொடர்ந்து கேக் கேஸ் தல்செவேனா விருந்தினர் விடுதியில் குயின்ஸ் மற்றும் ஜனாதிபதி சாரணர்களின் ஒன்று கூடலும் நடைபெற்றன. மூன்றாம் நாள் 22ஆம் திகதி மாலையில் கலாசார நிகழ்வும், வெளிநாட்டு சாரணர்களின் சர்வதேச இரவு நிகழ்வும் நடை பெற்றன. நான்காம் நாள் 23ஆம் திகதி திறமை வெளிப்பாட்டுப் போட்டிகளும், நூற்றாண்டைக் காணும் யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் கலாசார நிகழ்வுகளும் நடத்தப்பட்டு, சாரணியர் நூற்றாண்டுப் பாடலும் வெளி யிடப்பட்டது. பயிற்சிப் பட்டறையின் ஐந்தாம் நாள் நேற்று முன்தினம்வழமைபோன்று காலை முதல் மதியம் வரை சாரணர்களின்திறமைவெளிப்பாட்டுப் போட்டிகளும், மாலையில் நேற்று நடைபெற்ற இறுதி நிகழ்வுக்கான ஒத்திகைச் செயற்பாடுகளும் நடைபெற்றன. நிகழ்வுகளின் இறுதி நாளான நேற்றுக் காலை நேரத் திறமை வெளிப்பாட்டுப் போட்டியும் மாலை 4 மணி முதல் நள்ளிரவு வரையில் அரினா டிஸ்பிளே நிகழ்வுகளும் நடைபெற்றன. இன்று 26ஆம் திகதி சாரணர்கள் பாசறை களைந்து தம்முடைய மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளனர்.



இந்த நிகழ்வுகளுக்கு மேலதிகமாக பாசறைக் கூடாரங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளில் சாரணர்போட்டிகளும், கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. யாழ் மத்திய கல்லூரியில், சாரணியத்தின்வரலாறு மற்றும் செயற்பாடுகளை விளக்கும் வகையிலான கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இது பெருமளவில் சிங்கள மொழிபேசும் சாரணர்கள் கலந்து கொண்ட பயிற்சியாக அமைந்ததுடன், சாரணர் பயிற்சியை முன்னெடுக்கும் பகுதிகளில் கடற்படை, இராணுவமே பணியில் ஈடுபட்டமையால் தமிழ் சாரணிய மாணவர்கள் தொடர்பாடல் முறைகளில் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்ததுடன், மலசல கூடம் மற்றும் குளியல் அறை, குடிநீர் தொடர்பாகவும் நிறைவாக போதுமான ஏற்பாடுகள் செய்யபட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தனர். வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருந்த சாரணிய பயிற்சி ஆசிரியர் ஒருவர் பாசறை அமைக்கப்பட்ட பகுதி எந்தவகையிலும் கூடாரம் அமைத்து தங்குவதற்கு ஏற்புடையதாகக் காணப்படவில்லை என்றும், சாரணர் தேவைக்கான அனைத்துத் தேவைப்பாடுகளும் சாரணர் தம்முடைய செலவிலேயே மேற்கொள்ள வேண்டி இருந்ததாகவும் தொரிவித்திருந்தார்.

எனினும் சாரணர் ஒன்றுகூடல்கள் நட்புரிமை பாராட்டல் என்பவை சிறப்பாக இருந்ததுடன், பயிற்சிப்பட்டறையில் வித்தியாசமான அனு வங்களைப் பெற்றுக் கொண்டோம் என்றும் வெளி மாவட்ட சாரணியர்களுடன் நிகழ்வுகளில்கலந்துகொண்டமையும் புது அனுபவமாக இருந்தது என்றும் ஜம்போறியில் கலந்து கொண்ட சாரணர்கள் தெரிவித்திருந்தனர்.



ஒன்பதாவது ஜம்போறியின் ஏற்பாடுகள் இலங்கை சாரணர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன். யாழ் மாநகர சபையினர், சுகாதார சேவைகள் பணிமனையினர், பொலிஸ், இராணுவத்தினர் உட்படப் பலர் இணைந்து முன்னெடுத்திருந்தனர். (ந-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகளது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதாலேயே '20' தோல்வி

## அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.26
சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாகவே அரசமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சுட்டிக் காட்டியுள்ளார்.
நாடாளுமன்றத்தை அரசமைப்புப் பேரவையாக நியமிப்பதற்குரிய தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக் காட்டினார்.

> புதிய அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் மக்களிடம் கருத்தறியும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. இந்தப் பணிகளை சிவில் சமூகத்தினர், நிபுணர்கள் முன்னெடுப்பது வரவேற்கத்தக்கது. தேர்தல் முறைமை மாற்றம் பற்றியும், புதிய அரசமைப்பு தயாரிப்பு நடவடிக்கையிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்போது கலப்பு முறையொன்றை நாம் முன்னிலைப் படுத்துகின்றோம். இவ்வாறான தொரு திட்டத்தைக்கடந்த முறையும் நாம் முன்வைத்தோம். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாகத் தான் 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற முடியாமல்போனது. தேர்தல் மறுசீரமைப்பு இடம் பெறும்போது, சிறுபான்மை மற்றும் சிறு அரசியல் கட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மறுசீரமைப்பு இடம் பெற வேண்டும். கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றார். (ற-சி)

# மகிந்தவை சிறையில் அடைக்க வேண்டாம்

## அமைச்சர் ஜோன் செனவிரத்ன வேண்டுகோள்

கொழும்பு, பெப்.26
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சிறையில் அடைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி தவறானது என்றும், அவ்வாறு செய்வதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற் படுத்தி விட முடியாது என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தை அரசமைப்புப் பேரவையாக மாற்றுவதற்கான தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.
அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பல ஜனாதிபதிகளுக்கு முடியாமல்போனதை மகிந்த ராஜபக்ச செய்தார். 30 வருட காலப் போருக்கு அவர் முடிவு கட்டினார். அவர் இதைச் செய்திருக்காவிட்டால் நாட்டின் இன்றும் போர் தொடர்ந்திருக்கும். உயிரிழப்புகள் தொடர்ந்திருக்கும். எனவே, மகிந்த முக்கிய நபராவார் என்பதை நாம் ஏற்கத் தான் வேண்டும். திருடன், மோசடிக்காரன் எனக் கூறுபவர்கள் இந்த உண்மையையும் ஏற்கத் தான் வேண்டும்.
பெருந்தெருக்கள், துறைமுகம், விமானநிலையம் எனப் பெரும் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்தார். காங்கேசன் துறைவரை புகையிரதப் பாதை அமைத்தார். நாட்டிலுள்ள அனைவருக்கும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.
எனவே, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை தூக்கில் போட வேண்டும், சிறையில் அடைக்க வேண்டும் என்றெல்லாம் கூறப்படுவது தவறாகும்.
நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பெரும்பான்மை மக்களின் ஆசீர்வாதம் அவசியமாகும் என்றார். (ற-சி)

# அரசமைப்பை மாற்றும் அவசியம் எந்த அரசுக்கும் இருக்கவில்லை

## மகிந்த யாப்பா அபேவர்தன கூறுகின்றார்

கொழும்பு,பெப்.26
அரசமைப்பில் திருத்தங்களை செய்ய எந்தவொரு அரசுக்கும் அவசியம் காணப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
அரசமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்ற போராட்டத்தை நாமே ஆரம்பித்தோம்.
லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க ஆகியோருடன் இணைந்து அரசமைப்பை மாற்றப் போராடியிருந்தோம். அதன் பின்னர் ஆட்சி செய்த அனைத்து அரசுகளும் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்த போதிலும், அந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மக்களைப் பிழையாக வழிநடத்தலாகவே இதனைக் கருத வேண்டும். அரசமைப்பை மாற்றியமைக்க எந்தவொரு அரசுக்கும் அவசியம் இருக்கவில்லை.
20 ஆம் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், இதனை, விடவும் நன்மை ஏற்படும். அரசமைப்புப் பற்றிப் பேசுவது மக்களுக்கு உணவளிக்கவா? உரமானியம்வழங்கவா? தேயிலை விலைகளை உயர்த்தவா?.
எமது அரசு 110 அமெரிக்க டொலருக்கு ஒரு பீப்பாய் மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்து, விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கியது. எரிபொருள் மானியம் வழங்கப்பட்டது. எனினும் இன்று அவை எவையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-ஜ)

# வட்டவளையில் திடீர் நில தாழ் இறக்கம்



கொழும்பு, பெப்.26
ஹட்டன் – வட்டவளைப் பகுதியில் ஒரு வீடு நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரெனத் தாழ் இறங்கியுள்ளது. அதையடுத்து அந்த வீட்டில் இருந்த 10 பேர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர் என்று வட்டவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அம்பகமுவ பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட வட்டவளைநகரப்பகுதியில் இந்த வீடு உள்ள இடம் ஒரு அடி அகலத் தில் திடீரென நிலம் தாழ் இறங்கியுள்ளது. அதனால் அருகிலுள்ள வீடுகள் மண்ணில் புதையலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
எனினும் இந்த வீட்டிலிருந்த 3 குடும்பங்கள் பாதுகாப்புக்காரணங்களுக்காக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன என்று வட்டவளைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.
இடர் முகாமைத்துவ மைய அதிகாரிகளுக்கும் நிலச்சரிதவியல் அதிகாரிகளுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று வட்டவளைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி உடுகம தெரிவித்தார். (ற)


# 29 ஆம் திகதி நாட்டுக்கு வருவார் எக்னெலிகொட

பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி பிரகீத் எக்னெலிகொட நாட்டுக்கு வருகைத் தரவுள்ளதாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வாறான சுவரொட்டிகளைக் காணக்கூடியதாக உள்ளதென பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.
எக்னெலிகொட இருக்கின்றாரா? சட்டத்தரணி திலிப் பீரிஸ் அமைதி! திலிப் பீரிஸின் தந்தை தான் பிரகீத் எக்னெலிகொடவா? 1818ஆம் ஆண்டு எக்னெலிகொட நாட்டைக் காட்டிக் கொடுத்தார். 2015 எக்னெலிகொடவின் பேரன் இராணுவத்தைக் காட்டிக் கொடுத்தார். புலிப் புலனாய்வுப் பிரிவை கொழும்பிலிருந்து செயற்படுத்திய பிரகீத் யார்?
நாட்டில் இரசாயன ஆயுத பயன்பாடு தொடர்பில் ஜெனிவாவில் கதைத்த சந்தியா, சோற்றுப் பொதி விற்பனை செய்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஐரோப்பாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றமை எவ்வாறு?
இவ்வாறான சொற்பிரயோகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் நாட்டின் பல பகுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அனைவரும் ஏற்றுக் கொள்ளும் அரசமைப்பே அவசியம் தேவை

## பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன சுட்டிக்காட்டு



கொழும்பு,பெப்.26
அனைத்து இன சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அரசமைப்பை உருவாக்க வேண்டியது அவசியம் என பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
அவர் தொடர்ந்துஅங்கு தெரிவித்துள்ளதாவது,
சகல இனத்தைச் சேர்ந்தவர்களும் இது எங்களது அரசமைப்பு என உணரக்கூடிய வகையில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
1972 மற்றும் 1978 ஆகிய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசமைப்பைச் சட்டத்துறை நிபுணர்கள் உருவாக்கியிருந்தனர்.
அரசமைப்புக்குப் பொது மக்களின் உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானது. அந்த முயற்சிகளில் தான் எமது கட்சி தீவிரமாக ஈடுபட் டுள்ளது.
மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு, அந்த விடயங்களை புதிய அரசமைப்பில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
அனைத்து இன மக்களினதும் கருத்துக்கள், விமர்சனங்களை உள்ளடக்கி மிகச் சிறந்த அரசமைப்பு ஒன்றை உருவாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது என்றார். (ற-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களைத் தடுக்க சிம் அட்டைகள் பதிவு

கொழும்பு,பெப்.26
நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இலங்கையில் பாவனையில் உள்ள அனைத்து அலைபேசிகளினதும் சிம் அட்டைகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
அனைத்துத் தொலைபேசி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிம் அட்டையைப் பயன்படுத்தி இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதே இதன் நோக்கம் என்றும் இந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.
ஏனைய நபர்களின் பெயர்களில் சிம் அட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டு, அது பல்வேறு குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைத்தடுக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எதிர்வரும் மாதங்களில் இந்தத் திட்டம் கட்டாயமான தொன்றாக நடைமுறைப்படுத்தப்படும்என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ற-ஐ)

# புதிய கட்சி அமைக்க மகிந்தவால் முடியுமா?

## துமிந்த திஸாநாயக்க சவால்

கொழும்பு,பெப்.26
மகிந்த ராஜபக்சவால் முடிந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சவாலாக புதிய அரசியல் கட்சியொன்றை அமைக்குமாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க சவால் விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இன்னுமொரு ஓட்டோ கட்சியைத் தவிர சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சவாலாகும் வகையில் புதிய கட்சியொன்றை அமைப்பதற்கு குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவுக்கு வாய்ப்பு இல்லை. மகிந்தவுக்குத் தேவையாக இருந்தால், தனது குடும்ப உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, இன்னுமொரு ஓட்டோ கட்சியொன்றை உருவாக்க முடியும். ராஜபக்சவின் குடும்பத்தினருடன் தொடர்புபட்டவர்கள் தவிர, புதிதாக அமைக்கப் போகும் கட்சியில் உறுப்பினர்கள் எவரும் இணைய மாட்டார்கள்.- என்றார். (ற-ஐ)

# நல்லிணக்க முயற்சிச் சவாலை திறம்படக் கையாள்கின்றது அரசு

## நியூசிலாந்துப் பிரதமர் புகழாரம்

கொழும்பு, பெப்.26
நல்லிணக்கத்தை ஏற்படுத்துகையில் தோன்றும் சவால்களை, ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவின் அரசு திறம்படக் கையாள்வதாக நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.
நான்குநாள் பயணமாக இலங்கை வந்துள்ள நியூசிலாந்துப் பிரதமருக்கு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இங்கு நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ தொடர்ந்து உரையாற்றுகையில்,
இலங்கையில் புதிய ஆட்சியின் கீழ், பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை என்னால் உணர முடிகின்றது. கடந்த 2013ஆம் ஆண்டு நான் இலங்கைக்கு வந்தபோது, பார்த்த விடயங்களைவிடத் தற்போது பல வித்தியாசங்களை உணர்கிறேன்.
உள்நாட்டுப் போர் முடிவுக்குப் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தோன்றும் சவாலான விடயங்கள் மற்றும் கடந்தகால ஊழல் மோசடிகள் போன்றவற்றை இலங்கை ஜனாதிபதி மிகவும் திறம்படக் கையாள்கின்றார்.
குறுகிய காலத்தில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதில் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை ஜனாதிபதி மைத்திரி முன்னெடுத்துள்ளார். ஒரு சவாலான தலைமைத்துவத்தையே இலங்கை ஜனாதிபதி ஏற்றுள்ளார்.
ஆசியப் பிராந்தியத்தில் உண்மையாகப் பிரகாசிக்கும் ஒளியாக, நான் இலங்கையைப் பார்க்கின்றேன். அந்தவகையில், இலங்கையின் பால் உற்பத்தித்துறையை மேம்படுத்த நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளோம்.
இலங்கையில்புதியபாற்பண்ணைகளை அமைத்து, அதன் மூலம் தொழிநுட்பப் பரிமாற்றம், அது தொடர்பான அறிவுகளைப் பரிமாறி இலங்கையின்பால்உற்பத்தியாளர்களுக்கு அதிக வருவாயைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் ஆவன செய்வோம் - என்றார். (த-வ-5)


# ஊழல் பேர்வழிகளை உடன் கைது செய்க

## லஞ்ச, ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் கோரிக்கை

கொழும்பு,பெப்.26
புதிய சட்ட மா அதிபரின் கீழ் லஞ்ச, ஊழல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும், சந்தேகநபர்களைக் கைது செய்யுமாறும் லஞ்ச, ஊழல் எதிர்ப்பு முன்னணியின் தலைவர் உலபனே சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நாம் கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர், முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட ஊழல் மோசடிகளைத் தேடும் நடவடிக்கையில் ஒன்றுபட்டு உழைத்தோம்.

> நாம் கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர், முன்னைய அரச காலத்தில் இடம்பெற்றதாக் கூறப்பட்ட ஊழல் மோசடிகளைத் தேடும் நடவடிக்கையில் ஒன்றுபட்டு உழைத்தோம்.

அதற்கான சகல தகவல்களையும், விசாரணை மேற்கொள்ளும் நிறுவனங்களிடம் வழங்கினோம். இவ்வாறு நாம் செய்ததற்குக் காரணம், நீதியான சமூகமொன்றைக்கட்டியெழுப்புவதும், சுதந்திரமானசட்டத்தைமதிக்கும்சமூகமொன்றை உருவாக்குவதற்குமேயாகும்.
ராஜபக்ச காலத்தின் ஊழல் பேர்வழிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து சட்டத்தின் முன் நிறுத்துவது எமது நடவடிக்கையின் நோக்கமாகும்.
இந்த அரசு ஊழல் பேர்வழிகளுக்கு புகலிடம் வழங்காது என்றும், 'அவர்களைப் பாதுகாக்காது எனவும் நாம் நம்புகின்றோம்.- என்றார். (ற-ஐ)



மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை வந்த நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். (ற)

# தயாரிப்புகளை மீளப் பெறும் பிரபல சொக்லெட் நிறுவனம்

கொழும்பு, பெப். 26
பிரபல சொக்லெட் தயாரிப்பு நிறுவனமான "மாஸ்", இலங்கை உள்ளிட்ட 55 நாடுகளுக்கு விற்பனை செய்த, தமது தயாரிப்புக்களை மீளப்பெறத் தீர்மானித்துள்ளதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
கடந்த மாதம் அமெரிக்க மாஸ் நிறுவனத்தின், நெதர்லாந்து தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ஸ்னிக்கர் வகை சொக்லேட்டை ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் பயன்படுத்தியுள்ளார். இதன்போது சொக்கலேட்டில் சிவப்பு நிற பிளாஸ்டிக் துண்டு காணப்பட்டுள்ளது.
இதன்படி இலங்கை, அமெரிக்கா உள்ளிட்ட 55 நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட மில்லியன் கணக்கான சொக்கலேட் பார்கள் பாதுகாப்பு அற்றவையாக இருக்கலாம் என்று கருதப்படும் நிலையில், உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று நெதர்லாந்தின் மார்ஸ் கூட்டுறவு விவகார இணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

# மகிந்த ராஜபக்ச ஒருபோதும் கட்சியை உடைக்கவில்லை

## டலஸ் அழகப்பெரும கூறுகின்றார்

கொழும்பு,பெப்.26
வரலாற்றில் ஒருபோதும் மகிந்த ராஜபக்ச கட்சியைப் பிளவுபடுத்திச் செல்லவில்லை. சந்திரிகா ஒரே தடவையில் மகிந்தவிடம் கட்சியையும் கையளிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது:
எஸ்.பி.திஸாநாயக்கவால், மகிந்த ராஜபக்சவை இலக்கு வைத்துக் கூறப்படுபவை அனைத்தும் பொய். மகிந்தவுக்கு தற்போது வரை உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்படவில்லை. ஏ.எஸ்.பி. இல்லமொன்றைவழங்க முற்பட்ட போது, பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப்பிரிவுக்கு அழைத்து, அதனை இல்லாது செய்ததாகவும், டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (ஐ)

# மானாப்புல் வனத்தில் தீ

கொழும்பு, பெப்.26
வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் ரொசல்ல பகுதியில் வீதிக்கு மேற்குப்பகுதியில் உள்ள மானாப்புல் வனப்பகுதியில்நேற்றுநண்பகல்தீபரவியுள்ளது. ஐம்பது ஏக்கரைக் கொண்ட இந்த 'மானாப்புல்' வனப்பகுதியின் 5 ஏக்கர் வரை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.
வட்டவளைப்பொலிஸாரும், பொதுமக்களும் பெரும் சிரமத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.
இந்தத் தீ விபத்துச் சம்பந்தமான மேலதிக விசாரணைகளை வட்டவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ)

# விமர்சிப்பவர்கள் அனைவரும் மக்கள் ஆணை பெற்றவரல்லர்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, பெப். 26
குளிரூட்டப்பட்ட கண்ணாடி அறைகளிலிருந்து மகிந்தவை விமர்சிப்பவர்கள் எவரும் மக்களின் ஆணையைப் பெற்றவர் கள் அல்லர். - இவ்வாறு தூய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களால், மகிந்த ராஜபக்ச புதிய கட்சி ஆரம்பிப்பது தொடர்பில் கடுமையான விமர்சனம் முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பதிலளிக்கையிலேயே, உதய கம்மன்பில மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளவர்கள், முடியுமானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சகல உறுப்பினர்களையும் கூட்டி, அவர்களின் முன்னால், மகிந்த ராஜபக்சவை ஏசுமாறு சவால் விடுகின்றேன்.
குளிரூட்டப்பட்ட கண்ணாடி அறைகளிலிருந்து மகிந்தவை விமர்சிப்பவர்கள் எவரும் மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் அல்லர். மாறாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தயவில் அரசுடன் தொங்கிக் கொண்டிருப்பவர்கள் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி அரசும் அதே வழித்தடத்தில்.....?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு இலங்கையின் நல்லாட்சி அரசு பிகு பண்ணுகிறதா?

மேற்போந்த காட்டமான வினாவை எழுப்பி உள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம், தமக்கு நியாயம் கிடைக்கும் என்று பாதிப்புற்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நம்பி எதிர்பார்த்து இருந்தபோதிலும், அது தலைகீழாகிப் போயுள்ளது!

குறித்த தீர்மானம், மனித உரிமைகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட வேளையில், அவர்களுக்கு இருந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இப்போது நொந்து நூலாகி விட்டது எனலாம்.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், முற்றாகக் காய்ந்து கரியாகிப் போய்விடுமோ என்ற ஏக்கமே பாதிப்புற்றவர்கள் மத்தியில் உயர்ந்து எழுந்துள்ளது.

இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளின் பேரில், அதன் குற்றச்செயல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு, கொழும்பு அரசு பின்னடிக்கிறதா என்ற பென்னம்பெரிய வினா உயர்கிறது. அதனைக் கசக்கிக் கடாசிவிட, நல்லாட்சி அரசு அமசடக்காகச் செயற்படுகிறது என்று கருதுவதே பொருத்தம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் சொல் வடிவத்தை, செயற்படுத்துவதில், காட்டப்படும் அசமந்தம்- பலவகைகளிலும் பாதிப்புற்ற தமிழ் மக்களின் நாடிநரம்புகளை முறுக்கிப் பிழிந்து, அவர்களின் ஆன்மாக்களைத் துவம்சம் செய்யும் உள்ளார்ந்த சதியே!

மொத்தத்தில், மகிந்த அரசை விடவும் நல்லாட்சி அரசு, சிரித்துப் பேசி, தமிழர்களுக்கு இழைக்கும் மாபெரும் மனித உரிமை மோசடி என்றும் இதனைக் கொள்ளலாம். உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் "சதி" எனவும் இது கருதத்தக்கது. மகிந்தவும்-மைத்திரியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற நிலையை இது உயர்த்திக் காட்டுகிறது அல்லவா?

வாயால் நெய் ஒழுகப் பேசி, காலால் காடாசித் தள்ளும் போக்கே தொடரும் என்பதற்கான "சைகை" என்றுகூட இதனைக் கொள்ளலாம்!
பெரும்பான்மை இனத்தவரின் கருத்துக்களை சிறுபான்மையினர் மீது திணிக்கக்கூடாது--
சிறுபான்மையினரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என்று அரசின் அமைச்சர்கள் ஒரு புறத்தில் "ஐஸ்" வைத்துவரும் நிலையில்--

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை மட்டும் சொற்பதமாக்கி ஏய்க்காட்டும், புலுமாசு விடும் அரசின் போக்கு நியாமானது தானா?

இனிப்பான பணியாரத்தை வழங்கியாவது, ஈழத்தமிழ் மக்களைச் சாந்தப்படுத்தி விடலாம் என்ற உள்நோக்குடனேயே, இன்றைய நல்லாட்சி அரசு ஐ.நாவின் தீமானத்தை நடைமுறைப்படுத்துவதை இழுத்தடிக்கும் போக்கில் முனைப்புக் காட்டுகிறது. அதுவே வெட்ட வெளிச்சம்.
இதனை யாரிடம் சொல்லி அழமுடியும்?


# மகிந்தவின் சவால்களை முறியடிப்பார் ஜனாதிபதி

■ சேரலாதன்

நாட்டின்தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பார்க்கும்போது நல்லாட்சிக்கு எதிராக மகிந்த தரப்பினர் எதுவுமே செய்ய முடியாததொரு நிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆர்ப்பாட்டம் இல்லாது அமைதியாக இருந்து மகிந்த தரப்பினருக்கு எதிராக காய்களை மெதுவாகஆனால் உறுதியாக நகர்த்தி வருகின்றார். அதற்கு ஈடு கொடுக்க முடியாதவர்களாக மகிந்தவும், அவரைச் சேர்ந்தவர்களும் விழி பிதுங்கி நிற்கின்றனர்.
மகிந்த, அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் மீது ஏராளமான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைக்கும் விதமாக பெரி ய அளவிலான ஊழல்களும், மோசடிகளும் இடம்பெற்றிருப்பது விசாரணைகள் மூலமாகத் தெரியவந்துள்ளது. ஆனால் தம்மை அரசியல் ரீதியாகப் பழிவாங்குவதற்காகவே இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாக மகிந்தவும், அவரைச் சேர்ந்தவர்களும் கூறி வருகின்றனர்.
மகிந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்த வெற்றிவீரன் என்ற மாயை தென்பகுதியில் உள்ள கணிசமான எண்ணிக்கையினரான மக்களிடையே இன்னமும் காணப்படுகின்றது. இதைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தமது அரசியல் குறிக்கோளை எட்டிவிட முடியுமென மகிந்த நினைக்கின்றார்.
மகிந்தவின் புதல்வரும், கடற்படை அதிகாரியுமான யோசித ராஜபக்சவின் கைது, மகிந்தவின் குடும்ப உறுப்பினர்களை மட்டுமல்லாது அவரைச் சேர்ந்தவர்களையும் அதிர்ச் சிக்குள் தள்ளிவிட்டது. அரசு இவ்வளவு விரைவாக யோசிதவில் கை வைக்குமென அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.
ஏதாவது அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி அரசைக் கவிழ்த்து விட்டால் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பிவிடலாமென இவர்கள் போட்டு வைத்த கணக்கு தப்புக் கணக்காகவே முடிந்து விட்டது.
யோசித மீதான விசாரணைகள் பல்வேறு கோணங்களிலும் இடம்பெற்று அவர் குற்றம் இழைத்தமை உறுதி செய்யப்பட்ட பின்னரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரைப் பிணையில் விடுவிப்பதற்கு மேல் நீதிமன்றம் வரையிலும் சென்றபோதிலும் பயன் கிட்டவில்லை. மகிந்த தமதுவழக்கமான தேசிய ஆடைகளுக்கு மேல் கறுப்பு நிறக் கோட் அணிந்து நீதிமன்றம் சென்ற போதிலும் அங்கும் தோல்வியே அவருக்கு ஏற்பட்டது. தமது ஆட்சிக் காலத்தில் நீதித் துறையைத் துச்சமாக மதித்து நடந்த மகிந்த இதை ஒரு போதுமே எதிர்பார்த்திருக்க மாட்டார்.
இதேவேளைசிறிலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து ஜனாதிபதியைப் பலவீனமாக்கும் முயற்சிகளும், புதிய கட்சியொன்றைத் தொடங்குவதற்கான அறிவிப்புக்களும் தற்போது அடங்கி ஓய்ந்துபோய்க் காணப்படுகின்றன. யோசிதவின் கைது நடவடிக்கையின் போது இருந்த கொந்தளிப்புக்களும் அடங்கி விட்டன.
இதேவேளைமகிந்த தரப்பினர் என்னதான் அரசுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும்



இடையில் குழப்பங்களை ஏற்படுத்த முயன்றாலும், குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடருமென ஜனாதிபதி அறிவித்து விட்டார்.
சர்ச்சைக்குரிய கலகொட ஞானசாரதேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதால் நாட்டில் பெரும் குழப்பங்கள் ஏற்படுமெனச் சிலர் எதிர்பார்த்தனர். இலங்கையொரு பௌத்த நாடு என்று கூறப்பட்டு வரும் நிலையில், பௌத்த தேரர் ஒருவரின் கைது நடவடிக்கையைச் சாதாரணமானதொன்றாக எவரும் எடைபோட்டுவிட முடியாது. ஆனால் ஒரு தேரராக இருந்து கொண்டு ஞானசார தேரர் புரிந்த அடாவடித்தனங்கள் தொடர்பாக அனைவருமே அறிந்து வைத்துள்ளதால் அது குறித்து எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை. இதே போன்றதொரு நிலைதான் மகிந்தவுக்கும் ஏற் படப் போகின்றது. போரை வென்ற யுகபுருசர் என்ற கௌரவம் தொடர்ந்தும் அவருக்குக் கிடைக்குமென அவர் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களால் அவரது நற்பெயருக்கு நிறையவே களங்கம் ஏற்பட்டு விட்டது. இதைவிடநாட்டு மக்கள் தற்போது கெடுபிடிகள் குறைந்த நிலையில் தமது அன்றாட கடமைகளை ஆற்ற முடிகின்றது. அவர்கள் மகிந்த வின் ஆட்சிக்காலத்தில்நிலவிய இருண்டயுகத்தை எளிதில் மறந்து விடமாட்டார்கள். ஆகவே மகிந்த எதிர்பார்க்கின்ற மக்களின் ஆதரவு அவருக்குக் கிடைக்கப் போவதில்லை.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழல் இல்லாத, எளிமை நிறைந்த ஒருதலைவர் என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதால் அவர் ஆட்சியில் இருந்து அகற்றப்படுவதை விரும்பவே மாட்டார்கள். அத்துடன் சிறுபான்மை மக்களின் ஆதரவும் இவருக்கு உண்டு.
ஆகவே மகிந்த தலைகீழாக நின்றாலும் தற்போதைய அரசை அசைக்க முடியாது என்பதுதான் உண்மையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகி விடுமா?

எம்.ஐ.முபாறக்

நாடுகளுக்கிடையில் காணப்படும் வளங்களைப் பகிர்ந்து வர்த்தகத்திலும் ஏனைய விடயங்களிலும் அபிவிருத்தியை அடையும் நோக்கில் 1993 ஆம் நவம்பர் மாதம் முதலாம் திகதி உருவாக்கப்பட்டதுதான் ஐரோப்பிய ஒன்றியம் என்ற அமைப்பு. பொருளாதார பலத்தைக் கொண்ட ஐரோப்பிய வலயத்துக்குள் வருகின்ற 28 நாடுகள் இந்த அமைப்பின் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன.

இந்த நாடுகளின் மக்களால் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தெரிவுசெய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக இந்த ஒன்றியம் நிர்வகிக்கப்படுகின்றது.

### ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 நாடுகள்

இந்த நாடுகளுக்கு என்று பொதுவான சட்டங்களும் உருவாக்கப்பட்டு அவை முறைப்படி பின்பற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக, நாணயம், நுழைவிசைவு (நுழைவுவிசா அனுமதி முறைமை போன்ற விடயங்கள் பொது வானவையாக இருக்கின்றன. இந்த ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 28 நாடுகளுள் பிரிட்டனும் ஒன்றாகும். ஒன்றியத்தின் பொதுவான விதிகள் பலவற்றுக்கு உடன்பட மறுக்கும் ஒரேயொரு நாடு என்றே பிரிட்டனைச் சொல்ல வேண்டும். இந்த ஒன்றியத்துக்குள் தான் தனித்துச் சிறப்புடன் செயற்பட வேண்டும் - ஏனைய நாடுகளை விடவும் சிறப்புத்தன்மையுடன் திகழ வேண்டும் என்று இந்த நாடு விரும்புகின்றது. அந்தவகையில், உறுப்பு நாடுகளுக்கு இடையிலான பொதுவான நாணயம் மற்றும் பொதுவான நுழைவிசைவு முறைமை போன்றவற்றை பிரிட்டன் பின்பற்றுவதில்லை. சில விடயங்களைக் கவனத்தில் கொண்டு உறுப்பு நாடுகள் இதற்கு அனுமதி வழங்கியுள்ளன.

இருந்தும், ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் இருந்துகொண்டு பிரிட்டனை மிகவும் பலமிக்க நாடாக மாற்றுவதற்கு பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் செயற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்காகத் தான்முன் வைக்கும் நிபந்தனைகளை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கவேண்டும். இல்லாவிட்டால் தாம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிவிடு வோம் என அந்நாடு ஒன்றியத்தை மிரட்டி வருகின்றனர்.

இந்த விவகாரம்தான் இப்போது ஐரோப்பிய நாடுகளில் சூடுபிடித்துள்ளது. பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருப்பதா? அல்லது வெளியேறிவிடுவதா? என்று தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை அந்நாட்டின் பிரதமர் கமரூன் இப்போது அந்நாட்டு மக்களின் கைகளில் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் சர்வஜன வாக்கெடுப்பு இந்த வருடம் ஜூன் மாதம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

### வெளியேறுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள்

ஒருவேளை, மக்களின் தீர்ப்பின்படி, பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறினால் அந்த நாடு அடையப்போகும் நன்மை, தீமைகள் பற்றி அரசியல் ஆய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.ஐரோப்பிய ஒன்றியத்துடனான பிரிட்ட னின் உறவு மீள் பரிசீலனை செய்யப்படும் என்பது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்நாட்டுப் பிரதமர் டேவிட் கமரூன் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளுள் ஒன்றாகும். தேர்தலில் அவர் வெற்றி பெற்றதன் பின்னர் அந்த வாக்குறுதிகளுக்கு அமைவாக செயற்படத் தொடங்கினார். பிரிட்டனுக்குச் சாதகமான பல கொள்கைகளை வகுத்து அதன் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் பேசத் தொடங்கினார்.

இது தொடர்பில் இந்த மாதம் 18 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைநகரான பிரசல்ஸ் நகரில் இருநாள் உச்சி மாநாடு இடம்பெற்றது. உச்சி மாநாடு முடிந்து 20ஆம் திகதி பிரிட்டன் பிரதமர் ஏனைய உறுப்பு நாடுகளான 27 நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்தும் இணைந்திருப்பதற்கான நிபந்தனைகளை அங்கு அவர் சமர்ப்பித்தார். அவை அங்கு ஆராயப்பட்டு பல நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரசைகள் குறைந்தது நான்கு வருடங்களுக்கு பிரிட்டனில் தொழில் வாய்ப்புப் பெறமுடியாது என்ற நிபந்தனையே அவற்றுள் முக்கியமானதாகும். அந்த நாடுகளின் பிரசைகளின் பிள்ளைகள் எவ்வளவு காலம் பிரிட்டனில் வாழ்ந்திருந்தாலும் கூட, தொழில் வழங்கப்பட மாட்டாது என்று அந்த நிபந்தனை மேலும் சொல்கிறது.

இது உட்பட மேலும் பல முக்கிய நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. தாம் எதிர்பார்த்த சலுகை தமக்குக் கிடைத்துள்ளது என்று பிரிட்டன் பிரதமர் தெரிவித்துள்ளார். இருந்தாலும், இந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை பிரிட்டனின் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். அந்தத் தீர்மானத்தை அறிவதற்காக ஜூன் மாதம் 23 ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

ஒருவேளை, பிரிட்டன் ஒன்றியத்தில் இருந்து விலக வேண்டும் என்று மக்கள் தீர்ப்பளித்தால், அதனால் அந்த நாடு அடையப்போகும் நன்மைகளை விட தீமைகளே அதிகமாக இருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# மக்களைக் காப்பாற்ற வேண்டியது பொலிஸாரின் கடமையல்லவா?

அண்மையில் கோப்பாயில் ஏழு வீடுகளில் துணிகரத் திருட்டு நடைபெற்றது. அதுவும் கோப்பாய் பொலிஸ்நிலையம் இருக்கும் அதே கிராமத்தில், திருட்டு இடம் பெற்றுக் கொண்டிருந்தபோதே வீட்டுக்காரர் தொலைபேசியில் பொலிஸ் நிலையத்துக்கு நள்ளிரவு 12.30 க்கு சம்பவம் பற்றித் தெரிவித்தபோதும் திருடர்கள் அங்கிருந்து அகன்று சென்ற பின்னரே அதாவது அதிகாலை 3 மணிக்குத்தான் பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தேன். அதை வாசித்த போது சிவஞான சுந்தரத்தின் சிரித்திரன் சஞ்சிகையில் இடம்பெற்ற நகைச் சுவைப் படம் ஒன்றுதான் நினைவுக்கு வந்தது. ஒருபுறம் ஒருவன் இன்னொருவனுக்குக் கத்தியால் குத்திக்கொண்டிருக்கிறான். மரத்தின் பின்னால் மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருக்கும் பொலிஸ்காரர் ஒருவர், இறைவா இறப்பவனின் ஆத்மாவைச் சாந்தியடையச் செய் என்று பிராத்தித்துக் கொண்டிருக்கிறார் இதே போல திருட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கோப்பாய் பொலிஸாரும் இறைவா இறப்பவர்களின் ஆத்மாவைச் சாந்தியடையச் செய். திருட்டுப்போன பொருள்களை மீளப்பெற்றுக் கொடு என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்தபடியே பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்களோ தெரியவில்லை. அண்மைக்காலங்களில் பொலிஸாரிடம் குற்றவாளிகளை இணங்காட்டினா லும் அவர்கள் அடுத்த நிமிடமே விடுதலை செய்யப்படும் செயற்பாடுகள் அதிகரித்து வருவது மீண்டும் பொலிஸாருக்கும் குற்றவாளிகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளதா என்ற சந்தேகத்தைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தக் காரணமாகிறது. பொலிஸார்தான் இப்படி என்றால், பொது மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட, ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் மாகாண சபை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? தமிழீழம் பெற்றுத்தருவது, சுயாட்சி பெற்றுத் தருவது, காணி பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுத் தருவது போன்ற பெரிய விடயங்களில் மட்டும் தான் முழுக் கவனமும் செலுத்துவார்களா? திருட்டுக்களின் போது சம்பவம் தொடர்பாக பொலிஸாரைத் துரிதமாகச் செயற்படத் தூண்டுவது அல்லது மாற்று வழிகளை மக்களுக்கு அறிவுறுத்துவது ஆகிய சின்ன விடயங்களில் கவனம் செலுத்தமாட்டார்களா?

*சு.அகிலன், கோப்பாய்.*

# கயவர்கள் தண்டிக்கப்படவேண்டும்

எதிர்காலச் சந்ததியினருக்கு ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் கற்றுக் கொடுக்கின்ற முக்கியமான பொறுப்பு ஆசிரியர்களுக்கு உரியது.

இவர்களின் பணி கல்வியுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்படுவதில்லை. தம்மிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவர்களுக்கு நல்லவற்றைப் போதித்து அவர்களைச் சமூகத்திலே உயர்ந்த இடத்தை எட்ட வைக்க வேண்டிய பொறுப்பும் இவர்களையே சாரும்.

ஆனால் சமீப காலமாகச் சில ஆசிரியர்களின் நெறி பிறழ்ந்த செயல்கள் தொடர்பாக வெளிவருகின்ற செய்திகள் ஒட்டுமொத்த ஆசிரிய சமூகத்தையே தலைகுனிய வைத்துள்ளது.

பாடசாலை மாணவிகள் சிலரை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக சில ஆசிரியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எந்த வகையிலும் மன்னிக்கக் கூடியவை அல்ல. தம்மிடம் கல்வி கற்ற மாணவிகள் மீது இவர்கள் புரிந்த துரோகம் மானிட தர்மத்துக்கே விரோதமானது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீட மாணவிகளிடம் தவறாக நடக்க முற்பட்ட துறைசார் முக்கியத்தர் ஒருவர் பல்கலைக் கழகத்தின் பேரவையால் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டதாக வெளிவந்த செய்தி அருவருப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தி விட்டது. வயது வந்த பெண் பிள்ளைகள் கல்வி கற்கின்ற அந்த உயர்ந்த நிறுவனத்தில் அவர்களுக்குப் பொறுப்பாக இத்தகைய கேவலமான மிருகங்கள் இருப்பதை எந்தப் பெற்றோரும் ஏற்கமாட்டார்கள்.

ஆகவே தயவு தாட்சணியமில்லாது மேற்படி நபருக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும். இத்தகையோர் எதிர்காலத்தில் எந்த இடத்திலும் பணி புரியாதவாறு தடைகள் விதிக்க வேண்டும்.

ஒரு புனிதமான பணியில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் மத்தியில் சில கயவர்களும் இருப்பதால் முழு ஆசிரிய சமூகத்துக்கும் அது அவமானத்தைக் கொடுத்து வருகின்றது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், பெண் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் கல்வி கற்பதற்கென அனுப்புவதற்குப் பெற்றோர் தயங்கும் நிலையும் உருவாகிவிடும்.

ஆகவே எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

*த.சிவாஜினி*
*மானிப்பாய்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம் வெற்றி பெற்றால் கனடாத் தீவில் அரசியல் அகதிகளாக அமெரிக்கர்கள் குடியேறலாம் எனும் அழைப்பைக் கனடாத் தீவு விடுத்துள்ளது. அட்லான்டிக் பகுதியில் நோவா ஸ்கொட்டியா பகுதியில் அமைந்துள்ள கேப் பிறீட்டன் தீவில் இவ்வாறு குடியேறலாம் என அழைப்பு விடுக்கப்பட்டது. உள்ளூர் வானொலி அறிப்பாளரால் இந்தத் திட்டம் நகைச்சுவையாக முன்வைக்கப்பட்டது. தற்போது இணையத்திலும் இது தொடர்பான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மோசமான ஆட்சியில் இருந்து அமெரிக்கர்கள் தப்பித்துக் கொள்ளலாம் எனும் பொருள்பட இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த இணையத்தளம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, அமெரிக்க அரசியல் நிலையையும் சிந்திக்க வைத்துள்ளது. (ரி4)

# வட...
# அமெ...

## ஐதரசன்...

வொசினனங்டன், பெ...
அமெரிக்காவும் சீ...
வடகொரியாவை ஐ...
பாதுகாப்புச் சட்டத்தி...
நீக்குவதாக ஒப்பந்...
கொண்டுள்ளன.
வடகொரியாவில் இ...
ஐதரசன் குண்டுப் ...
ணையின் விளைவா...
ஒப்பந்தம் கைச்சா...
டுள்ளது என பாதுகாப்...
அதிகாரி ஒருவர் நே...
தினம் தெரிவித்தார். இ...
மாணம்வடகொரியா...
இக்கட்டுக்குள் தள்ளி...
என அரசியல் அவ...
தெரிவித்துள்ளனர்.
இரு நாடுகளுக்கி...
போதும், பல விடய...

# ஐ.எஸ். அமைப்பின் இணைய நகர்வுகளை முடக்க அமெ. திட்டம்

## சிறப்பு உயர் தொழில் நுட்பக் குழு அமைப்பு

வொசிங்டன், பெப்.26
ஐ.எஸ். அமைப்பின் இணையத்தள நகர்வுகளை முடக்க, உயர் தொழில் நுட்பக் குழுவை அமெரிக்கா நிறுவியுள்ளது. இணையத் தாக்குதலை மேற்கொள்வதற்காக இந்தக் குழுவை நிறுவியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம், பிரபல நிறுவனங்களான அப்பிள், டுவிட்டர், ஸ்னப்சட், பேஸ்புக், எம்.டி.வி மற்றும் ஏனைய நிறுவன நிர்வாகிகளுடன், நீதித்துறை அதிகாரிகளும், உளவுத்துறை அதிகாரிகளும் இணைந்து உயர் தொழில் நுட்பக் குழு தொடர்பிலான கலந்துரையாடலை நடத்தினர்.

தீவிரவாத எதிர்ப்பு மையப் பணிப்பாளர் நிக் ரஸ்முசென் தெரிவிக்கையில்; சமூக வலைத்தளம் மூலம் போராளிக் குழுக்கள் முன்னேறி வருகின்றன. ஓநாய் தாக்குதல் உக்தியைப் பிரயோகித்துத் தாக்குதல்களை நிகழ்த்துகின்றனர் எனத் தெரிவித்தார்.

மேலும் சமூக வலைத்தளங்களில் நாம் ஆக்கிரமிப்புச் செய்வதன் மூலம், நல்ல பயனை அடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் அப்பிள் நிறுவனம் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தரமான உயர் தொழில் நுட்பச் சாதனங்களை விற்பனை செய்வதனால் மக்களின் பாதுகாப்பு, தகவல் பரிமாற்றம் என்பவற்றில் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும் என்ற பொறுப்பு உணர்த்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், வெள்ளை மாளிகை பிரதிநிதிகள் மற்றும் நீதித்துறை சார்ந்த அதிகாரிகள், அப்பிள் நிறுவனத்தின் நிர்வாக மோதல்கள் குறித்த கருத்துக்களைக் கூற மறுத்து விட்டனர்.

இந்த கூட்டத்தில் பிரிட்டன் தூதரகம் வெளிப்படையான பங்களிப்பைச் செய்திருந்தது. ஐ.எஸ். அமைப்பின் நகர்வுகள், பரப்புரைத் திட்டங்கள், தொடர்புகள், அவர்களுக்கிடையில் நிலவும் தொடர்பாடல்கள் என்பனவற்றைக் குறித்த தொழில்நுட்ப நிறுவனங்கள் அவதானிக்க வேண்டும் எனக் கருத்துப் பகிரப்பட்டது.

ஐ.எஸ். அமைப்பின் நகர்வை அவதானிக்க மென்பொருள் ரீதியில் சிறப்புத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இவ்வாறான ரகசியத் திட்டங்கள் குறித்து தனது டுவிட்டரில் தெரிவித்திருந்தார். முன்னதாக கடந்த ஜனவரி மாதத்தில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய 125 ஆயிரம் டுவிட்டர் கணக்குகள் டுவிட்டர் நிறுவனத்தால் முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# விடுதலையானார் சஞ்சய் தத்

புதுடில்லி, பெ 26
மும்பை தொடர் குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கில் சிறைத் தண்டனை பெற்று, புனே எரவாடா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஹிந்தி நடிகர் சஞ்சய் தத், நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மும்பையில் கடந்த 1993ஆம் ஆண்டு இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில், பொதுமக்கள் 257 பேர் கொல்லப்பட்டனர்.மேலும் ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணையில் சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக நடிகர் சஞ்சய் தத் கைது செய்யப்பட்டார். அவருக்கு மும்பை தடா நீதிமன்றம் 6 வருடச் சிறைத் தண்டனை விதித்தது.

பின்னர், கடந்த 2013ஆம் ஆண்டு, அவரது சிறைத் தண்டனையை உச்ச நீதிமன்றம் 5 வருடங்களாகக் குறைத்து உத்தரவிட்டு இருந்தது.

நடிகர் சஞ்சய் தத், ஏற்கெனவே ஒன்றரை வருடம் தண்டனையை அனுபவித்து விட்டதால், எஞ்சிய மூன்றரை வருடங்கள் சிறை வாசத்துக்காகச் சரண் அடைந்தார்.

இந்த நிலையில் அவரை விடுதலை செய்ய முடிவு செய்த மஹாராஷ்டிரா அரசு நேற்றுக் காலை விடுதலை செய்தது. நல்ஒழுக்கம் மற்றும் சிறையில் வழங்கப்பட்ட வேலையைச் சிறப்பாக செய்தமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மன்னிப்பு அடிப்படையில் 8 மாதங்களுக்கு முன்கூட்டியே அவரை விடுவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (த)



தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 68 ஆவது பிறந்த தி...
படத்தைப் பச்சை குத்தியுள்ளனர். எல்லாம் எமக்கு அம்...
அவரது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அ...
தெரிவித்தனர். மேலும் 68 ஆவது பிறந்த தினத்தை மு...

# மலை போல் குவியும் கழிவுகள்; தி...

பெய்ரூட், பெப்.26
லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பெருமளவு கழிவுகள் தேக்கமடைந்து உள்ளன. நகரில் குப்பைகள் தொடர்ந்து தேங்குவதால் அவை பார்ப்பதற்கு ஆறு போன்று காட்சியளிக்கின்றது.

புறநகர் பகுதியில் பல நூறு மீற்றர்கள் தூரத்துக்குக் கழிவுகள் தேக்கமடைந்திருப்பது நாட்டில் செயல்படாத அரசியல் நிலையைக் காட்டுகிறது எனச் சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் நடமாட்டமுள்ள நகரப் பகுதியில் குப்பைகள் தேங்கி இருப்பதால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

நகர அதிகாரிகள் கடந்த ஜூலை மாதம் குப்பை கொட்டும் பிரதான இடத்தை மூடியுள்ளனர். அதற்குப் பதிலாக வேறொரு இடத்தை இன்னமும் கண்டு பிடிக்காததால் இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. மலைபோன்று குவியும் குப்பைகளை அப்புறப்படுத்தக்கோரிக்கை விடுத்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க இராணுவத்தினரும் ஆர்ப்பாட்டம் நடக்கும் பகுதிக்கு விரைந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதன் பின்னர் மக்கள் குடியிருப்புப் பகுதிக்கு அண்மையில் குப்பைகள் கொட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பின்னரே இவ்வாறான நெருக்கடிக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர். இதன் பின்னர் பிரிட்டன் நிறுவனம் ஒன்று. மீழ்சு...
ஏற்றுமதி செய்...
ஏற்க மறுத்...
முடிந்தது என...
மைப்புச்சபை...
இந்தப் பிரச்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியாவுக்கு எதிராக
# மரிக்கா–சீனா ஒப்பந்தம்

## ன் குண்டுப் பரிசோதனையை அடுத்து

ன், பெப்.26
வும் சீனாவும்,
வை ஐ.நாவின்
ட்டத்திலிருந்து
ப்பந்தம் மேற்
ன.
ல் இடம்பெற்ற
டுப் பரிசோத
ளவாக இந்த
கச்சாத்திடப்பட்
துகாப்புச் சபை
ர் நேற்று முன்
தார். இந்தத் தீர்
ரியாவைமேலும்
தள்ளியுள்ளது
அவதானிகள்
னர்.
க்கிடையில் முரண்பாடுகள் இருக்கின்ற
விடயங்களில் இரு நாடுகளுக்குமிடையில்

> இரு நாடுகளுக்கிடையில் முரண்பாடுகள் இருக்கின்ற போதும், பல விடயங்களில் இரு நாடுகளுக்குமிடையில் பல ஒப்பந்தங்கள் உள்ளன என அதிகாரி தெரிவித்துள்ளார். வடகொரியாவின் ஐதரசன் பரிசோதனை தொடர்பில் அமெரிக்கா நடத்திய ஆய்வில், மூலக்கூற்றுச் சேர்வையில் ஏற்பட்ட வழுக் காரணமாகச் சோதனை வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

பல ஒப்பந்தங்கள் உள்ளன என அதிகாரி தெரிவித்துள்ளார்.
வடகொரியாவின் ஐதரசன் பரிசோதனை தொடர்பில் அமெரிக்கா நடத்திய ஆய்வில், மூலக்கூற்றுச் சேர்வையில் ஏற்பட்ட வழுக் காரணமாகச் சோதனை வெற்றியளிக்கவில்லை எனத் தெரி வித்துள்ளது.
அத்துடன் இம்மாதம் இடம்பெற்ற ஏவுகணைச் சோதனையும் சர்வதேச விதிகளுக்குப் புறம்பானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸும், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜியும் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் சந்திப்பை நடத்தினர். இரு நாடுகளும் வடகொரியாவின் அணு ஆயுதப் பரிசோதனையைக் கண்டித்ததோடு, இதனைத் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவித்தனர். (து–ரி4)



றந்த தினத்தை முன்னிட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தவர்கள் ஜெயலலிதாவின்
அம்மா தான் எனும் பொருளில் இந்த பச்சை குத்தும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. கட்சித் தலைமையகத்தில்
றன. அம்மா எமக்கு கடவுள் மாதிரி, எமக்குப் பல உதவிகளை அவர் புரிந்துள்ளார் என அவரது ஆதரவாளர்கள்
தை முன்னிட்டு, 68 தம்பதியர்களுக்கு ஒரே மேடையில் திருமணங்கள் செய்து வைக்கப்பட்டன. (து–ரி4)

# ிணறுகின்றது லெபனான் அரசு

மீழ்சுழற்சிக்காகக் குப்பையை ரஷ்யாவுக்கு
தி செய்யத்திட்டமிட்டது. ஆனாலும் ரஷ்யா இதனை
மறுத்ததால் அந்த முயற்சியும் தோல்வியில்
ந்து என லெபனானின் அபிவிருத்தி மற்றும் புனர
ச்சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். மேலும்
பிரச்சனைக்கு இன்னமும் தீர்வு காணப்பட

வில்லை எனவும் தெரிவித்தார்.
2014 ஆம் ஆண்டில் இருந்து நாட்டுக்கான புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதில் வேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. நாட்டில் தண்ணீர், மின்சாரம் ஆகிய திட்டங்களில் ஊழல் நிலவி வருவதுடன், நாட்டின் நிலை மோசமடைந்துள்ளது. (து–ரி4)





# அமெ. மாநிலங்களில் தொடரும் கடும் புயல்

## தொடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வொசிங்டன், பெப்.26
அமெரிக்காவின் லூசியானா, மிசி–சிப்பி மாநிலங்கள் சூறாவளியினால் சேதத்துக்குள்ளாகின. இந்தச் சூறாவளியினால் 3 பேர் உயிரிழந்ததுடன், 30 பேர் காயமடைந்துள்ளனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கிய சூறாவளியில், நூற்றுக் கணக்கானோரின் வீடுகள், வியாபார நிலையங்கள், வாகனங்கள் என்பவை அழிந்தன. பல தசாப்த காலங்களில் இல்லாத அளவுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது என லூசியானா பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். லூசியானா, மிசி–சிப்பி மாநிலங்களில் அவசர காலநிலை பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது.
லூசியானாவில் 90 சதவீத நடமாடும் வீடுகள் சூறாவளியினால் அழிவடைந்துள்ளன.
கடந்த 36 வருடங்களில் இல்லாத அளவுக்குச் சூறாவளி தாக்கியுள்ளது என மாநிலப் பொலிஸ் அதிகாரி மைக் எட்மொன்சன் தெரிவித்தார். லூசியானா மாநில ஆளுநர், மீட்புப்பணிகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்தார். இடம்பெற்ற பெரும் இயற்கை இடரில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பது அற்புதமான விடயம் என அவர் மேலும் தெரிவித்தார். மருத்துவமனைத் தகவல்களின் பிரகாரம் 31 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மிசி–சிப்பி ஆளுநர் பில் பிறயன்ட் தெரிவிக்கையில், எமது மாநில மக்கள் வானிலைக்குத் தக்கதாக தம்மை ஆயத்தப்படுத்தவேண்டும். அவற்றுக்கான திட்டங்கள், பாதுகாப்புத் தங்குமிடங்கள் என்பன அமைக்கப்படவேண்டும் என தெரிவித்தார்.
22 வானிலை அறிக்கைகளில், அலபாமா, புளோரிடா, லூசியானா மற்றும் மிசி–சிப்பி ஆகிய மாநிலங்களில் குறைந்தது 5 சூறாவளிகள் தாக்கும் எனச் சூறாவளி எதிர்வு கூறல் மையத்தினால் தகவல் வெளியிடப்பட்டது. மேலும் தொடர் இடர்கள் குறித்து எச்சரிக்கப்பட்டதோடு, இடி மின்னலில் இருந்து மக்கள் தம்மைப் பாதுகாக்கும்படி வானிலை மையம் அறிவுறுத்தியிருந்தது. (து–ரி4)



# சாரதியைத் தள்ளி விழுத்தி பஸ்ஸைச் செலுத்திய பெண்

நியூயோர்க், பெப்.26
அமெரிக்காவின் நியூயோர்க்கில் பயணிகள் பேருந்தில் பயணித்த பெண்ணொருவர் திடீரெனச் சாரதியைத் தள்ளிவிட்டு பஸ்ஸை ஓட்டிச்சென்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவிக்கையில், பேருந்தில் பயணித்த குறித்த பெண் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த சாரதி பேருந்தினுள் புகைக்க வேண்டாம் எனத் தெரிவித்தார். ஆனால் அதனைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அவர் புகைத்துக் கொண்டிருந்தார். அவரது செயற்பாடு ஏனைய பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது.
இதனால் பேருந்துத் தரிப்பிடத்தில் அவரை இறக்கி விட முடிவு செய்தார் பஸ் சாரதி. வேறு தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்றுவதற்குச் சாரதி முற்பட்ட போது, அவரைத் தள்ளி வீழ்த்திய அந்தப் பெண் தாம் சாரதியின் இருக்கையில் அமர்ந்து கொண்டார். பின்னர் அவர் விரும்பிய விதத்தில் பேருந்தை ஓட்டினார். ஒருவாறு பொலிசார் பேருந்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். இதன் பின்னர் இந்தக் குழப்பநிலை ஒரு முடிவுக்கு வந்தது. பேருந்தைத் தனது விருப்பப்படி ஓட்டிய பெண் பின்னர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் அங்கு இருந்தவர்களால் ஒளிப்படம் எடுக்கப்பட்டது. (து–ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் பொருந்திய சங்கடஹர சதுர்த்தி விரதம்

■ மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்,

திருக்கைலாய மலையில் மந்திர சித்திர மண்டபத்துக்குப் பார்வதியுடன் பரமேஸ்வரர் எழுந்தருளினார். அங்கே ஏழு கோடி மந்திர சித்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றின் நடுவில் சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப்பிரணவம் என்ற இரு பிரணவங்கள் இருந்தன. அந்த இரு பிரணவங்கள் மீது சிவமும், சக்தியும் திருக்கண் சாத்தியருளினார்கள். அந்த இரு பிரணவங்களும் ஒன்றோடொன்று மருவ அந்தப் பிரணவங்களிலிருந்து பிரணவாகார யானை முகத்துடன் விநாயகப் பெருமான் அவதரித்தார்.

பிள்ளையார் அம்மையப்பன் அடமலர்களை வணங்கினார். செம்மை நிறமுள்ள அக்குழவியை அம்மையப்பர் எடுத்து உச்சிமோந்து உவந்து உன்னை உள்ளன்புடன் வணங்கினோர்க்கு வரும் இடையூறுகளைக் களைந்து இன்னருள் செய்க என்று கூறி கணங்கட்கெல்லாம் தலைவராக்கி ஆசி கூறினார். ஆதலால் கணபதி, கணேசன், கணாதிபன் என்ற திருநாமங்களைப் பெற்றார்.

இத்தகு விநாயகருக்கு உகந்தது விநாயகர் சதுர்த்தி. எமது வினைகள் யாவற்றையும் தீர்க்கும் சதுர்த்தி என்பார்கள் பெரியோர்கள். சங்கடங்கள் யாவும் நீக்கி எம்மை சந்தோசத்தில் ஆழ்த்தும் இந்த விரதம் பற்றிய கதையே அலாதியானது. ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி நாளில் வரும் இந்தத் திருக்கதையைப் படித்து பிள்ளையாரை வழிபட்டால் எல்லையற்ற ஆனந்தம் பெறலாம்.

ஒரு தடவை விநாயகர் பரவசம் மேலிட அபிநயத்துடன் ஆடிக்கொண்டிருந்தார். ஆனைமுகன், சலங்கைகள் ஒலிக்க, துதிக்கரம் தூக்கி பெரும் வயிற்றோடு ஆடும் நடனத்தைக் காண பெரும் பேறு



வேண்டும். ஆனால் அந்தப்பாக்கியம் கிடைத்தும் பரவசப்படாமல் கேலியாகச் சிரித்தான் ஒருவன். அவன் யார் தெரியுமா? சந்திரன்தான். திருக்கைலாய மலைக்கு வந்து கொண்டிருந்த சந்திரன் ஏதோ நடனவோசை காதில் விழ நின்று கவனித்தபோது, அங்கு பிள்ளையார் நடனமாடிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அடக்க முடியாது கண்களில் கண்ணீர் வரும்வரை சிரித்தான்.

கடுங்கோபம் கொண்டார் கணபதி. அழகில் சிறந்தவன் தானே எனும் கர்வ மிகுதியால் சிரிக்கும் சந்திரனைப்பார்த்து அவனது அழகெல்லாம் கரைந்து போகச் சபித்தார்.மேலும் உன்னைத் தரிசிப்போருக்கும் வீண் அபவாதங்கள் வரும். எனவே எவரும் உன்னைத் தரிசிக்காதிருக்கட்டும் எனச் சாபமிட்டார். திடுக்கிட்டான் சந்திரன். தன் தவறுணர்ந்தான். விநாயகரின் கால்களிலேயே சரணடைந்தான். கோபம் தணிந்தது பிள்ளையாருக்கு.

சாபவிமோசனம் வேண்டி நிற்கும் சந்திரனைப் பார்த்து இப்போது பரிதாபம் மேலிட்டது. அவர் சந்திரனிடம் கவலைப் படாதே, சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர்களுக்கு மட்டுமே துன்பங்கள் சூழும். அவர்களும் ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தியில் என்னை வழிபட்டால் எல்லாத் துன்பங்களும் நீங்கி நலம் பெறுவார்கள் என அருளினார்.

அதன்படியே ஆவணி மாதம் வளர்பிறை, சதுர்த்தித் திருநாளாக பிள்ளையாரைப் போற்றும் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

சங்கடஹர சதுர்த்தி விரதம் வாழ்விலே சர்வ மங்கலத்தையும் ஐஸ்வரிய சிறப்புக்களையும் பெருக்கவல்லது.சகல விக்கினங்களையும் விலக்க வல்லது. இந்த சங்கடஹர சதுர்த்தியை விநாயகரே உண்டாக்கினார் என பேசப்படுகிறது. சந்திரனை சுக்லசதுர்த்தியில் பார்க்கக் கூடாது என்று தான் கூறியது அவரின் கருணை உள்ளத்துக்கு கஷ்டமாக அமைந்தமையால், அதனைச்சீர் செய்வதற்காக கிருஷ்ணபட்ஷ சதுர்த்தியில் சந்திரனையும் நினைத்து அர்க்கியம் தந்தருள வேண்டுமென்று அருள் புரிந்தார். பூஜை நிறைவிலே ரோகிணி சமேதரான சந்திரனையும்பூசை பண்ண வேண்டும் என்றார்.

இந்த விரதத்தை அகஸ்தியர் அனுஷ்டித்து சமுத்திரத்தை பானம் செய்யும் சக்தியைப் பெற்றதாகவும், ஸ்ரீ பார்வதி தேவி ஈஸ்வரனைத் தன் கணவனாகப் பெற்றதாகவும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ஸ்யமந்தக மணியை ஜாம்பவானிடம் இருந்து கைப்பற்றி தனக்கு ஏற்பட்ட அபவாதத்தை நீக்கிக் கொண்டதாகவும், நளனைவிட்டுப் பிரிந்த தமயந்தி பின்னர் ஒன்று சேர்ந்ததாகவும் புராணங்கள்கூறுகின்றன. இத்தகு விரதத்தை அனுஷ்டித்து மேன்மை பெறுவோமாக.

# இளைய தலைமுறையினருக்கு உகந்த



## பாலியல் கல்வி

இறைவனின் படைப்பில் ஆணும் பெண்ணும் வித்தியாசமானவர்கள் . இந்த வித்தியாசம் தான் ஒருவர் பால் மற்றொருவரை ஈர்க்கும் கவர்ச்சியாக இருக்கிறது. இந்தக் கவர்ச்சி ஆண் பெண் பாலுணர்வுக்கு அடித்தளமாக உள்ளது. மனிதனுடைய பசி உணர்வு, தூக்க உணர்வு போன்று பாலியல் உணர்வு என்பதும் குற்றமற்ற ஒன்றே. பாலுணர்வை வெறும் உணர்ச்சியாக, உடலின் இச்சையாக மட்டுமே கருதுவது கூடாது.

இளைஞர்களிடையே பாலியல் தொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லை. பாலியல் குறித்து இளைஞர்கள் உரிய முறையில் அதைப் பற்றி தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். வளரும் பிள்ளைகளுக்கு பாலியல் அறிவை சொல்லிக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். பிள்ளைகளின் உடலில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை பிள்ளைகளுக்கு புரியும்படி தெளிவுபடுத்துவது அவசியம். பாலினம் என்பது உடற்கூறு அமைப்பின் வேறுபாடுகளைக் கொண்டு மனிதர்களை ஆண்பால், பெண்பால் என வகைப்படுத்துவதாகும். பாலின வேறுபாடு பிறப்பிலேயே வருவது. இந்தப் பாலின வேறுபாடு விலங்கு, பறவை, தாவரம், மனிதன் என அனைத்து உயிரினங்களிடத்திலும் காணப்படுகின்ற ஒன்று. ஒவ்வொரு உயிரினமும் தன்னுடைய சந்ததியை உருவாக்குவதற்காக அமைந்தது இது. பாலியல் என்பது பாலினம் பற்றிய கல்வி. பாலியல் கல்வி என்பது பாலினம் பற்றிய தகவல்களை, செய்திகளை முறைப்படுத்தி வழங்குவதும் கற்பிப்பதும் ஆகும். பொதுவாக தாய், தந்தை உறவினர், ஆசிரியர், கதை, திரைப்படம், சமுதாயம் வாயிலாகப் பாலியல் கருத்துக்கள் அறிவுறுத்தப்படுகின்றன. பாலியல் கருத்துக்கள் ஒவ்வொரு காலகட்டத்திற்கும், தேவைக்கும் ஏற்ப மாற்றங்களுக்கு உட்படுகின்றன. எனவே, கல்வி நிறுவனங்கள் பாடங்களைக் கற்றுத் தருவதுடன் பாலியல் கல்வியையும் முறையாக வழங்குவது அவசியமா கிறது. அப்போதுதான் ஒழுக்கம், கட்டுப்பாடு போன் றவற்றை நிலைநிறுத்த முடியும். ஒவ்வொரு நாட்டுக்கும் தனிப்பட்ட பண்பாடு, கலாசாரம், நாகரிகம் உண்டு. அதன் அடிப்படையில் பாலின கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. ஆண், பெண் இருவருக்கு மான குடும்ப மற்றும் சமுதாய பொறுப்புகளும், செயல்களும் இதனடிப் படையில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. பாலியல் கல்வி என்ற உடனேயே முகத்தைச் சுளிக்கும் பெற்றோர்களும் உண்டு. எந்தளவுக்குப் பாலியல் குறித்த சமூகக் கட்டுப்பாடுகள், அடக்கு முறைகள் வீட்டிலும் நாட்டிலும் இருக்கின்றதோ அந்தளவுக்கு ஆபத்துகள் பெருகும் என்பது உளவியலாளர்களின் எச்சரிக்கையாகும். பாலுணர்வு மனிதத் தன்மைக்குத் தனிச் சிறப்பையும், உயர்வையும் அளிப்பதாகும். இதனை தொலைக்க முடியாத தொல்லை என நினைக்கலாம். ஆனால் ஆழ்ந்து நோக்கினால் அதுவே மனித உறவுகளுக்கெல்லாம் ஊற்று. உந்து சக்தி என்பது புரியும். பாலு ணர்வு என்பது மனித உறவின் அன்புத் தேடல். மனித ஆன்மாவின் உறவு வேட்கை. அது இல் லை என்றால் பிறப்பும் இல்லை, உறவும் இல்லை.

இது மனிதனை மனிதனாக வாழ வைக்கி றது. வளர வைக்கிறது. சிக்மன்ட் பிராய்ட்டின் கருத்துப்படி பாலுணர்வு என்பது மனித இயல்புக்கே அடிப்படையான சக்தி. அதனைக் கட்டுப்படுத்தி, முறையாக நெறிப்படுத்தி, ஆக்கபூர்வமான செயல்களில் செலுத்தினால் எண்ணற்ற சாதனைகளைப் படைக்கலாம்.

பாலுணர்வை வெறுத்து, மறுத்து, அடிமனதுக்குள் புதைத்து வாழ்வது வளர்ச்சிக்கு வழிஅன்று. அது தனது ஆளுமையின் அடிப்படையான ஒரு பகுதியையே தனக்கு அன்னியமாக்கிக் கொள்வதாகும். இளைஞர்கள் பாலியலைப் பற்றி தவறான இடத்தில் தவறான நபர்கள் மூலம் தெரிந்து கொள்ளும்போது எதிர் மறையான, தவறான விளைவுகளே ஏற்படும்.

பாலுணர்வை முறையாகக் கையாண்டு நெறிப்படுத்தத் தெரியாதவர்க ளால் சமூகம் பல பிரச்சனைகளைச் சந்திக்கிறது. இதன் காரணமாக பாலியல் வன்முறை, விபசாரம், தகாத உறவு, தவறான பழக்க வழக்கங்க ள் ஏற்படுகின்றன. பாலியல் கல்வி குறித்த தவறான எண்ணங்களைப் போக்க வேண்டும். அது வெறும் உடல் உறுப்புகள் சம்பந்தப்பட்ட கல்வி மட்டுமல்ல. உடல் நலம் மற்றும் மன நலம் தொடர்பானதும் கூட என்பதை விளக்க வேண்டும். இளைய தலைமுறையினர் தங்கள் எதிர்காலத்தை ஆரோக்கியமானதாகவும், ஒளிமயமானதாகவும் ஆக்கிக் கொள்ள பாலியல் கல்வி உதவும்.

– தன்னம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவங்களும் நிலத்தடிநீர் மாசாக்கமும்

கு.மதுசூதன்

எமது முன்னோர்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுள் காலம் கொண்டவர்களுமாகவே வாழ்ந்தார்கள். இதற்கு அவர்களின் உணவுப் பழக்கங்கள்தான் மிக முக்கிய பங்கை வகித்துள்ளன என்பதை மறுக்க இயலாது.

ஆனால், இன்றோ நிலைமை நேர்மாறாக, தலைகீழாக மாறிவிட்டது. இன்றைய சமுதாயம் சிறுவயது நோய்களாலும், இளவயது நோய்களாலும் அவதிப்பட்டுத் துன்பப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களை மறந்துவிட்டு எம்மவர்கள் வரம்புகள் மீறிச் செயற்பட்டதன் வினையேயாகும்.

எமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையையும், இயற்கையோடிணைந்த உணவு உற்பத்திகளையும், இயற்கை வளம் நிறைந்த சத்துணவுகளையுமே உள்ளெடுத்து வந்தார்கள்.

சேதனப் பயிர்ச்செய்கை என்பது வெறுமனே சாதாரணமானதொரு சொல் அல்ல. அது பழைய தலைமுறைக்கான அத்திபாரமாக அமைந்துள்ளது. புதுத் தலைமுறைக்கான மீள் அத்திபாரமாக அமைந்து வருகிறது.

இயற்கையோடு இணைந்து இரசாயனக் கலப்பில்லாத உணவுகளை உற்பத்தி செய்து தேகாரோக்கியமிக்க தேசமொன்றை கட்டியெழுப்புவதே சேதனப் பயிர்ச்செய்கையின் உள்ளார்ந்த நோக்கமாகும்.

இயற்கையான கழிவுகளான, இலைகுழைகள், உக்கல்கள், ஆட்டெரு, மாட்டெரு, கோழி எச்சம், சமையல் கழிவுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி இயற்கை சேதன உரத்தைத் தயாரிக்க முடியும்.

இந்தச் சேதன வளமாக்கிகளை பயிர் நிலங்களுக்கு இடுவதால் மண் புத்துயிர் பெற்று எங்களுக்கு புதுப்பொலிவான விளைவுகளையே அறுவடையாக அள்ளித்தரும். அந்த அறுவடைகள் உடலுக்கும் மனதுக்கும் உரமூட்டுவனவாக அமையும்.

### அசேதனப் பயிர்ச்செய்கையின் ஈடுபாடு

ஆனால், இன்று அதிக விளைச்சலுக்காக சேதனப் பயிர்ச்செய்கையைக் கைவிட்டுவிட்டு அசேதன பயிர்ச்செய்கைக்குள் மூழ்கிவிட்டோம். இதனால் குறைந்த கால அனுகூலங்கள் கிடைத்திருந்தாலும் பிரதிகூலங்களே அதிகம்.

இரண்டாம் உலகப்போர் முடிந்ததும், எஞ்சிய சல்பேற்று, அமோனியம் சேர்வைகள் எல்லாம் ஒரே இடத்தில் தேங்காமலிருக்க இரசாயன வளமாக்கி என்ற பெயரில் பல நாடுகளுக்கு கழிவுகள் விலைக்கு ஏற்றுமதியாக்கப்பட்டன.

இதனால்தான் இன்று உலக நிலங்களும், நிலத்தடி நீர்களும் நஞ்சு தோய்ந்து போய் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

இன்று பல விவசாயிகள் தமது விளைச்சலை அதிகரிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக உரங்களை விசிறுகிறார்கள். இதனால் ஏற்படப்போகும் அபாயத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அல்லது அறிந்தும் அறிவுறுத்தப்பட்டும் அக்கறையின்றிச் செயற்படுகிறார்கள் போலும். விவசாய நிலங்களில் பின்வரும் வகையான இரசாயனங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

*1. இரசாயன வளமாக்கிகள்*
*2. பூச்சி, பீடைக் கொல்லிகள்*
*3. களை கொல்லிகள்*

இரசாயன வளமாக்கிகள் மண்ணை வளப்படுத்தவும், பூச்சி பீடைக் கொல்லிகள் தாவரப் பகுதிகள், விளைச்சலை அழிக்கும் பீடைகளைக் கட்டுப்படுத்தவும், களை கொல்லிகள் விவசாய நிலத்திலிருக்கும் களைகளைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

### இரசாயனங்களின் பாவனை

இவற்றைவிட பழுக்க வைக்கும் மருந்துகள், பாதுகாக்கும் மருந்துகள் எனப் பல இரசாயனங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த இரசாயனப் பாவனைகளால் வெறும் உற்பத்திப் பொருள்களை மாத்திரம் நாங்கள் உண்ணவில்லை. அதனுடன் நச்சு இரசாயனம் தோய்ந்த உணவுகளையே உண்ணுகிறோம். இதனால் இன்று யாழ்.குடாநாட்டிலும் பலர் புற்று நோயாலும், பல்வேறு இருதய நோய்களுக்கும் ஆளாகி வருகிறார்கள்.

கர்ப்பிணித் தாய்மார்கள், சில இரசாயனம் தோய்ந்த உணவுப் பொருள்களை உட்கொள்வதால் இருதயக் கோளாறு, மூளைவளர்ச்சி குறைந்த குழந்தைகள் பிறத்தல் போன்ற குறைபாடுகள் ஏற்படுவதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

முன்பெல்லாம் நாம் விரும்பி வாங்கி உண்ணும் வாழைப்பழங்கள்கூட இன்று நஞ்சாகித் தான் போய்விட்டன.

அன்றாடம் சமைத்து உண்ணும் காய்கறிகளுக்குள் எவ்வளவு வீதம் இரசாயனம் கலந்துள்ளது என்று கணக்கிட முடியாத அளவுக்கு அது அதிகரித்துள்ளது.

ppm(Ports per million),ppB(Ports per Billion) அளவுகளிலேயே கலந்துள்ள இரசாயனங்களின் அளவுகள் எமது உணவில் கணிக்கப்படுகின்றன.

ஆனால், உலக சுகாதார தாபனம் உணவிலும், குடிதண்ணீரிலும் பதிந்துரைத்த இரசாயனங்களின் ppm,ppB அளவுகளை விட எம்மவர்கள் பலபடி முன்னோக்கி இருக்கிறார்கள்.

இரசாயனப் பாவனையில் விவசாயிகள் பலபடி முன்னோக்கியிருக்கிறார்கள் என்பதிலும் பார்க்க சாவை முன்னோக்கியிருக்கிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.

விளைவுகளை அதிகரிக்கும் நோக்கிலும், அதிக வருமானம் பெறும் நோக்கிலும் எமது வடமாகாண விவசாயிகள் இவ்வாறு அதிக இரசாயன பிரயோகம் செய்வது ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும்.

அத்துடன் தனியே விவசாயிகளில் மட்டும் குறைகூற முடியாது. ஏனெனில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரினால் யாழ்.மாவட்டம் முற்றுமுழுதாக வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டு தனித்தேசம் போலவே இருந்தது. ஆகவே, இங்கிருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கான உணவானது உயர் பாதுகாப்பு வலயங்கள் தவிர்ந்த குறித்த மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பிலேயே மக்களுக்குத் தேவையான அதிக உணவை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. இதற்காக விளைச்சலை அதிகரிக்க விவசாயிகள் அதிக உரப் பாவனை, இரசாயனப்பாவனைகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாயிற்று.

ஆனால், இவற்றின் விளைவுகள் தற்போது விஸ்வரூபம் எடுத்து சுகாதாரப் பிரச்சினைகளாக, நோய் நொடிகளாக, நிலத்தடி நீர் மாசாக்கிகளாக உருவெடுத்து நிற்கிறது.

இதை இனியாவது கட்டுப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும்.

விவசாய நிலங்களில் அதிகரித்த இரசாயனப்பாவனையினால் மண்ணிலுள்ள நன்மைதரும் நுண்ணங்கிகள், மண்புழுக்கள் என்பவை எமது விவசாயச் செய்கைக்கு அழிந்துவிட்டன. இன்று இரசாயனத்தை நம்பியே நாம் இருக்கிறோம். முன்னர் நிலத்தை வெட்டினால் மண்புழுக்கள் கொத்தாகக் காணப்படும். ஆனால் இன்று ஒரு மண்புழுவைக் காண்பதே அதிசயமான விடயமாக வுள்ளது.

> **விவசாய நிலங்களில் அதிகரித்த இரசாயனப் பாவனையினால் மண்ணிலுள்ள நன்மைதரும் நுண்ணங்கிகள், மண்புழுக்கள், என்பன அழிந்துவிட்டன. இன்று இரசாயனத்தை நம்பியே நாம் இருக்கிறோம். முன்னர் நிலத்தை வெட்டினால் மண்புழுக்கள் கொத்தாகக் காணப்படும். ஆனால் இன்று ஒரு மண்புழுவைக் காண்பதே அதிசயமான விடயமாகவுள்ளது.**

இன்று யாழ்ப்பாண நிலத்தடி நீரில் பல இரசாயனக் கழிவுகள் கலந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

விவசாய நிலங்களில் அளவுக்கதிகமாகப் பாவிக்கப்பட்ட இரசாயன வளமாக்கிகள் மழைநீருடன் கலந்து புவியீர்ப்பு நீரினூடாக நிலத்தடி நீரில் கலந்து பொசுபேற்று ($PO_4^{3-}$), நைத்திரேற்று அயன்களின்($NO_3$) அளவுகள் அதிகரித்துள்ளதால் அது பருகுவதற்கு உகந்தது அல்ல எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் எமது மக்கள் அந்த நீரையே தொடர்ந்து பருகி வருகிறார்கள். இதனால் புற்றுநோய், நீலக் குழந்தை பிறத்தல் போன்ற விளைவுகளை எதிர்நோக்கி நிற்கிறோம்.

ஆகவே விவசாயிகளும், மக்களும் விழிப்புடன் செயற்பட்டு அசேதன உரப்பாவனையைக் குறைத்து சேதனப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

இன்று யாழ்ப்பாணக் குடிதண்ணீரில் உள்ள மிகமுக்கிய பிரச்சினைகளாக –

1. நிலத்தடி நீரில் இரசாயன வளமாக்கிகளின் கலப்பு
2. கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலத்தல்
3. மலக்கழிவுகள் நிலத்தடி நீரில் கலத்தல்
4. நீரின் வன்மை, என்பவை காணப்படுகின்றன.

அதிகரித்த குடித்தொகையால் வீடுகள் மிக அதிகளவாக அமைக்கப்பட்டதால் மலசலகூடக் கழிவுகள் நிலத்தடி நீரில் கலந்து இன்று யாழ். நிலத்தடி நீரில் 99% E-coli எனும் மலத்தொற்று பக்ரீரியாக்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதனால் பல நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் அபாய நிலையில் யாழ்.மக்கள் இருக்க நேரிட்டுள்ளது.

அதைவிட யாழ்.நிலத்தடி நீர் வன்னீராகக் காணப்படுவதால் அதன் வன்மையை அகற்றியே பருக வேண்டும். வன்னீர் எனப்படுவது குடிதண்ணீரில் கல்சியம் அயன்கள் ($Ca^{2+}$), மக்னீசியம் அயன்கள்($mg^{2+}$) என்பவற்றின் அளவுகள் அதிகரித்தல் ஆகும். இந்த வன்மையை அகற்ற குடிதண்ணீரைக் கொதிக்க வைத்து $Ca^{2+}$,$mg^{2+}$ அயன்களை அகற்றிய பின்னரே பருக வேண்டும். இல்லையேல் சிறு நீரகக் கோளாறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும்.

தற்போதைய காலகட்டத்தில் வடமாகாண நிலங்களும், நிலத்தடிநீரும் இரசாயனங்களாலும், மலக்கழிவுகளாலும் மாசாக்கப்பட்டு பல நோய்களுக்கு காரணிகளாகி விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன. இந்த அபாயநிலையைத் தடுத்து விவசாயிகள், பொதுமக்கள், அரசுகள், உள்ளூராட்சி அமைப்புக்கள் கல்வியியலாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து விழிப்புடன் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

364 – உரோமப் பேரரசராக முதலாம் வலன்ரைன் அறிவிக்கப்பட்டார்.
1815 – எல்பாவிலிருந்து நெப்போலியன் தப்பினார்.
1936 – இளம் ஜப்பானிய இராணுவ அதிகாரி ஒருவர் அரசுக்கு எதிராகப் புரட்சிக்கு முயற்சி.
1971 – ஐ.நா. செயலாளர் நாயகம் யு.தான்ட் சூரியன் பூமத்திய ரேகையைத் தாண்டும் நாளை புவித்தினமாக்கும் பிரகடனத்தில் ஒப்பமிட்டார்.
1980 – எகிப்தும்,இஸ்ரேலும் முழு அளவிலான நாகரிக உறவை ஆரம்பித்தன.
1991 –வளைகுடாப் போரில் அமெரிக்க இராணுவப் படை அல்பஸயா நகரைக்கைப்பற்றியது.
1993 – நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மைய வடக்கு கோபுரப் பகுதியில் ட்ரக் வண்டியில் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் ஆறுபேர்சாவு. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயம்.
2013 – வெப்பவாயு பலூன் எகிப்து லக்ஸர் நகருக்கு அண்மையில் விபத்துக்கு உள்ளாகி 19பேர் சாவு.
2014 – கர்ப்ப காலத்தில் மது அருந்துவது தண்டனைக்குரிய குற்றம் என பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பு.
1992 – யுகோஸ்லாவியாவுக்கு நம்பியார் தலைமையில் ஐ.நா. அமைதிப்படை.
2014 – மகஸின் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த கோபிதாசின் உடல் புலோலியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.
2014 – பாலச்சந்திரன்,இசைப்பிரியா பற்றியும் நவிப்பிள்ளையின் அறிக்கையில் குறிப்பு.

## வானில் தோன்றும் முழுநிலா



வண்ண நிலா வானிலே
வளர்ந்து வரும் இரவிலே
மண்ணில் வாழும் எங்களை
மகிழ்வு கொள்ளச் செய்யுமே!

விண்ணில் நீந்தி வருகையில்
முகிலும் போர்த்து மூடுமே
எண்ணிக் களிக்கும் எங்களை
ஏக்கம் அடைய வைக்குமே!


முழு நிலை ஆனதும்
இரவு மறைந்து போகுமே
அழும் குழந்தை அதைப் பார்த்து
அடங்கி அமைதி கொள்ளுமே!

அழிந்து நிலா வானிலே
ஒழிந்து ஒருநாள் போகுமே
ஒழிந்து போகும் நாளிலே
முழு இருட்டுத் தோன்றுமே!

## பழமொழிகள்

1.வேலியே பயிரை மேய்ந்தால் விளைவு தான் என்ன?
2.அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
3. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
4. தன்னைப்போல்.பிறரை நினை.
5. ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது.
6.காலமும் கடலலையும் காத்திருக்காது.
7. இறந்த காலத்தை என்றும் பெற இயலாது.
8.கொல்லன் பட்டறையில் ஊசி விற்கலாமா?
9. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
10 பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்.
11. குனியக் குனியக் குட்டுவான், குனிந்தவன் நிமிர்ந்தால் குட்டியவன் ஓடுவான்.
12. ஓடும் நாயைக் கண்டால் துரத்தும் நாய்க்கு இளக்காரம்.
13குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்
14 புத்திமானே பலவான்.

## வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



# மதி நுட்பம் மதிப்பு மிக்கது



ஒரு நாள் மாலை, அரண்மனை உப்பரிகையில் மன்னர் கிருஷ்ணதேவராயரும் அவரது மனைவியான அரசியும் பொழுது போக்காக உரையாடியவாறு உலவிக்கொண்டிருந்தனர்.

அப்போது வெகுதொலைவில் மாட்டு வண்டிகளில் ஏதோ சில மூட்டைகள் ஏற்றப்பட்டுக் கொண்டுசெல்லப்படுவது மன்னரின் கண்களுக்குத் தென்பட்டது. உடனே அவர் பணியாளரை அனுப்பி அரசியின் தம்பியான சஞ்சையாவை அழைத்து வரச் செய்தார். சஞ்சையா வந்து வணங்கி நின்றான்.

"சஞ்சையா,அதோ தொலைவில் சில மாட்டு வண்டிகள் செல்கின்றன. தெரிகிறதா? அந்த வண்டிகள் பற்றிய தகவல்கள் தெரிய வேண்டும்" என்றார்.

"மன்னர் அவர்களே,ஒரு நொடியில் தெரிந்து வந்து சொல்லுகிறேன்" எனக் கூறிவிட்டு வண்டிகள் செல்லுமிடம் நோக்கி வேகமாக விரைந்தான் சஞ்சையா. சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்த சஞ்சையா "மன்னர் அவர்களே. அந்த வண்டிகள் நமது அண்டை நாடான இரத்தினபுரியைநோக்கிச் செல்லுகின்றனவாம்" என்றான்.

"அப்படியா? அந்த வண்டியில் இருக்கும் மூட்டைகளில் என்ன அடங்கியுள்ளன எனக் கேட்டாயா?" என்றார் மன்னர்.மீண்டும் சென்று,சற்று நேரத்துக்கெல்லாம் சஞ்சையா திரும்பி வந்து விட்டான். "மன்னர் அவர்களே,அந்த மூட்டைகளில் நெல் இருக்கின்றனவாம்" என்றான்.

"ஓஹோ! நெல் இருக்கிறதா! நெல் மூட்டைகளை யார் அனுப்புகிறார்கள்? வண்டிக்காரர்களே நெல்லுக்கு உரிமையாளர்களா அல்லது வண்டிகள் கூலிக்கு ஓட்டப்படுகின்றனவா?" என மன்னர் விசாரித்தார். சஞ்சையா மறுபடியும் ஓடினான்.

திரும்பி வந்து "நெல்லுக்குச் சொந்தக்காரர்கள் தான் வண்டிக்காரர்கள்" என்ற தகவலைக் கூறினான்.

"நெல்லை என்ன நோக்கத்துடன் கொண்டு செல்லுகிறார்கள்" என மன்னர் கேட்டார்.

சஞ்சையா மீண்டும் ஓடிச் சென்று விசாரித்துத் திரும்பி வந்து "விற்பனை செய்யும் நோக்கத்தில் நெல்லை எடுத்துச் செல்லுகிறார்கள்" என்று பதிலளித்தான்.

"'சரி நீ போகலாம்'" என்று கிருஷ்ணதேவராயர் சஞ்சையாவை அனுப்பிவிட்டார்.

பிறகு ஒரு பணியாளை அனுப்பி தனது அமைச்சரான அப்பாஜியை அழைத்துவரச் சொன்னார். அப்பாஜி வந்து மன்னரை வணங்கி நின்றார்.

"அப்பாஜி, அதோ சற்றுத் தொலைவில் வண்டில்கள் சில செல்கின்றன. அந்த வண்டிகளில் ஏதோ மூட்டைகள் ஏற்றப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்த வண்டியைப் பற்றித் தகவல்வேண்டும்" என்று மன்னர் கூறினார்.

"உத்தரவு மன்னர் அவர்களே" என்ற அப்பாஜி ஒரு பணியாளனை அழைத்து "விரைந்து சென்று அதோ தொலைவில்சென்றுகொண்டிருக்கும் வண்டிக்காரர்களை அழைத்துவா" என்று உத்தரவிட்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் வண்டிக்காரர்கள் வந்து மன்னன் முன் கைகட்டி வாய்ப் பொத்தி நின்றார்கள்.

"உங்கள் வண்டிகளும் அதில் ஏற்றப்பட்டிருக்கும் மூட்டைகளும் யாருக்குச் சொந்தமானவை" என்று அப்பாஜி விசாரித்தார்.

"வண்டிகளும் அவற்றில் ஏற்றப்பட்டிருக்கும் மூட்டைகளும் எங்களுக்குச் சொந்தமானவைதான்" என்றான் வண்டிக்காரர்களில் ஒருவன்.

"மூட்டைக்குள் என்ன இருக்கின்றன?" என்று விசாரித்தான் அப்பாஜி.

"எல்லாமே நெல்தான்" என வண்டிக்காரன் பதிலளித்தான்.

"நெல் மூட்டைகள் எங்கே எடுத்துச் செல்லப்படுகின்றன?" என்று கேட்டான் அப்பாஜி.

"நமது அண்டை நாடான இரத்தினபுரியில் ஒரு செல்வர் வீட்டுத் திருமணத்துக்கு அதிக நெல் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். நெல்லுக்கு நல்லவிலை கிடைக்கும் என்பதால் அந்தச் செல்வருக்கு நெல்லைவிற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்கிறோம்" என்றான் வண்டிக்காரன்.

"நெல்லை அண்டை நாட்டுக்கு எடுத்துச் செல்வதற்காக முறைப்படி எமது அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட்டிருக்கிறதா?" என்று கேட்டான் அப்பாஜி.

"ஆம்!" என்றனர் வண்டிக்காரர்கள்.

"மன்னர் பெருமான் அவர்களே! வேறு ஏதாவது தகவல் வேண்டுமா?" என மன்னரை நோக்கி வினவினான் அப்பாஜி.

"வேறு தகவல் ஏதும் வேண்டாம். வண்டிக்காரர்களை அனுப்பிவிடும்" என்றார் மன்னர்.

அப்பாஜி வண்டிக்காரர்களை அனுப்பிவிட்டான்.

"நீர் போகலாம்" என்று மன்னர் அப்பாஜியை அனுப்பி வைத்தார்.

அப்பாஜி சென்றதும் மன்னர் அரசியைநோக்கி " ஒரு தகவலை விசாரிப்பது தொடர்பான விடயத்தில் உன் தம்பிக்கும் அப்பாஜிக்குமிடையே இருக்கும் வேறுபாட்டைக் கவனித்தாயா"? என்று புன்னகையுடன் கேட்டார் .

"இவையெல்லாம் மிகவும் அற்பமான விடயங்கள். என் தம்பிக்கு இன்னும் சில சந்தர்ப்பங்களைக் கொடுத்துப் பாருங்களேன்" என்று மனக் குறையோடு கூறிக்கொண்டாள் அரசி.

"கவலைப்படாதே. உன் தம்பி முயற்சி செய்து தனது அறிவாற்றலை நிரூபித்துக் காண்பிக்கட்டும். அதன் பின்னர் அவனை நல்லதோர் பகுதியில் அமர்த்துகிறேன்" என்று கூறிவிட்டு கிருஷ்ணதேவராயர் சிரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகை பெறுவதற்கு படாதபாடு

ஐரோப்பிய நாடுகளுக்கு மீண்டும் இலங்கையில் இருந்து மீன் ஏற்றுமதி செய்வதற்கும், இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. உள் நாட்டுப் போரின் இறுதியில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணையை அடுத்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழந்தது. அதேசமயம் மீன்பிடித்துறையில் சர்வதேச சட்டங்களை இலங்கை கடைப்பிடிக்கத் தவறிய குற்றச்சாட்டால் இலங்கையில் இருந்து மீன் இறக்குமதிக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைவிதித்தன. இந்தத் தடை, சலுகை இழப்பு ஆகியவை இலங்கையின் ஏற்றுமதிவர்த்தகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. பொருளாதாரத் துறையில் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. இந்தத் தடைகளின் பின்னணியில் மகிந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கம் இருந்திருக்கலாம். இதனால்தான் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு மகிந்த அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. மைத்திரி ரணில் தலைமையில் புதிய அரசு ஏற்பட்ட பின்னர், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் நிலைப்பாடு மாற்றமடைந்து வருகிறது. சமீபத்தில் ஜேர்மனிக்கும் ஒஸ்ரியாவுக்குப் பயணம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு நடத்திய உயர்மட்டப் பேச்சுகள் வெற்றியளித்துள்ளன. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் வழங்குமாறு அடுத்த இரு வாரகாலத்தில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விண்ணப்பிக்க உள்ளது. தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பல சட்டதிட்டங்களைச் செயற்படுத்த வேண்டியிருப்பதால் தடைநீக்கம் உடனடியாக நடைமுறைக்கு வரும் சாத்தியம் இராது. எனினும், இது இலங்கைக்கு குறிப்பிடத்தக்க ஒரு வெற்றிஆகும். கடந்த ஆட்சிக் காலத்தைப்போல அல்லாது, மைத்திரி-ரணில் அரசு சர்வதேச நாடுகளுடன் மிகவும் சுமுகமான உறவைப் பேணிவருகிறது. குறிப்பாக மேற்கு நாடுகளுடனான உறவு சீரடைந்துள்ளது. இதனால் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்றாகவே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வாய்ப்பையும் குறிப்பிடலாம்.

ஆடை ஏற்றுமதியில் 2020 ஆம் ஆண்டில் 8.5 பில்லியன் டொலர் இலக்கை எட்டும் இலங்கையின் குறிக்கோளுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை முக்கியமானது. வியட்நாம், மலேசியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய ஆசிய நாடுகள் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் தைத்த ஆடை ஏற்றுமதிக்கான வாய்ப்பைப் பெறுவதற்கு முனைப்புக்காட்டும் தற்போதைய கால கட்டத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை மீண்டும் பெற இருப்பதன் மூலம் அந்த நாடுகளுடன் இலங்கை போட்டியிடக்கூடிய திறனைப் பெறக்கூடியதாக இருக்கும்.




ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை தனது தைத்த ஆடை ஏற்றுமதியில் 40 சதவீதத்தை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. வரிச்சலுகை நீக்கப்பட்டதால் இலங்கை பெரும் நட்டமடைந்தது. இந்தச் சலுகை மீண்டும் வழங்கப்பட்டாலும் அது நிரந்தரமானது என்று எதிர்பார்க்கமுடியாது. சர்வதேசத்துக்கும் மனித உரிமைகள் பேரவைக்கும் இலங்கை வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது. அதனை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் இலங்கை மீண்டும் நெருக்கடிகளை எதிர்நோக்கலாம்.

# அறியாமையை அகற்றுபவர் குரு ஒருவரே

சாம் ரமேஸ்குமார்

கர்ம வினையின் காரணமாக மனிதர்கள் இந்த உலகில் பல பிறவிகள் எடுத்துத் தமது கர்ம வினைகளைக் கழிக்கின்றபோது அவர்களின் மனம் இயல்பாகவே ஏதோ ஒன்றை நாடத் துடிக்கின்றது. அந்தத் துடிப்பு ஒரு சிலருக்கு இறை தரிசனம் மீதும் இருக்கலாம். வேறு சிலருக்கோ உலகியலின் இன்பங்கள் மீதும் இருக்கலாம். அது அவரவர் மனநிலையைப் பொறுத்ததாகும்.

ஆனால் இறை தரிசனத்தின் மீது சிலருக்கு நிச்சயம் மனம் இருக்குமேயானால் அவர்கள் ஒரு குருவின் அருளைப் பெறுவதே மேலான செயலாகும். குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. இது பெரியோர்களின் அனுபவமாகும். எந்த ஒரு மகானும் குருவின்றிக் கரை சேர்ந்ததில்லை. ஆன்மிகத்தின் அடையாளமே குரு தரிசனம்தான்.

"பிரார்த்தனை,மலையையும் அசைக்கும்" என்கிறார் இயேசு கிறிஸ்து. இறைவன் மீதான தொடர் பிரார்த்தனைகளால் ஒவ்வொரு மனிதனும் தனக்கு விரும்பியதைச் சாதித்துக் கொள்ள முடியும். குருவைத் தேடும் தாகம் மனிதர்களுக்கு வந்து விட்டால் அதுவே ஒரு பிரார்த்தனையாக மாறிவிடும். இறைவனே குருவாக வரும் நிலையை மனிதர்கள் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும், திருவாசகம் தந்த மாணிக்க வாசகர்போல்.

குருவென்றால் யார் என்பதைச் சற்றுப் பார்ப்போம். ஒரு மனிதனிடத்தில் அல்லது சீடனிடத்தில் உள்ள அறியாமையெனும் அஞ்ஞான இருளை அகற்றி ஞானமெனும் உதய சூரியனை அவனுடைய இதயத்தில் ஏற்றுபவரே உண்மையான குரு ஆவார்.

குருவென்ற வார்த்தைக்கு பொருளை ஆராய்ந்து பார்த்தோமானால் 'கு' என்றால் குணாதீதன். அதாவது சாதாரண மனிதர்களுக்கு இருக்கக் கூடிய குணங்களைக் கடந்தவர். 'ரு' என்றால் ரூபவர்ஜித, உருவமற்றவர் என்று பொருளாகும். அத்தகைய குரு இறைவனைத் தவிர வேறொருவரல்லர். அவரே மனிதவுருவில் வருவார். அவர் உருவம் தாங்கி இருந்தாலும் உண்மையில் உருவமற்றவரே.

'எவருக்கு இறைவனிடம் பக்தி இருக்கின்றதோ அது போலவே குருவிடமும் பக்தி இருக்கின்றது அந்த மகாத்மாவுக்கு உபநிடதங்களில் கூறப்பட்டிருக்கும் உண்மைகள் தாமாகவே வெளிவரும்.' என்று சுவேதாசுவதர உபநிடதம் கூறுகின்றது. வெறும் வேதங்களை மட்டும் படிப்பதால் உண்மைகளை உணர்ந்து விடமுடியாது. ஒரு குருவிடம் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து பக்தி செலுத்தி சிவனாகவே அந்தக் குருவை வழிபட்டு வந்தால் சீடனுடைய உள்ளொளியில் வேதங்களிலுள்ள உண்மைகள் இயல்பாகவே வெளிவரும். இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெற்றவர் வரிசையில் சுவாமி விவேகானந்தர் போன்ற ஞானிகளைக் குறிப்பிடலாம். 'ஆசாரியவான் புருஷோவேத' என்கிறது சாந்தோக்ய உபநிடதம். ஆசாரியனை உடையவன் ஞானம் பெறுகின்றான் என்பதே இதன் விளக்கம். ஞானம் எல்லா மனிதர்களிடத்தும் இயற்கையாகவே இருக்கின்றது. அதை ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருந்து உணர வைப்பதே குருவின் அருளாகும். மேலும் குருவில்லா வித்தை பாழ் என்பார்கள் முன்னோர்கள். தன்னைத் தன்னாலறியும் இறை சாதனைக்கு குரு மிக அவசியமே. சனாதன தர்மமும் வேதங்களும் குருவின் மகிமைகளை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மனிதவுருவைத் தாங்கி நிற்கும் ஒரு குருவிடம் தலை தாழ்த்துவதா என்ற அகங்காரத்தையும் விவாதங்களையும் மூடை கட்டி வைத்துவிட்டு ஒரு மேலான குருவிடம் சரணாகதியடைவதே மனிதர்களுக்குச் சாலச் சிறந்ததாகும்.

ஈழத்துச் சித்தர்கள் அனைவரும் தம் குருவின் மகிமைகளையே தம் பக்தர்களுக்கு அருளுபதேசமாக வழங்கியுள்ளார்கள். இதிலிருந்து குருவின் பாதக் கமலங்கள் எத்தகைய புனிதமானவை என்பது எமக்குப் புலனாகிறது. தன் குருவைப் பற்றிய மகான் யோகர் சுவாமியின் பாடல்கள் குரு மீதான, பக்தியையும் ஆர்வத்தையும் எல்லோருக்கும் தூண்டுவதாகவே அமைந்துள்ளன.

# இரக்கம் உள்ளவர்களாய் இருப்போம்

எமது திருச்சபையின் தலைவராம் திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த ஆண்டு டிசெம்பர் 8 ஆம் திகதியிலிருந்து நடப்பு ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதிவரை இரக்கத்தின் மாபெரும் யூபிலி ஆண்டாகத் தந்துள்ளார். இறைதந்தையின் இரக்கம் அளவு கடந்தது. "இறை தந்தை இரக்கமாய் இருப்பதுபோல் நாமும் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்." என்று அழைப்புக் கொடுக்கின்றார். இயேசுவின் வாழ்வு முழுவதும் அவரது பிறப்பு, வளர்ச்சி, பணி, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு எல்லாமே இறை தந்தையின் இரக்கத்தின் பிரதிபலிப்பாக அமைந்தன. எனவே, நாம் இயேசுவின் வாழ்விலே அவர் காட்டும் இரக்கத்தைத் தியானித்து நாமும் சாதி, மத, மொழி, நிறம் அனைத்தையும் மறந்து அனைவரும் ஒரே இறைதந்தையின் மக்கள் என்ற உணர்வோடு உதவி புரிந்து எல்லோருடைய வாழ்வையும் மேம்படுத்த வேண்டும். இயேசு கொண்டு வந்த இரக்கம் நிறைந்த அன்பு வாழ்வை இந்த உலகிலே பிரதிபலித்து ஒரு புதிய வாழ்வை நாம் உலகுக்கு இன்று காட்ட வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் எம்மை அழைக்கின்றார். இதற்காக இந்த ஆண்டில் இரக்கம் நிறைந்த பல நிகழ்வுகளைத் தயாரித்து அவற்றை உலகிலுள்ள அனைத்து மக்களுடனும் நிகழ்த்தி வருகின்றார்.

நான் பலிகளை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன். (மத் 9:13) என்று கூறிய இயேசு தனது வாழ்வில் பல்வேறு பிணிகளாலும், வாதைகளாலும் வருந்தியவர்கள், பேய் பிடித்தவர்கள், முடக்கு வாதமுற்றோர் மற்றும் ஏழையர், துயருறுவோர், கனிவுடையோர், நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் (மத் 4:24, 5:3-10) ஆகியோருக்கும், வாழ்வில் நம்பிக்கை குன்றி இரவு பகலாகக் கண்விழித்துப் பாடுபட்ட பாட்டாளி மக்களுக்கும், தன்னிடம் வந்த எல்லோருக்கும் புதுவாழ்வு கொடுத்து இறை தந்தையின் இரக்கத்தை இந்த உலகில் பிரதிபலித்தார். மேலும் இந்த இரக்கத்தின் வாழ்வுக்காக இந்த உலகிலே இரத்தத்தையும் சிந்தி தனது உயிரையும் கொடுத்து முத்திரையிட்டுள்ளார்.

எனவே எமது திருத்தந்தையோடு இணைந்து நாம் எல்லோரும் இந்தத் தவக்காலத்தில் அதிகமான இரக்கத்தின் செயல்களைச் செய்து இந்த உலகை இரக்கம் நிறைந்த அன்பின் உலகமாய் மாற்றுவோம். மரியன்னை இவைகளில் முழுமையாகத் தன்னை ஒன்றித்தவர். அந்த மரியன்னையின் கரத்தைப் பிடித்தவர்களாய் முன்னேறுவோம்.

அருட்பணி அ.ம.ஸ்ரீபன் செ.தா, கண்டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படித்ததில் பிடித்தது

WhatsApp

வெளிச்சம்

பிழைக்கத் தான் இந்த பிறவி எனில் உங்களுக்கு புத்தகங்கள் தேவையே இல்லை. நன்கு வாழவேண்டும் எனில் நல்ல புத்தகங்களின் துணை நிச்சயம் தேவை

உங்களில் ஒருத்தி

"வேறுபாடு"
பெண்ணின் ஆடை விலகினால்...?
ஆர்வத்துடன் பார்ப்பது காமம். அழகாய் ரசிப்பது காதல். ஆடையால் மூடுவது நட்பு...!

**விருந்தினர்:** ஹலோ... வரவேற்பாளர், நான் உங்க ஹோட்டலில் அறை நம்பர் 107 இல் தங்கியிருக்கிறேன்.

**காப்பாளர்:** ஓகே...சொல்லுங்க சேர். உங்களுக்கு என்ன உதவி வேணும்?

**விருந்தினர்:** இங்கே எனக்கும் எனது மனைவிக்கும் பயங்கரச் சண்டை. ஜன்னல் வழியாகக் கீழே குதிக்கப் போறதா சொல்லிகிட்டே இருக்கிறாள்.

**காப்பாளர் :** மன்னிக்கனும் சேர். இது உங்களுடைய சொந்தப் பிரச்சினை. நான் எதுவும் செய்ய முடியாது.

**விருந்தினர் :** யோ வ் வ் வ்... நான் தங்கியிருக்கும் அறை ஜன்னலைத் திறக்க முடியலை. உடனே எனது அறைக்கு ஆள் அனுப்பி ஜன்னலைத் திறந்துவிடச் சொல்லுவாயா..!!!

எவனாவது (தானா கிடைச்ச பாக்கியத்தை வேணாம் என்று சொல்லுவானா)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நேர்மைக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். குடும்பத்தினரின் அன்பு கண்டு மகிழ்வீர்கள்.

**இடபம்:** உறவினரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனத்தைச் செலுத்தவும்

**கடகம்:** விருப்பம் அனைத்தும் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**சிங்கம்:** நிதானமின்றிச் செயற்பட்டு, அவதிப்பட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், பிறருக்காகப் பொறுப்பு ஏற்க வேண்டாம். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**கன்னி:** வெளிப்படையாகப் பேசி, மற்றவர் மனதைக் கவர்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். அரசியல்வாதிகளுக்கு, புதிய பதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**துலாம்:** மனச்சாட்சிக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். பணியாளர்கள் சலுகை பெறுவதில் தாமதம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தின் தேவையை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள், ஆர்வத்துடன் படிப்பர்.

**தனுசு:** முன்னர் செய்த நற்செயலுக்கு, நற்பயன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில், அதிக ஆதாயம் கிடைக்கும். பெண்கள் செல்வாக்குடன் திகழ்வர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** பொறுமையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் செலவுக்குப் பணமின்றித் திண்டாடுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கும்பம்:** உறவினர்கள், உதவி கேட்டு நிற்பர். தொழில், வியாபாரத்தில், வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள், வீட்டுச்செலவுக்காகக் கடன் வாங்குவர். இயந்திரப்பிரிவு பணியாளர்கள், பாதுகாப்பில் கவனத்தைச் செலுத்தவும்.


**மீனம்:** புதிய விடயங்களை அறிய ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் படிப்படியாக உயரும். விரைவில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

# சுரங்கத்தில் தயாராகும் இருமுகன்

விக்ரம் தற்போது ஆனந்த சங்கர் இயக்கத்தில் நடித்துவரும் படம் "இருமுகன்". இந்தப் படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நயன்தாரா, நித்யா மேனன் ஆகியோர் நடித்து வருகிறார்கள். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க, ஆர்.டி.ராஜசேகர் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்தப்படத்தின் முதல்கட்டப் படப்பிடிப்பு மலேசியாவில் தொடங்கி அண்மையில் முடிவடைந்தது. தற்போது இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு சென்னையில் நடந்து வருகிறது. இதில் விக்ரம், நாசர் உள்ளிட்டோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டுகின்றன.

அத்துடன் சென்னையில் ஒரு பிரம்மாண்டமான சண்டைக் காட்சியையும் படமாக்கி வருகிறார்கள். அதாவது, விக்ரம் வில்லன்களுடன் பிரம்மாண்டமான சுரங்கம் ஒன்றில் சண்டை போடுவது போல், ஒரு சண்டைக்காட்சியைப் படமாக்கி வருகிறார்களாம். இதற்காக பிரம்மாண்ட சுரங்கம் போன்ற ஒரு செட் அமைத்து அதற்குள் படமாக்கி வருகிறார் இயக்குநர் ஆனந்த சங்கர். "கிரிஷ் 3" படத்தில் பணியாற்றிய கலை இயக்குநர் சுரேஷ் செல்வராஜ் அமைத்துள்ள இந்தச் சுரங்கத்தைப் போன்று, இதுவரை தமிழ் சினிமாவில் எவரும் உருவாக்கியதில்லை என்று படக்குழுவினர் தெரிவிக்கிறார்கள். படப்பிடிப்பை எதிர் வரும் ஜூன் மாதத்துக்குள் முடித்து படத்தை வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாகவும் திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



வாழ்க்கையை அனுபவித்து வாழ நினைப்பவர்கள் அதற்கேற்ப வளைகிறார்கள், முடியாதவர்கள் எல்லாம் உடைகிறார்கள்...

# அன்றே சொன்னார் 'செங்கப்பன்'




எம்.ஜி.ஆருடன் ஜெயலலிதா இணைந்து நடித்த முதற் படம் "ஆயிரத்தில் ஒருவன்" இப்படத்தில் ஜெயலலிதா தோன்றும் முதல் காட்சியில் செங்கப்பன் அவரிடம் சொல்வதாக ஒரு வசனம் இடம் பெறும் ,அது.

*"நீ ஆயிரம் அடிமைகளுக்குச் சொந்தக்காரி ஆகி ஆளப் போகிறாய் அம்மா!"*



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 8 | | | 5 | | |
| | 7 | 3 | | | | | 2 | |
| | | | | 3 | 4 | 1 | | |
| | | | 4 | | 7 | | | |
| | 6 | 4 | | | | 9 | 5 | |
| | | | 2 | | 8 | | | |
| | | 8 | 9 | 4 | | | | |
| | 3 | | | | | 6 | 8 | 4 |
| | 4 | 1 | | 8 | 5 | | 9 | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 9 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 9 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குழந்தைகளுக்கானது

குழந்தைகளுக்கான உணவு உபகரணங்கள் அறிமுகமாகியுள் ளன. சுகாதாரமாகவும், இதமாகவும் உணவைத் தயாரிக்க இவை உதவும். பழங் கள், ஏனைய உணவுப் பொருள்களை குழந் தைகள் உண்ணத்தக்க விதத்தில் மசிப்பதற்கும், வடிகட்டவும் இவை உதவும். இவை பிரத்தியே கமாகக் குழந்தைகளின் உணவு தயாரிப் புக்காக வடி வமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு தொகுதியின் விலை 4,500 ரூபா முதல் 5,000 ரூபா வரையாகும்.

**நாளை**
மாசி-15
சனிக்கிழமை
27.02.2016
திதி: சதுர்த்தி
கா.07.29 வரை
நட்சத்திரம்: சித்திரை
பி.ப.05.08 ராகுகாலம்:
09.29-10.59 வரை
சுபநேரம்:
03.29-04.59 வரை

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | சாவகச்சேரி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 50 | 80 | 40 | 60 | 70 | 30 |
| கரட் | 150 | 180 | 160-200 | 160 | 100 | 240 | 120 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 80 | 80 | 120 | 60 | 80 |
| பாகல் | 80 | 80 | 80 | 80 | 100 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 60 | 50 | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 80 | 80 | 60 | 70 |
| பூசணி | 80 | 100 | 60 | 60 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 50 | 50 | 40 | 40 | 50 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 50 | 40 | 50 | 60 | 60 | 45 | 40 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 20 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 100 | 120 | 100 | 160 | 300 | 120 | 200 |
| புடோல் | 60 | 80 | 50 | 40 | 50 | 80 | 30 | 60 |
| கோவா | 70 | 70 | 60 | 80 | 60 | 120 | 70 | 60 |
| வெண்டி | 100 | 70 | 60 | 60 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 70 | 80 | 80 | 80 | 100 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 | 140 | 140 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 50 | 50 | 40–50 | 50 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 60 | 70 | 50 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 120 | 120 | 120 | 160 | 120 | 120 | 200 |
| இராசவள்ளி | 150 | 100 | 140 | 100 | 140 | 160 | 100 | 75 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300-500 | 350 | 400 | 300 | 400 | 500 |
| பனங்கிழங்கு | 05 | 02 | 05 | 02 | 07 | – | 02.50 | 02 |



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | முல்லைத்தீவு | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 500 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 600 | 800 | – |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 450 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 250 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 200 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 400 | – | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 150 | 350 |
| நகரை | 150 | 300 | – | 200 | 450 | 200 | 350 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 300 | 250 | – |
| மதனம் | 100 | 250 | 180 | 300 | 300 | 300 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 200 | 50 | – |
| பாலை | 300 | 200 | 250 | 400 | 400 | 400 | [illegible] |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 300 | 250 |

## சவ்வரிசி பால் அல்வா!



**தேவையான பொருள்கள்:**

அவல் - 2 கப்
சவ்வரிசி - 2 கப்
ஏலக்காய்த்தூள் - சிறிதளவு
ரின் பால் - ஒரு கப்
சீனி அரைக் கப்
குங்குமப்பூ - தேவைப்பட்டால் சிறிது.
பால் - ஒரு கப்
முந்திரி, பாதாம் - தலா ஒரு கரண்டி
நெய் - ஒரு கரண்டி

**செய்முறை:**
சவ்வரிசையை முதலில் வறுத்துக் கொள்ளவும். அதில் கணிசமான அளவை எடுத்து பொடி செய்து கொள்ளவும். பிறகு நெய் விட்டு அவலை நன்றாக வறுத்துக் கொள்ள வும். பிறகு வறுத்த சவ்வரிசி, சீனி, பாலைச் சேர்த்துக் கொதிக்கவிடவும். பிறகு அதனுள் வறுத்த சவ்வரிசியைப் போடவும். ரின் பாலை இப்போது சேர்க்கவும். பிறகு அல்வா போல் சற்றுக் கெட்டியாக வந்தவுடன் ஏலாக் காய்த் தூளைச் சேர்த்து இறக்கவும். வேண்டுமெனில் முந்திரியைப் போட்டுக் கொள்ளலாம்.




- கீரையைச் சமைக்கும் போது சீனி சேருங்கள். சத்தும் போகாது. நிறமும் மாறாது.
- முதலில் மிளகாய் வற்றலைத் தனியாக வைத்து மசித் துக் கொண்டு பிறகே மற்றப் பொருள்களைச் சேர்த்து அரைக்க வேண்டும்.
- சூப்பில் உப்பு அதிகமாகிவிட்டால் உருளைக்கிழங்கைத் துண்டுகளாக்கிப் போடுங்கள்.
- தரையில் தயிர் சிந்திவிட்டால் உடனே அதனை ஈரத் துணியால் துடைக்கவும். தயிர் சிந்திய இடத்தில் சில சொட்டுகள் வினிகரை ஊற்றித் துடைத்தால், தயிர் ஊற்றிய சுவடு இருக்காது.
- கோழிக் கறியில் மஞ்சள் பொடி தடவி 10 நிமிடம் கழித்து நறுக்கினால் மாமிசத்திலிருந்து வரும் துர்நாற்றம் போகும்.
- கடுகு, ஏலக்காய், சீரகம், கிராம்பு போன்றவற்றை அதி கமாகச் சேர்த்தால், அதன் சுவைதான் கூடுதலாகத் தெரியும். எனவே, சரியான அளவை விடக் கொஞ்சம் குறைவாகவே பயன்படுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்கு

ஆனந்த சமரசேகர மற்றும் தற்போதைய சட்டவைத்திய அதிகாரி அஜித் தென்னக்கோன் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மரணச் சான்றிதழ்கள், ஜீன்ரெக் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மரபணுப்பரிசோதனை அறிக்கை, குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் தகவல்கள் மற்றும் சி.சி.ரி.வி. காணொளி விவரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், இலங்கையின் 296ஆவது தண்டனைச் சட்டத்தின் பிரகாரம் தாஜுதீனின் சாவு ஒருதிட்டமிட்ட கொலையென நிரூபணமாகியுள்ளது என்று நீதிவான் இதன்போது தெரிவித்தார்.

இந்த நிலையில், தாஜுதீனின் கொலையுடன் தொடர்புடைய அனைத்து சந்தேகநபர்களையும் உடன் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் நிஷாந்த பீரிஸ் உத்தரவும் பிறப்பித்தார்.

2012ஆம் ஆண்டில், கொழும்பு, நாரஹேன்பிட்டியில் காரில் சென்ற வேளையில், வசீம் தாஜுதீன் மர்மமான முறையில் உயிரிழந்திருந்தார். இந்தச் சாவு ஒரு விபத்து என அப்போது பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டு விசாரணைகள் முடக்கப்பட்டன.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இந்தச் சாவு தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என தாஜுதீனின் உறவினர்கள் குற்றஞ்சாட்டி வந்தனர். குறித்த சாவில் சந்தேகம் நிலவுவதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு, தாஜுதீனின் சாவு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தது.

தாஜுதீனின் சாவில் சந்தேகம் நிலவுவதாக உறவினர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், சடலம் தோண்டியெடுக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்பட்டுத் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வந்தது.

இக்கொலையுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர்களான நாமல் ராஜபக்ச, யோசித ராஜபக்ச மற்றும் மகிந்தவின் குடும்பத்துடன் நெருக்கமானவர்கள் தொடர்புபட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-சி)

## அமைச்சர்

அமளிதுமளி ஏற்பட்டது.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் உரையாற்றினார். இதன்போது, முதலமைச்சர் குறுக்கிட்டார். அதனையும் மீறிச் சயந்தன் உரையாற்றியபோது, ஆளும் கட்சி உறுப்பினர்களான சர்வேஸ்வரன் மற்றும் பசுபதிப்பிள்ளை ஆகியோர் குறுக்கீடு செய்தனர். இதனால் சபையில் அமளி ஏற்பட்டது. பின்னர் அவைத் தலைவரின் தலையீட்டினால் அது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆளும்கட்சி உறுப்பினர் சயந்தனைத் தொடர்ந்து, ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினரான சர்வேஸ்வரன் உரையாற்றினார். கடந்த அமர்வில் பிரேரணை கொண்டு வரப்பட்ட முறையும், அது எடுத்துக் கொள்ளப்பட்ட முறையும் தவறானது என்று அவர் குறிப்பிட்டார். சரியான முறையில் அந்தப் பிரேரணையை மீண்டும் கொண்டு வர முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

இதன்போது, ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர், யோசித – மகிந்தவுடன் ஒப்பீடு செய்து பேசியமை கண்டனத்துக்குரியது–என்றார்.

*முதலமைச்சர் மீது நம்பிக்கையீனம்*

ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவிக்கையில், இப்போது முதலமைச்சர் இந்த விடயத்தை என்ன அடிப்படையில் இங்கு முன்வைக்கின்றார். பொது முக்கியத்துவம் – சிறப்புரிமைக்குச் சில வரையறை உண்டு. இரணைமடுக் குடிதண்ணீர் விவகாரம், சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை, மரம் நடுகை மாதம் இவையெல்லாம் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தவை இல்லையா? இவை தானே அன்றைய பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. நேரம் போய்க் கொண்டிருந்தமையினால் உறுப்பினர்கள் எழுந்து சென்றார்கள் என்ற குற்றச்சாட்டு சிறுபிள்ளைத்தனமானது. அன்றைய தினம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவும் அதிகாரபூர்வத் தரவுகள் முன்வைத்த பின்னரே இங்கு தெரிவிக்கப்பட்டன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்பாக வைத்திருந்தால் இன்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். முதலமைச்சர் மீது நம்பிக்கை வைத்தே இதனை நாம் இங்கு முன்வைத்தோம். இன்று அந்த நம்பிக்கை கேள்விக்குறியாகி விட்டது. முதலமைச்சர், முழங்காவிலில் பேசிய பேச்சுக்கள் எமக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளன. முதலமைச்சர் சபையை அவமதிக்கின்றார் – என்றார்.

இதன்போது, பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை நான் கடந்த அமர்வில் பல தடவைகள் பேச எழும்பினேன், ஆனால் கண்டுகொள்ளப்படவில்லை. சிலரின் தேவைக்கு மாத்திரம் நாங்கள் ஆளும் கட்சி உறுப்பினர்கள். மற்றும்படி தேவையில்லாத உறுப்பினர்கள் என்றார்.

*பேரினவாத சக்திகளுடன் தொடர்பு*

ஆளும் கட்சியின் உறுப்பினர் க.சிவநேசன், பிரேரணை கொண்டு வரப்பட்ட முறை தவறு. அதனைப் பதிவேட்டிலிருந்து நீக்கவேண்டும். பேரினவாதச் சக்திகளுடன் இணைந்து இங்கு சிலர் செயற்படுகின்றனரோ என்று யோசிக்க வேண்டியிருக் கின்றது என்று குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், பேரினவாதச் சக்திகளுடன் இணைந்து செயற்பட்டவர்களுக்குத்தான் அது தெரியும் என்று குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், ஆளும் கட்சிப் பிரச்சினையை இங்கு எடுத்தால் மக்கள் பிரச்சினையை எப்போது பேசப் போகின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார். ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி குறிப்பிடுகையில், ஒரு அமர்வில் பிரேரணை நிறைவேற்றினால் அதனைப் பின்னர் அடுத்த அமர்வில் நீக்க முடியாது. ஆளும் கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தான் எழும்பியதைக் கவனிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

அவைத் தலைவருக்குக் குறிப்பு அனுப்பியிருந்தால் பேச அனுமதித்திருப்பார். ஆளும் கட்சி உறுப்பினர் கூட்டத்தில் பேச வேண்டிய தேவை இல்லை. உறுப்பினர் ஒருவர் பிரேரணை கொண்டு வர விரும்பினால் கொண்டு வரலாம். அதைத் தடுக்க முடியாது. குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சான்றுகள் – ஆதாரங்களைக் கேட்டுப் பெறவேண்டியது விசாரணை நடத்துபவரின் – முதலமைச்சரின் பொறுப்பு. நீதிபதி ஒருவர் சந்தேகநபர் மன்றுக்கு வரும்போதே தீர்ப்பைக் கூறினால் எப்படி பொருத்தமாக இருக்கும் என்றும் கேள்வி எழுப்பினார்.

*முறைப்படியான பதில் வழங்கவில்லை*

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர் சுகிர்தன், முதலமைச்சர் அன்றைய தினம் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அடுத்த நாளே முழங்காவிலில் வைத்துப் பதில் சொல்லி விட்டார். அங்கே அடுத்த 12 மணி நேரத்தில் பதில் சொல்லாமல் இங்கே வந்து சொல்லியிருந்தால் நல்லாயிருக்கும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், எங்களுடைய நாற்றங்களை நாங்கள் இங்கே கிண்டிக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவர் முறைப்படி எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சரோ, முதலமைச்சரோ ஒழுங்கு முறையாகப் பதில் வழங்கவில்லை. இங்கே நிறைவேற்றப்படுகின்ற எங்களுடைய தீர்மானங்களை ஏனையோர் நடைமுறைப்படுத்துவதில்லை என்று நாங்களே சொல்கின்றோம்.

நாங்களே நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது சரியா? என்னைப் பற்றிக் குற்றம் சுமத்தினால் முதலமைச்சர் என்னைக் காப்பாற்றக் கூடாது. முதலமைச்சர் முழங்காவிலில் பேசிய பேச்சு தவறானது. இது தொடர்பில் பலரும் என்னிடம் கேட்கின்றனர்.

*மாற்றத்துக்கு காரணம் என்ன?*

ஆளும் கட்சி உறுப்பினர் தியாகராஜா கடந்த அமர்வில் ஆவேசமாகப் பேசினார். அதன் பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பில் நாங்கள் வன்னிப்புலி என்றெல்லாம் பேசினார். பின்னர் மன்னிப்புக் கேட்டு கடிதம் அனுப்புகின்றார். என்ன நடந்தது. இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன? வடக்கு மாகாண சபையை வெளியில் உள்ளவர்கள் பிரிக்கின்றனர். வவுனியாவில் இருப்பவர் கையை முத்து வாங்கிக் கொண்டு இருக்கின்றார். நாங்கள் தொடர்ந்து தவறு செய்து கொண்டிருக்கின்றோம். இத்தோடு இந்த விடயத்தை விடுங்கள் – என்றார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், பிரேரணைகளை முறைப்படி கொண்டு வாருங்கள்–என்றார்.

இதன் பின்னர் முதலமைச்சர் குறிப்பிடுகையில், நான் முழங்காவிலில் பேசியதற்குக் காரணம், இங்கு சபையில் முதல்நாள் நடந்த விடயத்துக்கு எதிர்வினையாற்றத்தான் அப்படிப் பேசினேன் – என்றார். நீண்ட நேரமாக தொடர்ந்த விவாதம், அவைத் தலைவரின் பேச்சுடன் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மனைவி

கொல்லப்பட்டிருந்தார். அவருடைய கணவரான நாகராஜா சிவசீலன் என்பவருக்கே நேற்றுச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு பிள்ளையும் உள்ளது.

2006 ஆம் ஆண்டு பெப்ரவரி 9 ஆம் திகதி கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. அன்றிரவு 8 மணி முதல் 10.30 மணி வரை எதிரி தனது மனைவியை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தார் என்று எதிரியின் அயல் வீட்டுப் பெண் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரவு எட்டு – எட்டரை மணிக்குத் தொடங்கிய சண்டை அன்றிரவு பத்தரை மணிவரை நடந்தது. என்னை அடிக்காதே அடிக்காதே என்று கத்திக்கொண்டிருந்த அந்தப் பெண் [illegible] கொல்லப் போகிறான் என்று அலறும் சத்தம் கேட்டது. பத்தரை மணிக்கு அந்தப் பெண்ணிடமிருந்து பெரிய ஓலம் ஒன்று கேட்டது. அதன் பின்னர் ஒரே நிசப்தமாகி அமைதியாகிவிட்டது. மறுநாள் காலையில் அந்த வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அந்தப் பெண்ணின் சடலம் பாயினால் மூடப்பட்டுக் கிடந்ததைக் கண்டதாகக் குறித்த சாட்சி தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

தனது மகளின் சடலம் நிர்வாணமாகப் போர்வையினால் சுற்றப்பட்டு, பின்னர் பாயினால் சுற்றப்பட்டுக் கிடந்ததாகக் கொல்லப்பட்ட பெண்ணின் தாயார் சாட்சியமளித்துள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரியும் உடற்கூற்று விசாரணை தொடர்பில் சாட்சியமளித்தார். அதன்போது கழுத்து, தலை என்பவற்றில் பல வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. கழுத்தில் இரண்டாம், மூன்றாம் எலும்புகள் உடைந்த நிலையில் இருந்தன. கழுத்து முன்பக்கத்து நாண் துண்டாக்கப்பட்டிருந்தது. தலையின் பின்பக்கத்திலும் பல வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இந்தக் காயங்களினால் மூளை சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. மண்டையோட்டில் பல வெட்டுக் காயங்கள் இருந்தன. இவை மரணத்தை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான வெட்டுக் காயங்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசாரணைகளின் முடிவில், நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால், எதிரி கொலைக் குற்றம் புரிந்துள்ளார் என்று நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

கொலை செய்யும் எண்ணத்துடன் கொடூரமான கொலையை ஒரு பெண் என்றும் பாராமல் தனது மனைவியை எதிரியான கணவன் கோடரியினால், பல வெட்டுக் காயங்களைத் தலை, கழுத்து என்பவற்றில் வெட்டி, அவளைக் கேவலமான–மனிதாபிமானமற்ற முறையில் நிர்வாணமாக்கி, இறைச்சிக் கடையில் மிருகங்களை வெட்டுவது போன்று வெட்டி கொடூரமாக கொலை செய்யும் எண்ணத்தை நிரூபித்து இந்தக் கொலையைப் புரிந்துள்ளார் என்பது நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து எதிரிக்குச் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

நீதிமன்றத்தின் மின்சார விளக்குகள் அணைக்கப்பட்ட நிலையில் அனைவரும் எழுந்து நிற்க, சாவுத் தண்டனைத் தீர்ப்பு நீதிபதியினால் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் வழக்கேட்டில் கையொப்பமிட்டு, அதன் பின் அந்தப் பேனா நீதிபதியினால் முறித்து எறியப்பட்டது.

இதேவேளை, பெண்கள் சிறுமிகள் மீதான கொலை வெறித் தாக்குதல்கள், காட்டுமிராண்டித்தனமான பாலியல் வன்புணர்வின் பின் கொலைகள் இடம்பெறுகின்ற ஒரு சூழலில், அந்த அநியாயங்களுக்கு உரிய நீதி கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தி வருகின்ற வேளையில் பெண் என்றும் பாராமல் தனது மனைவியைக் கொடூரமாகக் கொலை செய்த கணவனுக்கு இந்தச் சாவுத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-4)

## மாணவி

எனக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, வேண்டும் வேண்டும் புலிகள் வேண்டும் என்றும் கோஷமிட்டவாறு மாணவர்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

வவுனியா மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், இதற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கைகட்டி வேடிக்கை பார்க்க நாங்கள்ஒன்றும் கையாலாகாதவர்கள் அல்ல, வித்தியாவுக்கு விடை கொடுத்திருந்தால் இன்று இந்தச் சிறுமிக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?, சிறை என்ன குற்றவாளிகளின் பாதுகாப்புக் கூடமா? என்ற பதாகைகளை ஏந்தியவாறும், வேண்டும் வேண்டும் புலிகள் வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறும் கவனவீர்ப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, மாணவப் பிரதிநிதிகள் கருத்து வெளியிடுகையில், வன்புணர்வின் பின்னான படுகொலையைக் கண்டித்து கல்விச் செயற்பாடுகளில் இருந்து புறக்கணிப்பைச் செய்துள்ளோம். அதனைத் தொடர்ந்து இன்று (நேற்று) இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டித்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம். எங்களுடைய நாட்டில் இது போன்ற மிலேச்சத்தனமான கொடூரங்கள் இடம்பெறுவதும் அதனால் பெண்கள் பாதிக்கப்படுவதும் அதிகரித்துச் செல்கின்றன.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்கான கட்டுக்கோப்புகளும் அதற்கான பின்னணிச் செயற்பாடுகள் இருந்தன. தற்போது அந்த சூழ்நிலைகள் மாற்றம் பெற்றதால் வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதற்கு அரசு ஓர் தெளிவான பதிலை தர வேண்டும். இவற்றைத் தடுப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அவை மக்கள் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். குறிப்பாக பெண்கள், சிறுவர்களுக் கெதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அத்துமீறல்களை தடுப்பது தொடர்பில் அதிக கரிசனை கொண்டவையாக இருக்க வேண்டும். இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறக்கூடாது.

தமிழ் – சிங்கள மக்கள் என்ற பேதமின்றி, பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. இவை கட்டுப்படுத்தப்படவேண்டும். புங்குடுதீவு மாணவியின் படுகொலையின் பின்னர் மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்களையும் முழு அடைப்பையும் மேற்கொண்டோம். எதிர்வருகின்ற காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்ற எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் பெண்கள், சிறுவர்களுக் கெதி ரான வன்முறைச்சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதற்கு அரசு சரியான நீதியான தீர்வைத் தரவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்குக் கடும் தண்டனைகளை விதிக்க வேண்டும்.

மேலும் தமிழர் தாயகத்திலே இடம்பெற்று வருகின்ற இவ்வாறான கொடுமைகளை பார்க்கின்றபோது திட்டமிட்ட முறையிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்தினாலும் எம்மவர்களை வைத்துக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருகின்றதா என்பதான சந்தேகங்களை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கின்றது–என்று மாணவ பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த கவனவீர்ப்புப் போராட்டத்திலே அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குகொண்டிருந்தனர்.

(த-வ-4, ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. நிபுணர்

போது சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழு குற்றம் சுமத்தியிருந்தது.

குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே மறுப்பை வெளியிட்டுள்ளது காணமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு. அத்துடன், இராணுவத்தினரால் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுவது வெறும் கட்டுக்கதை எனவும் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கடந்த ஒரு வருடமாக இந்தப் பணிகளுக்காக தங்களை அர்ப்பணித்துப் பணியாற்றியதாகவும், சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனித உரிமை மீறல்கள் எதிரான குற்றங்களைக் கண்டறியும் வகையில் விசாரணைகளை முன்னெடுத்ததாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்மக்ஸ்வெல்பரணகமதெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் கால எல்லையை மேலும் நீடித்தமையானது முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட விசாரணைகள் தொடர்பிலான சில முக்கிய இலக்குகளை அடைவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கை, கடந்த ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதோடு, நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கும் வெளியிடப்பட்டுள்ளதுஎன்றுஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இராணுவத்தினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளால் தருஸ்மன் அறிக்கையும் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளது .

**இரண்டாம் கட்ட விசாரணைகள் தொடர்பான முக்கிய விடயங்கள்**

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது பொய். மேலும் தருஸ்மன் அறிக்கை பிழையான வழிநடத்தல்களை மேற்கொண்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் சேர்பியா மற்றும் குரேஷியா நாடுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை.

ஆயுதமேந்திய படைகள் பொது மக்களை பட்டினிச் சாவுக்கு இட்டுச் சென்றதாகக் கூறப்படுவது மிகைப்படுத்தப்பட்ட ஒரு விடயம்.

போர்ச்சூனிய வலயங்கள் எதுவும் காணப்படவில்லை. மேலும், விடுதலைப் புலிகள் அமைப்பு போர் சூனிய வலயங்களை விரும்பவில்லை. எனினும், பொதுமக்கள் மீதான ஷெல் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும்.

இறுதிக்கட்டப் போரின் போது ஏராளமான பொதுமக்கள் விடுதலை புலிகளால் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டமையாலேயே சிவிலியன்கள் உயிரிழந்தனர். சுமார் மூன்று இலட்சம் முதல் மூன்று இலட்சத்து 30 ஆயிரம் பொதுமக்கள் வரை புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த தோடு, அவர்கள் தப்பிச்செல்ல முற்படுகையில் உயிரிழந்தனர்.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் உள்நாட்டுப் பொறி முறைகளுக்கமைய, உள்ளூர் விசேட நீதிமன்றங்களில் உள்நாட்டு நீதிபதிகளைக் கொண்டே விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு,

இந்தச் செயற்பாட்டில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு அனுமதியில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-சி)

## வவுனியா

நேற்று இடம்பெற்றது. இதன்போது, வவுனியாவில் கடந்த 16 ஆம் திகதி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட பாடசாலைச் சிறுமிக்கு அஞ்சலி செலுத்தப்படவில்லை. அத்துடன் கண்டனமும் தெரிவிக்கப்படவில்லை.

குறித்த மாணவியின் வன்புணர்வின் பின்னரான படுகொலை தொடர்பில் வடக்கு மாகாணம் முழுவதிலும் நேற்று முன்தினம் அடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் இது தொடர்பில் எந்தவொரு உறுப்பினராலும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, கடந்த ஆண்டு மே மாதம் கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் படுகொலையின் பின்னர் இடம்பெற்ற மாகாண சபை அமர்வில் - மே மாதம் 21 ஆம் திகதி இடம் பெற்ற அமர்வில் - மாணவியின் படுகொலைக்காக இரு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு அதன் பின்னரே சபை அமர்வு ஆரம்பமாகியிருந்தது. அத்துடன் சபை அமர்வில் பல உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்து உரையாற்றியும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மரண அறிவித்தல்

### கந்தையா மனோகரன்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மனோகரன் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - லட்சுமி தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரியின் (ராசாத்தி) அன்புக்கணவரும் தனஞ்சயனின் அன்புத்தந்தையும் மோகனபுஸ்பத்தின் அன்பு சகோதரனும் பொருமாள்பிள்ளையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம். தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை சிவயோகராசா



திருகோணமலை, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும், தற்போது அமெரிக்கா நியூஜெசி மாநிலம் நேவாக்கை (Newerk) வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவயோகராசா 22.02.2016 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - பூமாதேவி தம்பதியரின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், பிருகாஷினி, கஜாயினி, பிரோஷாண் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயநீதனின் அன்பு மாமனாரும், தருணீஸ்வர், ஜயணீஸ்வர், விஷ்வமாயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(69336)(11,17,20)
தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு: 021 221 3271

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வராணி நமசிவாயம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி நமசிவாயம் 24.02.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நமசிவாயத்தின் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், இராசநாயகம், சபாநாயகம், குலேந்திரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரவீந்திரன் (ஜேர்மனி), புவனேந்திரன் (கனடா), ஞானேந்திரன் (கனடா), சித்திரா, யசோதரா (கனடா), கலாதரா (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், அருட்செல்வி (ஜேர்மனி), கமலினி (கனடா), செல்வரதி (கனடா), புவனேஸ்வரன் ( யா/வேம்படி மகளிர் கல்லூரி), றங்கேஸ்வரன் (கனடா), கருணாமாறன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், பிரியன், பிருந்தா, மிதுளா, கார்த்திகன், தர்மிகா, அனோஜன், நிரோஜன், விதுசன், ரமணன், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீகாந்தா வாசா"
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
(69574)
(11,18)
தகவல்:
ச.புவனேஸ்வரன்
(மருமகன்)
021 205 4863

### திருமதி அன்னலட்சுமி மகாலிங்கம்



தன்னை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், திக்கரை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி மகாலிங்கம் 24.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் அன்னபூரணம், அம்பிகைபாகன், சரஸ்வதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சௌந்தரநாயகி, பரமேஸ்வரி, நல்லம்மா, நல்லலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சத்தியலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வேதநாயகம், புவனேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் செல்வராசா (சிதம்பரி), உதயரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமானந்தன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் செல்வராணி, தவரூபி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதிராஜ் (ஜேர்மனி), மாதங்கி (ஜேர்மனி), அயித்தா (ஜேர்மனி), பவித்திரா (ஜேர்மனி), பிரதீனா (ஜேர்மனி), ரூபன், சஜீவன், கீர்த்திகா, சஜீவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கரை, களபூமி,
காரைநகர்.
(69578)
(11,18)
தகவல்:
குடும்பத்தினர்.

077 102 8815

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

தலை மன்னார்க் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராமேஸ்வர மீனவர்கள் 12 பேருக்கும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கக மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இராமேஸ்வர மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் மன்னார் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். இலங்கைக் கடற்பரப்பினுள் கடந்த 10 ஆம் திகதி அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் 2 படகுகளில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 12 மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் விசாரணைகளின் பின் கடந்த 11 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (ற-ஐ-4-56)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா(சரசு) மயிலு



அவனிக்கு வந்தது 27 . 03 . 1942

அவனடிக்கு சென்றது 24 . 02 . 2016

சிறுப்பிட்டி கிழக்கு பன்னாலையைப் பிறப்பிடமாகவும். நெல்லியோடை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா (சரசு) மயிலு கடந்த (24.02.2016) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆண்டார் - பைரவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - வைரம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற மயிலுவின் அன்பு மனைவியும்இரங்கநாதன் (ஆசிரியர் - யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்). கற்பனாவதி. ஜெயபவானி (ஜேர்மனி). ரவீந்திரன் (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரகுமாரன் (சௌந்தரா). இந்திரலிங்கம் (ஜேர்மனி). சூரியவதனி. அனுஷா (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை. பொன்னு. செல்லம்மா மற்றும் நாகமுத்து. இளையபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பசுபதி. தவமணி மற்றும் கிருஷ்ணவாசன் (ஓய்வு நிலை கிராம சேவகர்). நாகேந்திரன் (ஓய்வு நிலை கிராமசேவகர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாகித்யா. கல்கிசன். கஸ்மிரன் (செலிங்கோ இன்சூரன்ஸ் - அச்சுவேலி). சாதுரியா. ஆராதனா. அகிம்சா. அங்கணன். அம்பாலிகா, யுகி (ஜேர்மனி). கவி (ஜேர்மனி). ரவிசா (நெதர்லாந்து). ஆர்ஜன் (நெதர்லாந்து) ஆகியோரின்அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி.
0777 241 403 (69590) (15,17,20)

தகவல்: மகன் ம.இரங்கநாதன்
ஆசிரியர் -
யா/இடைக்காடு மகாவித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கருணாகரன் (சுந்தரமூர்த்தி)
(ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர்)



வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தை (வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயிலடியை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கருணாகரன் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகநாதன் - தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும் பிரபாகரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் - வேலணை). மேகலா (கிராம சேவையாளர் - சரவணை). பிரியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை). சுஜாதா. தேவபாலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை). பிரியலக்ஷன் (கிராம சேவையாளர் - புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயஸ்ரீ. ஜெயானந்தன் . விஜயதீபன் (கணினி வள நிலையம் வேலணை கல்விவலயம்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான தவரெட்ணம். சுப்பிரமணியம் மற்றும் சந்திர சேகரம். சொக்கலிங்கம். செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆரபி. ஆகாஷ். கஜானனன். சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
2 ஆம் வட்டாரம். (69594)(15,17,20)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரலதா கருணேஸ்வரன்

மலர்வு: 15.07.1974 உதிர்வு: 25.02.2016



கொழும்புத்துறை 2ஆம் குறுக்கினைப் பிறப்பிடமாகவும், காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரலதா கருணேஸ்வரன் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா துரைராசா மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும். சின்னத்துரை கருணேஸ்வரனின் பாசமிகு மனைவியும். ஜெயமதுசன். மதுசாயினி. கனியருவி. கவிப்பிரியா. மிதுஷா ஆகியோரின் அன்புத் தாயும், ச.பரமேஸ்வரி. து. சௌந்தர்ராஜா. சி. ரஞ்சிதமலர். து. ஆனந்தராசா (டென்மார்க்), இ. விஜயரஞ்சினி (லண்டன்). து. ரவீந்திரராசா (நோர்வே). வி. இராஜரோகினி (பிரான்ஸ்) க. இராஜபத்மினி. து. சற்குணராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகசுந்தரம். கலாஜோதி. காலஞ்சென்ற சிவலோகநாதன். றெஜினா, இன்பராசா. மஞ்சுளா. விஜயபாலன், கமலநாதன் (விரிவுரையாளர்), கமலீற்றா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சின்னத்துரை இலெட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு 2ஆம் குறுக்குத் தெரு. கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.24/5, 2ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(69560)(10.17.20)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி சின்னத்துரை

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 02.02.1946 | 25.02.2016 |



வேலணையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சின்னத்துரை நேற்று (25.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறு முகம்- சிவகாமி, விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னத்துரையின் (கிழங்கு வியாபாரி- திருநெல்வேலி) அன்பு மனைவியும், சந்திரகுமாரின் பாசமிகு தாயும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற துரைராசா மற்றும் கணேஸ் (பிரான்ஸ்), மகேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற பரமதேவன் மற்றும் சண்முகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிரிஷாந்தியின் அன்பு மாமியாரும், அருஷ்ஷிகா, பிரணவன், மதுரிகா, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

121/01, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (69593) (11,17,20)

தகவல்:
சந்திரகுமார் (மகன் - குமார்)
077 412 4810

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாணவி படுகொலை; சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, பெப்.26
வவுனியா-உக்குளாங்குளம் பகுதியில் 13 வயது மாணவி வன்புணர்வுக்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுகைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டு, சடலம் தூக்கில் தொங்க விடப்பட்டிருந்தமை உடற் கூற்றுப்பரிசோதனையில் உறுதி செய்யப் பட்டது.

இதனைத் தொடர்ந்து வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வந்த விசாரணையின் போது, கிடைத்த தகவலுக்கு அமைய சிறுமியின் அயல் வீட்டில் வசித்து வந்த 35 வயதான ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபரை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் இன்று வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (வ)

# இலங்கைக்கு ஈரான் தொழில்நுட்ப உதவி

ஈரான் அரசு இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான 11 ஆவது வர்த்தகக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் பதியுதீன் கூறியுள்ளார். (வ)

## நினைவஞ்சலிகள்

ஏழாம் ஆண்டு — முதலாம் ஆண்டு





தோற்றம் 15.08.1940 — மறைவு 17.04.2009
**அரியகுட்டி பரமேஸ்வரன்** (கருப்பையா)

தோற்றம் 02.05.1946 — மறைவு 09.03.2015
**பரமேஸ்வரன் இராசேஸ்வரி** (கிளி)


ஆண்டுகள் ஓடிப்போனது ! ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை !
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும் எங்களோடுதான் !
வாழ்ந்திடுவீர்கள் வருடங்கள் பலவானாலும் !

காளிகோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

ப.சிவராஜா [சிவா, கமல்] மகன்

## மரண அறிவித்தல்கள்

### சண்முகராசா குகனேசன் (கோச்சண்ணை)



வடலியடைப்பைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா குகனேசன் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் பொன்மலர் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில் வாகனம் மற்றும் தில்லைநாயகி தம்பதி களின் அன்பு மருமகனும் மனோறூபியின் அன்புக் கணவரும் பிரகலாதன், சபீஷன் ஆகியோரின் அன்புத்தந்தையும் நாகராணி, பத்மராணி, சிவநேசன், ராகுலன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


காயாவீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(69601)(15,17)

**தொடர்பு: 077 5170 178, 077 6902 998**

### கனகசபை பரராஜசிங்கம் (முருகண்டி)



பிறவுண் றோட் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரராஜசிங்கம் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் பூமணி, செல்வநாயகி (சுவிஸ்), தவமணி (கொழும்பு), சறோயினிதேவி, லதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரவீந்திரன், குனேந்திரன் (லண்டன்), சாந்தினிதேவி (லண்டன்), வசந்தி (இத்தாலி), ஜெயந்தி (பதுளை), சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானி, கணேஷ், கஜன், மகேஸ்வரன், தபேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜன், சீரன், கவிப்பிரியா, பாரதி, பாலினி, வானதி, மதுஷா, லிதுனா, கவியுதன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 55, கலட்டியம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(69597)(15,17,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையின் மலேரியா தடை இயக்கத்தில் பூச்சியியல் உதவியாளராக கடமையாற்றும் திரு. சி.சிவமோகன் அவர்களின் அன்புத் தந்தையார்

**மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்** (C/29528) (10.17)
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.**

## துயர் பகிர்கின்றோம்



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களான பிரபாகரன் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஜெ.மேகலா (கிராம அலுவலர்) வி.பிரியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), தேவபாலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), பிரியலக்ஷன் (கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் கருணாகரன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்
தீவகம் தெற்கு- வேலணை.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்

(69589) (10.17.20)

## விண்ணக வாழ்வின் 41 ஆம் நாள் நினைவுடன்

மலர்வு 1936 . 07 . 19



உதிர்வு 2016 . 01 . 18

**அமரர் மேரிதிரேசா பசுபதி**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அமரர் மேரிதிரேசா பசுபதி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (27.02.2016) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல.17/1, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம். **077 4189 469**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### தேவி (பத்தினி அக்கா) வீரபுத்திரன்



காட்டுப்புலம் கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தேவி (பத்தினி அக்கா) வீரபுத்திரன் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வீரபுத்திரனின் மனைவியும் காலஞ்சென்ற கபிலதாஸ் மற்றும் கவிதா, கிருசா, அனுசா ஆகியோரின் தாயாரும் சிறிதரனின் (ரகு) மாமியாரும் மகேஸ் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காட்டுப்புலம்,
கரவெட்டி கிழக்கு

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 4687 557**

(c/29532)(15,17)

### தம்பிப்பிள்ளை குமாரசாமி
(ஓய்வு பெற்ற பொலிஸ் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான தம்பிப்பிள்ளை குமாரசாமி அவர்கள் நேற்று (25.02.2016) வியாழக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லை வேம்படி,
சுழிபுரம். 077 990 7889

தகவல்: **குடும்பத்தினர்.**
ஜெகன்

(c/29531)(15,17)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 26

**உருத்திரபுரம் ம.வியின் கால்பந்தாட்டத் தொடர்**

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும் பிரதி அதிபருமான திருமதி சந்திரகாந்தன் கமலாவதி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக வடமாகாண பாடசாலைகளுக்கு இடை யில் கால்பந்தாட்டத் தொடர் ஒன்றை முன்னெடுத்து வருகிறது. கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் முழங்காவில் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கோணாவில் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி மு.ப. 11.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியுடன் மோதவுள்ளது. காலை 9.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அக்கராயன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென்.லூட்சியா மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு கோட்டைகட்டியகுளம் அ.த.க. அணியை எதிர்த்து வேரவில் இந்து மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லயன்ஸ் அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**வைகறை வி.கழகத் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புது மடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மல்வம் ஞானபிரகாசர் அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணி மோதவுள்ளது. (ம-23)

## பட்டதாரிகளை

யமைச்சர்ரவி கருணாநாயக்கவின் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அமைவாகவே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் அரச சேவைக்கு ஆரம்ப காலத்தில் பட்டதாரிகள் நேரடியாக ஆள் சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அதே வேளையில், 1964 ஆம் ஆண்டு வரை பட்டதாரிகள் சகலருக்கும் அரச வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்காக பட்டதாரிப் பயிலுநர் முன்மொழிவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் காலத்திற்குக் காலம் வந்த அரசுகளினால் பல்வேறு பட்டதாரிப் பயிலுநர் முன்மொழிவுத் திட்டங்களின் கீழ் பட்டதாரிகள் ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் 2005 ஆம் ஆண்டில் 46 ஆயிரத்து 198 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் 41ஆயிரத்து 871பட்டதாரிகள் பயிலுநர்களாக ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். அந்தப் பயிலுநர்கள் ஒரு வருட கால பயிற்சியின் பின்னர் 'அபிவிருத்தி உத்தியோகத்தர்' சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

2005 ஆம் ஆண்டில் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறைச் சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் உட்பட மொத்த அரச துறையினுள் உண்மையான பதவியணி 9 லட்சத்து 642 ஆகக் காணப்பட்டது.

வருடாந்தம் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறைச் சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள ஊழியர்களைத்தவிர, சுமார் 22 ஆயிரம் அரச ஊழியர்கள் ஓய்வு பெறுகின்ற போலும், மொத்தமாக அரச துறையிலுள்ள உண்மையான பதவியணி 2014 ஆம் ஆண்டளவில் 13 லட்சத்து 2 ஆயிரத்து 258 வரை துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விதமாக அரச சேவைக்கு 88 ஆயிரத்து 69 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆள் சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்ற கடமைகள் மற்றும்பொருத்தமான விடய அறிவு மற்றும் தேர்ச்சி என்பன இந்த உத்தியோகத்தர்களிடத்தில் இல்லாதபடியினால் எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகளை அடைந்து கொள்வதில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

எனவே, அரச துறையின் பதவியணியை 5 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்ய வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. இந்தப் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளபடியினால், அந்த மீளாய்வின் பின்னர், சேவையின் தேவைப்பாட்டுக்கு அமைவாக அடையாளம் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களுக்கு மாத்திரம் பட்டதாரிகள் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரம் ஆள்சேர்ப்புச் செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மின்

அலுவலகங்களில் பணிபுரிந்தவர்கள் வெப்பம் தாங்காது நேற்றுக் கடும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். அத்தோடு அலுவலகப் பணிகளும் முடங்கின.

வியாபார நிலையங்களும் நேற்றுச் செயலிழந்திருந்தன. குறிப்பாகக் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் வீதிச் சமிக்ஞைகள் தடைப்பட்டதால் வாகனப் போக்குவரத்து கடும் நெரிசலை ஏற்படுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சுமார் 2 மணித்தியாலங்களில் மின்சாரம் வழங்கல் மீள ஆரம்பிக்கப்பட்டது. வடக்கில் நேற்று முன்னிரவு வரை வவுனியாவின் ஒரு பகுதியும், மன்னாரின் ஒரு பகுதியும் மின்சாரம் வழங்கப்படாதிருந்து சீர் செய்யப்பட்டுக்கொண்டிருப்ப தாகவும் மின்சார சபையினரால் தெரிவிக் கப்பட்டது.

பொல்பிட்டியவிலிருந்து கொலன்னாவை வரையிலான அதிவலுக் கொண்ட பிரதான மின் கட்டமைப்பை மின்னல் தாக்கியதன் காரணமாகவே நாடளாவிய ரீதியில் மின்சாரத் தடை ஏற்பட்டது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது

லக்சபான நீர் மின் நிலையத்திலிருந்து பொல்பிட்டிய உப மின்நிலையத்தினூடாகக் கொழும்புக்கு மின் வழங்கும் 33,000 வோல்ட் மின் தொகுதியையே மின்னல் தாக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்து

**தொடர்பில் அடுத்த அமர்வில் விவாதிக்கப்படவுள்ளது.**

வடக்கு மாகாண சபையின் 46 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது, தகவல் அறியும் உரிமைச் சட்டம், மாகாணசபையின் கருத்தை அறிவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் தெரிவித்தார். இதன் போது முதலமைச்சர் குறித்த சட்டம் தொடர்பில் சில திருத்தங்களைச் சமர்ப்பிக்க வேண்டி இருப்பதாகக் குறிப்பிட்டார். அதனால் இதனை அடுத்த அமர்வில் விவாதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின், மீன்பிடி தொடர்பான தனிநபர் சட்டவரைவு தொடர்பில் மாகாண சபையின் கருத்து அறிவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், இதில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். எனவே இது தொடர்பில் விவாதிக்க ஒரு நாள் ஒதுக்குமாறு கோரினார்.

இதன்போது அவைத் தலைவர், அடுத்த அமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி இடம் பெறும். அதில் இந்தவிடயத்தைஎடுத்துக்கொள்வோம். விவாதித்து முடிக்கவில்லையாயின் மறுநாளும் விவாதிப்போம் என்றார்.

இறுதியாகப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையை உருவாக்குவதற்கான நியதிச் சட்டத்தைச் சபையில் சமர்ப்பித்தார். இதன்போது, நியதிச் சட்ட உருவாக்கத்துக்கு ஒத்துழைத்த அதிகாரிகளுக்கு நன்றிகளையும் அவர் தெரிவித்தார். இந்த நியதிச் சட்டம் தொடர்பில் அடுத்த அமர்வில், விவாதம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (த-வ-5)

## தொடரும்

மாறு கோரி, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் முன்னரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், மகசின் சிறையிலுள்ள கைதிகள் கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்தும் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மகசின் சிறையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளில் 3 கைதிகள் நேற்று மயங்கிய நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பாலசிங்கம் மனோகரன், சற்குணலிங்கம் தயாபரன், ஜோசப் செபஸ்தியாஸ் ஆகியோரே மயங்கியுள்ளனர்.

எனினும் அவர்களது உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்கின்றது. அவர்களை நேற்றுமுன்தினம் சிறைச்சாலைகள் அமைச்சின் பேச்சாளர் சென்று பார்வையிட்டதுடன், வெள்ளிக்கிழமைக்கு (இன்று) முன்னர் சாதகமான பதில் தருவதாகவும் உணவு தவிர்ப்பைக் கைவிடுமாறும் கேட்டிருந்தார்.

எனினும் முன்னர் பல தடவைகள் இவ்வாறு வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றமடைந்தமையால், போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்றும் கைதிகளின் உறவுகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, அநுராதபுரம் சிறையிலுள்ள இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் கடந்த திங்கட்கிழமையிலிருந்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். மதியதாசன் சுலக்சன், கணேசன் தர்சன் ஆகியோரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த இரண்டு அரசியல் கைதிகளும் கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நீதிமன்றில் விசாரணையிலிருந்த நிலையில் தாம் தாக்கல் செய்த குற்றப்பத்திரம் தவறு என்று கூறிச் சட்டமா அதிபர் திணைக்களம் மீளப் பெற்றிருந்தது.

அதன்பின்னர், இதுவரை அவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை. இதனால் குறித்த இரண்டு அரசியல் கைதிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (த-வ-4)

## பாலியல்

**பருக்கு மனுஒன்றுகையளிக்கப்பட்டுள்ளது.** வவுனியாவில் பாலியல் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட மாணவியின் சாவுக்கு நீதிவேண்டி, நேற்று முல்லைத்தீவு பெண்கள் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மனுவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இதனை அனைத்துப் புள்ளிவிவரங்களும் சுட்டிக்காட்டுகின்றன. பல தளங்களில் பெண்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிய போதும் இவ்வாறான பாலியல் சம்பவங்கள் எமது சமூகத்தையே சீர்குலையச் செய்கின்றன.

வவுனியா உக்கிளாங்குளம் மாணவி வன்புணர்வுக்கு பின் படுகொலை செய்யப்பட்டமை வடக்கு மாகாணத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. பெண்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகியுள்ளது. பெற்றோர் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது.

வித்தியாவின் வழக்கு இன்னும் முற்றுப்பேறாத நிலையில் இன்று வவுனியா மாணவி. அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் மிககுறுகிய காலத்தில் நான்கு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது முதன்மையான சம்பவம் அல்ல. இதற்கு முன்னரும் சாரதாம்பாள், தர்சினி, நகுலா, ரஜனி எனப் பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பெண்கள் சமுதாயம் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தநிலை பெண்கள் மத்தியில் பாதுகாப் பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தியதுடன், அவர்கள் வளர்ச்சியில் முட்டுக்கட்டையும் போடப்பட்டுள்ளது.

இந்தநிலை தொடருமானால் நாட்டில் அமைதியின்மை நிலவும், சுதந்திரம் பாதிக்கப்படும், மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படும், பெண்கள் முன்னேற்றம் அடைவதில் தடைகள் ஏற்படும். அந்த வகையில் மாணவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்துக்கான குற்றங்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். அதற்குஏற்ற வகையில் இலங்கை தண்ட னைச் சட்டக் கோவையில் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்பது எங்கள் நிபந்தனையாகும்-என்றுள்ளது. (த-வ-21,ரி3)

## ஜோசிதவுக்கு

கைதுசெய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ச உள்ளிட்ட 5 சந்தேகநபர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் கடுவெல நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு நீதிவான் தம்மிக்க ஹேமபால உத்தரவு பிறப்பித்தார்.

யோஷித ராஜபக்சவுடன் சீ.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளரான நிஷாந்த ரணதுங்க, ரொஹான் வெலிவிட்ட, அஷான் ரவிநஷாத் பெர்னாண்டோ மற்றும் கவிஷான் திஸாநாயக்க ஆகியோரின் விளக்கமறியலே நீடிக்கப் பட்டுள்ளது.

சீ.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர்கள் கடந்த மாதம் 30ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றைய தினமும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அவரின் மனைவி ஷிரந்தி ராஜபக்ச, மகிந்தவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ச மற்றும் உறவினர்கள், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுவெல நீதிவான் நீதிமன்ற வளாகத் திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(த-வ-சி)

## அமைச்சரானார்

ளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பிரதேச அபிவிருத்தி தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னிலை யில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் மற்றும் சரத் பொன்சேகாவின் குடும்பத்தினர் ஆகியோரும் இந்தப் பதவிப்பிரமாண நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-வ-சி)

## யாழ். கோட்டப் பாடசாலைகளின் வலைப்பந்தாட்ட இறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமும் இறுதியாட்டமும் இன்று வெள்ளிக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் வி.கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

15வயதினருக்கான அரையிறுதியாட்டங்களில் பாசையூர் புனித அந்தோனியார் றோ.க.பாடசாலையை எதிர்த்து வைத்தீஸ்வரா கல்லூரி அணியும், சென்.ஜேம்ஸ் பெண்கள் கல்லூரி அணியை எதிர்த்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளன.


17வயதுப் பிரிவினருக்கான அரையிறுதியாட்டங்களில் பாசையூர் புனித அந்தோனியார் றோ.க.பாடசாலை அணியை எதிர்த்து வைத்தீஸ்வரா கல்லூரி அணியும், திருக்குடும்ப கன்னியர் மடத்தை எதிர்த்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

19வயதுப் பிரிவினருக்கான அரையிறுதியாட்டங்களில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர் மடமும், வேம்படி மகளிர் க ல்லூரி அணியை எதிர்த்து பாசையூர் புனித அந்தோனியார் றோ.க.பாடசாலை அணியும் மோதவுள்ளன. (ம-422)

## கரவெட்டி கால்பந்தாட்டத்தின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 26

கரவெட்டி பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத்தின் அரையிறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் அல்வாய் மனோகரா மைதானத்தில் நடைபெறவுள்ளன. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கரவைச் சுடர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியில் யங்கமன்ஸ் அணியை எதிர்த்து கருணாகரன் அணி மோதவுள்ளது. (ம-422)




## மெஸ்ஸியின் துடிப்பான ஆட்டத்தால் ஆர்சனலை வீழ்த்தியது பார்சிலோனா

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரில், பார்சிலோனா அணிக்கும் ஆர்சனல் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மெஸ்ஸியின் இரட்டைக் கோல்களின் உதவியுடன் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் முதல் பாதியில் எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. மெஸ்ஸி, நெய்மர் இருவராலும் பார்சிலோனாவுக்கு சாதகமாக சில கோல்களுக்கான சந்தர்ப்பங்கள் அமைந்தாலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் இதே நிலைமைதான். ஆட்டம் நிறைவடையும் நிமிடங்கள் நெருங்க நெருங்க ஆட்டம் சமநிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. 81 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் மெஸ்ஸி. 84ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலை விளாச முடிவில் 2:0 என்று வெற்றிபெற்றது பார்சிலோனா. இந்த ஆட்டத்திலும் தோல்வியடைந்ததால், சம்பியன்ஸ் லீக்கிலிருந்து வெளியேறும் ஆபத்தை ஆர்சனல் எதிர்கொண்டுள்ளது. (ம)

## அணியில் இளம் வீரர்கள் உள்ளமை வெற்றிக்கான வழியை ஏற்படுத்தும்

### – மலிங்க தெரிவிப்பு



இலங்கை அணியில் இளம் வீரர்கள் உள்ளமை அணிக்கு புத்துணர்வை ஏற்படுத்தக் கூடிய விடயம் எனத் தெரிவித்துள்ளார் அணியின் தலைவரான மலிங்க.

இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை அணி தொடர்பாக மலிங்க தெரிவிக்கையில்:-

'கண்டிப்பாக ஒவ்வொரு ஆட்டமும் தனிப்பட்ட நபருக்கானது அல்ல. ஆட்டத்தின் போது எப்படி அனைவரும் செயற்படுகிறோம் என்பதை பொறுத்தே வெற்றி வாய்ப்பு அமையும். இந்திய தொடரில் இலங்கை அணியின் துடுப்பாட்டத் துறை சற்று தடுமாற்றத் துடனேயே காணப்பட்டது. ஆனால் தற்போது அதிலிருந்து மீண்டுள்ளோம். இலங்கை அணியில் பல இளம் வீரர்கள் இருப்பது பார்க்கவே சிறப்பாக உள்ளது. அது அணிக்கு புத்துணர்வை ஏற்படுத்துகிறது. அவர்களின் அனுபவமும் அணிக்கு உதவியாக இருக்கும். அதேபோல் அணியில் உள்ள அனுபவ வீரர்கள் அணிக்கு நல்ல நிலைமையை ஏற்படுத்தி தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் – என்றார். (ம)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனி மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளன. சென்.பற்றிக்ஸ் மைதானத்தில் காலை 8 மணி தொடக்கம் தொடர்கள் ஆரம்பமாகி நடைபெறும். (ம)

## முதலிட சிம்மாசனத்தில் மீண்டும் ஆஸ்திரேலியா



நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் ஆஸ்திரேலிய அணி, ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைக் கைப்பற்றியதுடன், எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை முதல் இடத்திலேயே நீடித்து ஐ.சி.சி.யின் பரிசுத் தொகையான 6 கோடியே 75 லட்சங்களை (இந்திய மதிப்பில்). தட்டிச் செல்லக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஆண்டுதோறும் ஏப்ரல் முதலாம் திகதி, தரப்படுத்தல் நிலவரப்படி முதல் நான்கு இடத்திலும் உள்ள அணிகளுக்கு பணப்பரிசிலை வழங்குவதுண்டு. நியூசிலாந்துக்கு எதிரான தொடரை முழுமையாகக் கைப்பற்றியதன் மூலம் ஆஸ்திரேலியா 112 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. ஏப்ரல் மாதம் வரை டெஸ்ட் தொடர்கள் இல்லை என்பதால் ஆஸ்திரேலியா முதலிடத்தில் இருப்பது உறுதியாகியுள்ளது.

இதன்படி ஆஸ்திரேலியாவுக்கு 6 கோடியே 75 லட்சங்கள் (இந்திய மதிப்பில்) கிடைக்கும். இரண்டாம் இடத்தில் உள்ள இந்தியாவுக்கு 3 கோடியே 40 லட்சமும் (இந்திய மதிப்பில்), 3ஆவது இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்காவுக்கு ஒரு கோடியே 35 லட்சமும் (இந்திய மதிப்பில்), 4ஆவது இடத்தில் உள்ள பாகிஸ்தானுக்கு ரூ.68 லட்சமும் (இந்திய மதிப்பில்) பரிசாக வழங்கப்படவுள்ளது. (ம)

## இன்னும் இரண்டே ஆண்டுகளில் நியூசிலாந்து அணி பலம் பெறும்

### பிரியாவிடை உரையில் மக்கலம்

இன்னும் இரண்டு வருடங்களில் உலகின் பலமான அணிகளில் ஒன்றாக நியூசிலாந்து பலம் பெறும் என்று தனது பிரியாவிடை உரையில் குறிப்பிட்ட மக்கலம், வில்லியம்சன் தலைமைத்துவத்தில் சிறப்பாகச் செயற்படுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஓய்வு தொடர்பான உரையில் மக்கலம் மேலும் தெரிவிக்கையில்;

– ஆஸ்திரேலியா, நீங்கள் உலகின் முதல் தர அணி என்பதை நிரூபித்து விட்டீர்கள். நீங்கள் இங்கு வந்திறங்கும் போது எங்களுக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாகவே கருதினோம், ஆனால் நீங்கள் எங்களை ஊதித்தள்ளி மைதானத்துக்கு வெளியே எறிந்துவிட்டீர்கள். நீங்கள் ஏன் தரமான அணி என்பதை எங்களுக்குக் காட்டி விட்டீர்கள். உங்களிடம் ஸ்ரீவ் சிமித் என்ற மிகப்பெரிய தலைவர் உள்ளார். நாங்கள் ஒரு அணியாக வெற்றி, தோல்வி என்று ஏற்றத்தாழ்வான நிலையை சந்தித்துள்ளோம், ஆனால் இந்த அணி குறித்து எமது மக்கள் பெருமையடைவார்கள் என்றே நான் கருதுகிறேன். இந்த அணி மட்டுமல்ல நியூசிலாந்துக்கு கடந்த பல ஆண்டுகளாக ஆடிய வீரர்கள் குறித்தும் நீங்கள் பெருமையடைவீர்கள் என்றே கருதுகிறேன். எனது வாழ்க்கையில் என் சக அணியினரை நான் மறக்க வாய்ப்பில்லை. நியூசிலாந்தில் மட்டுமல்ல அயல்நாடுகளிலும் அவர்களுடன் இருந்த தருணங்களை மறக்க முடியாது. நீங்கள் ஒரு அணியாக நம் அணியை மேலெடுத்துச் செல்வீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன். அடுத்த 2 ஆண்டுகளில் நியூசிலாந்து அணி உயரிய நிலையை அடையும் என்றே நான் கருதுகிறேன். வில்லியம்சனின் தலைமையை நம்புகிறேன். ஒரு கிரிக்கெட் வீரருக்கு குடும்பம் ஒருசுவனமானஇடம் வீட்டை விட்டு நிறைய ஆண்டுகள் பிரிந்து இருக் கிறோம். குடும்பத்தின் ஆதரவும், அர்ப்பணிப்பும் இல்லாவிட்டால் இதனை செய்து விட முடியாது. என்னுடன் இருந்த என் குடும்பத்துக்கு நன்றிகள் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மலிங்க, குலசேகர மிரட்டல் பந்துவீச்சால் அரபு இராச்சியத்தை வென்றது இலங்கை

நடைபெற்றுவரும் ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை - ஐக்கிய அரபு இராச்சிய அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் 14 ஓட்டங்களால் இலங்கை வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஐக்கிய அரபு இராச்சியம் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆரம்ப வீரராக டில்சானுடன் களமிறங்கினார் சந்திமல். சந்திமல் ஓரளவு சராசரியைப் பேணினாலும் டில்சானின் ஆட்டத்தில் அளவுக்கு அதிகமான தடுமாற்றம் பிரதிபலித்தது. பத்தாவது பந்துப்பரிமாற்றத்தில் 68 ஓட்டங்களை அணி பெற்றிருந்த வேளையில்,27 ஓட்டங்களுடன் (28 பந்துகள்) ஆட்டமிழந்தார் டில்சான். சிறிவர்த்தன, சாணக, மத்தியூஸ் மூவரும் ஒற்றையிலக்கங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மொத்தத்தில் இலங்கையின் துடுப்பாட்டவரிசை தனது கடமையை சரிவரச் செய்யாமல் சரிவு கண்டது. மறு முனையில் அரைச்சதம் கடந்து சரியாக 50 ஓட்டங்களிலேயே சந்திமல் ஆட்டமிழந்தார். ஜெயசூரியா, கப்புக்கெதர இருவரும் பெற்ற பத்து ஓட்டங்களே பின்வரிசையில் பெறப்பட்ட தனிநபர் அதிக ஓட்டங்களாக அமைய 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கை 129-8.

பந்துவீச்சில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்பாக ஜாவீட் 3 இலக்குகளையும், நவீட், சாக்சாட் இருவரும் தலா இரு இலக்குகளையும், முஸ்தபா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 130 ஓட்டங்கள் என்பது இலகுவான இலக்காகத் தெரினும் புற்கள் உள்ள ஆடுகளத்தில் இது கடினமான இலக்கே. முதல் பந்திலேயே முஸ்தபாவை வீழ்த்தினார் மலிங்க. முதல் பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் சாக்சாட்டும் மலிங்கவிடம் சிக்கினார். கலீம், உஸ்மான் இருவரையும் அடுத்தடுத்து வெளியேற்றினார் குலசேகர. நான்கு பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் ஐக்கிய அரபு இராச்சியம் 16-4. இரட்டை இலக்கத்தில் ஓட்டத்தை ஆரம்பித்தார் அன்வர். இருப்பினும் நீடிக்கவில்லை. இலங்கையின் இலகு வெற்றியை சிறிது நேரம் கேள்விக்கு உட்படுத்தினார் படில். தனது முயற்சியில் வெற்றியும் கண்டார். சகல இலக்குகளையும் இழக்கும் நிலையிலிருந்து மீண்டது மட்டுமல்லாமல் தனக்கான வாய்ப்பையும் அரபு இராச்சியம் உருவாக்கி இருந்தது. இறுதி நான்கு பந்துப்பரிமாற்றங்களில் 46 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலைமை. நான்கு இலக்குகள் கையிருப்பில் இருந்தன. இருப்பினும் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் ஐக்கிய அரபு இராச்சியத்தால் 9 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக மலிங்க 4 இலக்குகளையும், குலசேகர 3 இலக்குகளையும், கேரத் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மலிங்க தெரிவானார்.

ஆசியக் கிண்ணத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பங்களாதேஷை எதிர்த்து ஐக்கிய அரபு இராச்சியம் மோதவுள்ளது. (ம)

# தென்னாபிரிக்கா - இலங்கை தொடரில் சில மாற்றங்கள்

தென்னாபிரிக்கா-இலங்கை அணிகளுக்கிடையில் இவ்வாண்டு இறுதியில் ஆரம்பிக்கவிருந்த தொடரில், தென்னாபிரிக்கக்கிரிக்கெட் சபை சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

3 டெஸ்ட் ஆட்டங்கள், 5 ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள், 3 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடராகவே, இத்தொடர் அமையவுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் டிசெம்பர் 15-19 வரை இடம்பெறவிருந்த நிலையில், டிசெம்பர் 26ஆம் திகதிக்கு தொடர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் உள்ளூர் ரி-20 தொடரான ராம் ஸ்லாம் தொடர் நவம்பர் 1 முதல் டிசெம்பர் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள நிலையில், அதற்கேற்றவாறே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ம)

# ஜோகோவிக் 700




டுபாயில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் தனது 700ஆவது வெற்றியைப் பதிவுசெய்துள்ளார் ஜோகோவிக்.

காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டமான இந்த ஆட்டத்தில் சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் துனிசியாவின் மாலெக். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6-1 என்ற கணக்கில் கைப்பற்றிய ஜோகோவிக், தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி இரண்டாவது செற்றை 6-2 எனக் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற்கணக்கில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

சர்வதேச ரென்னிஸில் ஜோகோவிக் பெற்ற 700ஆவது வெற்றி இதுவாகும். தற்போது விளையாடிக்கொண்டிருக்கும் வீரர்களில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (1,067 வெற்றிகள்), ஸ்பெயினின் ரபேல் நடால் (775 வெற்றிகள்) ஆகியோருக்கு அடுத்த இடத்தில் ஜோகோவிக் இருக்கிறார். (ம)

# 'பீபா'வின் தலைவருக்கான தேர்தல் இன்று

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் அடுத்த தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று வெள்ளிக்கிழமை சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் பதவியில் கடந்த 18 வருடங்களாக இருந்த செப் பிளாட்டருக்கு, சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாகத்திலோ அல்லது செயற்பாடுகளிலோ ஈடுபட கடந்தாண்டு டிசம்பர் மாதம் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது இடத்தை இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுபவர் பிரதியீடு செய்யவுள்ளார்.




சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் 209 அங்கத்துவ நாடுகளும்தலா ஒவ்வொரு வாக்குகளைக் கொண்டிருக்கின்ற நிலையில், இரகசிய வாக்களிப்பு நிலையத்தில் அவை தமது வாக்குகளை அளிக்கவுள்ளன. இத்தேர்தலில், மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை ஒரு வேட்பாளர் பெறுமிடத்து, அதாவது 139 வாக்குகளை பெறுமிடத்து, அவர் முதலாவது சுற்றில் வெற்றி பெறுவார். இல்லாவிடின் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு இடம்பெற்று அதில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார். இத்தேர்தலில், ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கியன்னி இன்பன்டினோ, 2010ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத்தை ஒழுங்கமைத்தவர்களில் ஒருவரான டோக்யோ செக்ஸ்வேல், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் பிரதி செயலாளர் நாயகம் ஜெரோம் சம்பெய்ன், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவரான இளவரசர் அலி பின் அல் ஹுஸைன், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் உபதலைவரும் ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவருமான செய்க் சல்மான் பின் ஏப்ராகிம் அல் கலீபா ஆகியோர் தலைவர் பதவிக்காக போட்டியிடவுள்ளனர். (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
சட்டமாணி தெரிவு
சனி (27/2)
காலை 9.00-4.00 மணிவரை
கிராமசேவகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் தெரிவுக்கு
பிரதி சனி
12.30 5.00 மணிவரை
கிராமசேவகர் பிரிவு - II
பிரதி ஞாயிறு
2.00 5.00 மணிவரை
SLAS, SLEAS
பிரதி ஞாயிறு
9.00 4.00 மணிவரை
SLAS
பிரதி ஞாயிறு
9.00 4.00 மணிவரை
SLEAS
பிரதி ஞாயிறு
10.00 4.00 மணிவரை
சகல பரீட்சைகளுக்கும் மாலை நேர வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ் ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கி அருகில்

கட்டட வேலை ஒப்பந்தகாரர் தேவை
075 9049 415, 075 9089781, 0777428429

விசேட கருத்தரங்கு
SLAS, SLEAS
(OPEN / LIMITED)
நாவலர் கல்வி நிலையம்
0774696699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.